விலை : 20.00
பக்கங்கள் : இருபது

தலைமைத்துறைப் படிப்பகம்
... யாழ்ப்பாணம்

Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி
# Valampurii

website : www.valampurii.lk
E-mail: valampurii@yahoo.com

சங்கு 14 வள்ளுவர் ஆண்டு 2044 ஆவணி 08 சனிக்கிழமை (24.08.2013) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 248

ராம்கோ
MADRAS CEMENTS LTD
RAMCO CEMENT
ராம்கோ சீமெந்தைப் பயன்படுத்துங்கள்; உங்கள் பணத்தை மீதப்படுத்துங்கள்.

# நேரில் ஆராய்வதே எனது நிலைப்பாடு

## நாளை இலங்கை வருகிறார் நவிபிள்ளை



இலங்கை தொடர்பில் விவாதிக்கப்பட வேண்டிய விடயங்கள் பல இருக்கின்றன. சாதகமான அபிவிருத்தி குறித்து பேசப்பட வேண்டியுள்ளது. அதனால் நான் மிகவும் திறந்த மனத்துடனேயே இலங்கை செல்கிறேன்.

நேரில் சென்று பார்வையிட்ட பின்னரே எனது நிலைப் பாட்டை தெரிவிப்பேன் என ஐக்கிய நாடுகள் சபையின் மனித உரிமைகள் ஆணையாளர் நவநீதம்பிள்ளை தெரிவித்துள்ளார். (19ஆம் பக்கம் பார்க்க)

## வேட்பாளருக்கு அச்சுறுத்தல்!

(யாழ்ப்பாணம்)

ஜனநாயக கட்சியின் யாழ். மாவட்ட வேட்பாளர்களுக்கு இனம்தெரியாத நபர்களினால் அச்சுறுத்தல் விடுக்கப்பட்டதாக சுன்னாகம் பொலிஸ் நிலையத்தில் நேற்று முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

முன்னாள் இராணுவத் தளபதி சரத் பொன்சேகாவினைத் தலைவராகக் கொண்ட ஜனநாயகக் கட்சி சார்பில் வடக்கு மாகாண (20ஆம் பக்கம் பார்க்க)

## பொதுநலவாய மாநாட்டில் பாக். கலந்துகொள்ளும்

(இஸ்லாமபாத்)

கொழும்பில் எதிர்வரும் நவம்பர் மாதம் நடைபெறவுள்ள பொதுநலவாய நாடுகளின் உச்சி மாநாட்டில் பாகிஸ்தான் கலந்து கொள்ளும் என்று அந்த நாட்டின் பிரதமர் நவாஸ் ஷெரீப் தெரிவித் துள்ளார்.

கொழும்பில் நடைபெறும் பொது நலவாய நாடுகளின் உச்சி மாநாடு வெற்றிகரமாக நடைபெற பாகிஸ் தான் (19ஆம் பக்கம் பார்க்க)

## புதிய அமைச்சு உருவாக்கம்



புதிய அமைச்சின் செயலாளராக நியமிக்கப்பட்ட மேஜர் ஜெனரல் நந்த மல்லவராச்சி ஜனாதிபதி முன்னிலையில் தமது கடமைகளை நேற்று பொறுப்பேற்றார்

(கொழும்பு)

கற்றுக்கொண்ட பாடங்கள் மற்றும் நல்லிணக்க ஆணைக் குழுவின் சிபாரிசுகளுக்கு அமைய "சட்டம் மற்றும் ஒழுங்கு" எனப் படும ஒரு புதிய அமைச்சு ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவின் கீழ் உரு வாக்கப்பட்டுள்ளது .

இந்த அமைச்சின் செயலாள ராக மேஜர் ஜெனரல் நந்த மல்லவ ராச்சி நியமிக்கப்பட்டுள்ளார். இவர் முன்னர் பாதுகாப்பு படை அதிகாரி களின் பிரதானியாகவும் இந்தோ னேஷிய தூது வராகவும் இருந்தவர் ஆவார்.

ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி அரசாங்கத்தில் ஜனாதிபதி மகிந்த ராஜ பக்ஷ வசம் நேற்று வெள் ளிக்கிழமை புதிதாக உருவாக் கப்பட்ட "சட்டம் மற்றும் ஒழுங்கு" எனப்படும் புதிய அமைச்சு உட்பட 4 அமைச்சுக்கள் இருக்கின்றன. அத்துடன் பிரதமர் வசம் ஒரு அமைச்சு இருக்கின்றது.

இந்த அரசாங்கத்தில் சிரேஷ்ட அமைச்சர்கள் 10 பேர் அடங்கலாக அமைச்சரவை அந்தஸ்துள்ள 66 அமைச்சர்களும், பிரதியமைச்சர் கள் 29 பேரும் செயற்றிட்ட அமைச் சர்கள் இருவரும் அங்கம் வகிக்கின றமை குறிப்பிடத்தக்கதாகும். (செ-11)

## குளத்திலிருந்து சடலம் மீட்பு

கிளிநொச்சி அக்கராயன் குளத்திலிருந்து நேற்று வெள்ளிக் கிழமை மாலை இளம் பெண்ணொருவரின் சடலத்தை தாம் மீட்டதாக அக்கராயன் பொலிஸார் தெரிவித் தனர்.

அக்கராயன் பகுதி கரைச்சி கிராமவாசியான 33 வயதான வேலு தங்கா என்பவரின் சடலமே இவ்வாறு (19ஆம் பக்கம் பார்க்க)



## நவநீதம்பிள்ளை 'மரண தேவதை'

### இப்படிக் கூறுகிறது ஹெல உறுமய

ஐக்கிய நாடுகள் மனித உரிமை ஆணையாளர் நவநீதம்பிள்ளை இலங்கையை மனித உரிமை சிக்கலில் இருந்து காப்பாற்ற வரும் தேவதையாக சிலருக்கு தெரிய லாம். எனினும் அவர் நாட்டை தண்டனை மரத்தில் அடிக்கப் போகும் மரண தேவதையாக தமக்குத் தோன்றுவதாக ஜாதிக ஹெல உறுமயவின் மேல் மாகாண சபை உறுப்பினர் உதய கம்மன் பில தெரிவித்தார்.

கொழும்பில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற, நவநீதம்பிள்ளையின் வருகை தொடர்பிலான ஜாதிக ஹெல உறுமயவின் நிலைப்பாட்டை அறிவிக்கும் ஊடகவியலாளர் சந் திப்பில் அவர் இதனைக் கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

தனது வழக்கை தானே நடத் தக் கூடாது என்ற சட்ட ரீதியான நெறி முறையை மீறி ஐக்கிய நாடுகளின் மனித உரிமை ஆணையாளர் நவநீதம்பிள்ளை இலங்கையின் மனித உரிமைகள் பற்றி தேட வரு கிறார்.

அவரது எதிர்கால அறிக்கை களுக்கு ஊக்கத்தை கொடுப்பதாக இந்த விஜயத்தின் முடிவுகள் அமை யும். (19ஆம் பக்கம் பார்க்க)

## மாத்திரை இறுகி குழந்தை பலி

(கொழும்பு)

பனடோல் மாத்திரையின் பாதி ஒன்றரை வயது குழந்தையின் தொண்டைப் பகுதியில் அடைத்த நிலையில், வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட அந்த குழந்தை இறந்துள்ளது.

இந்தச் சம்பவம் நேற்று மதியம் சிலாபம் வைத்தியசாலையில் இடம்பெற்றது.

சிலாபம் கரவிடாகாரய பிரதே சத்தை சேர்ந்த சங்கல்ப என்ற குழந்தையே சம்பவத்தில் உயிரிழந் துள்ளது.

குழந்தைக்கு ஏற்பட்ட சுக வீனம் காரணமாக பெற்றோர் குழந் தைக்கு பனடோல் மாத்திரை யின் பாதியை கொடுத்துள்ளனர்.

குழந்தையால் அதனை விழுங்க முடியாத நிலையில் அது தொண் டையை அடைத்துள்ளது (19ஆம் பக்கம் பார்க்க)

## யாழில் கடந்த வாரம் 146 பேர் கைது!

(யாழ்ப்பாணம்)

யாழ்.மாவட்டத்தில் கடந்த வாரம் 146 பேர் கைது செய்யப் பட்டுள்ளனர் என காங்கேசன் துறை சிரேஷ்ட பொலிஸ் அத்தியட் சகர் எல்.எஸ்.பத்திநாயக்க தெரி வித்துள்ளார்.

யாழ்.மாவட்டம் மற்றும் காங் கேசன்துறை சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் பிரிவுக்குட்பட்ட பகுதி யில் தலா 73 பேர் இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளனர்.

இவர்களில் பிறருக்கு அடித்துக் காயமேற்படுத்திய 13 பேரும், சந் தேகத்தின் பேரில் 19 பேரும், பிடி யாணை பிறப்பிக்கப்பட்ட 117 பேரும், மதுபோதையில் வாகனம் செலுத் திய 17 பேரும், சட்டவிரோத சாரயம் விற்பனை செய்த 18 பேரும், திருட் டில் ஈடுபட்ட 16 பேரும், வாகன விபத்தினை ஏற்படுத்திய 03 பேரும், கொலைக் குற்றச்சாட்டில் மற்றும் மோசடியில் தலா ஒவ்வொ ருவரும், குடித்து விட்டு கலகம் ஏற்ப டுத்திய நால்வரும் , பொது இடததில கலகம் (19ஆம் பக்கம் பார்க்க)

## இராணுவப் பிடியிலிருந்த வீடுகள் நேற்று விடுவிப்பு




(யாழ்ப்பாணம்)

இலங்கை இராணுவத்தின் 513-வது படைப்பிரிவின் கட்டுப்பாட்டின் கீழிருந்த் 39 வீடுகள் மற்றும் காணிகள் இராணுவத்தின ரால் நேற்று விடுவிக்கப்பட்டு ள்ளது.

யாழ்.மாவட்டத்தில் தெல்லிப்பளை, சண்டிலிப்பாய், உடுவில், சங்கானை ஆகிய பிரதேச செயலாளர் பிரிவுகளில் இராணுவத்தினரின் கட்டுப்பாட்டின் கீழிருந்த வீடுகளும், காணிகளுமே நேற்று உத்தியோகபூர்வமாக பிரதேச செயலாளர்களிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளன. (19ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

# வடக்கு வாக்களிப்பு நிலையங்களிற்கு தென்பகுதி அதிகாரிகள் அவசியமா?

## நீதியான தேர்தலுக்கு குந்தகம் என்றார் சுரேஸ் எம்.பி

(யாழ்ப்பாணம்)

வடக்கு மாகாண சபைத் தேர்தலின் போது வாக்களிப்பு நிலையங்களில் தேர்தல் பணிகளில் ஈடுபட வென தென்பகுதி அம்பாறை மாவட்டத்திலிருந்து சிங்கள மற்றும் முஸ்லிம் அதிகாரிகளை கொண்டு வர அரசாங்கம் நடவடிக்கை மேற்கொண்டு வருவது நீதியான தேர்தலுக்கு குந்தகம் ஏற்படுத்தும் என தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் யாழ். மாவட்ட பாராளுமன்ற உறுப்பினரும் ஊடகப் பேச்சாளருமான சுரேஷ் பிறேமச்சந்திரன் தெரிவித்துள்ளார்.



யாழ். ஊடக அமையத்தில் நேற்று பிற்பகல் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின்போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார் அவர் மேலும் தெரிவிக்கையில், தேர்தல் காலங்களில் பணிகளில் ஈடுபட இங்கு போதுமான தமிழ் அரசாங்க அதிகாரிகள் உள்ளநிலையில் இந்த அரசாங்கம் அம்பாறை மாவட்டத்திலிருந்து சிங்கள மற்றும் முஸ்லிம் அரசாங்க அதிகாரிகளைப் பணியில் ஈடுபடுத்த நடவடிக்கை மேற்கொண்டு வருகின்றது.

குறிப்பாக வாக்களிப்பு நிலையங்களில் இந்த அதிகாரிகளைப் பணியில் ஈடுபடுத்த நடவடிக்கைகளை இந்த அரசாங்கம் மேற்கொண்டு வருகின்றது.

இவ்வாறு சிங்கள, முஸ்லிம் அதிகாரிகளைக் கொண்டுவந்து பணியில் அமர்த்துவது என்பது சர்ச்சையை ஏற்படுத்தும் என்பதோடு நீதியான தேர்தலுக்கும் குந்தகம் ஏற்படுத்திவிடும்.

அத்தோடு சட்ட விரோதமாக வாக்களிப்பும் இடம்பெறும் (கள்ள வாக்கு) என்ற காரணத்தினால் இங்கு தேர்தல் பணிகளில் தமிழ் அரசாங்க அதிகாரிகளை ஈடுபடுத்த வேண்டுமென தேர்தல்கள் ஆணையாளரிடம் வேண்டுகோள் விடுக்கின்றோம்.

மேலும் வடக்கு மாகாண சபைத் தேர்தலில் எப்படியாவது வெற்றி பெற்று விட வேண்டும் என்பதற்காக அரசாங்கம் சகல நடவடிக்கையிலும் ஈடுபட்டு வருகின்றது. இராணுவத்தினர் ஆளும் கட்சி வேட்பாளர்களின் வெற்றிக்காக உழைத்து வருகின்றனர். சுவரொட்டிகளை ஒட்டுவதிலும் வாக்குகளை சேகரிப்பதிலும் ஈடுபட்டு வருகின்றனர்.

எமது கட்சி வேட்பாளர்கள் அச்சுறுத்தப்படுவது தொடர்ந்து இடம்பெறுகின்றது. அதுபற்றி தேர்தல்கள் ஆணையாளரிடம் முறையிட்டும் எந்த விதப்பயனுமில்லை.

மேலும் தேர்தல் காலங்களில் இராணுவத்தினர் முகாம்களிற்கும் முடங்கியிருக்க வேண்டும். அதற்கான நடவடிக்கையினை எடுக்குமாறும் கோரிக்கை விடுத்தோம். இருப்பினும் இராணுவத்தினரை முகாமிற்குள் முடக்க ஜனாதிபதியே நடவடிக்கை எடுக்க முடியும் என தேர்தல்கள் ஆணையாளர் எமது கோரிக்கைக்கு மறுப்புத் தெரிவித்து விட்டார் என அவர் மேலும் தெரிவித்தார். செ-6)

# மின்தடை அறிவிப்பு

புதிய உயர் அழுத்த மார்க்கங்களின் கட்டமைப்பு மற்றும் பராமரிப்பு வேலைகளுக்காக இன்று சனிக்கிழமை காலை 8.30 தொடக்கம் மாலை 5.30 மணி வரை இளவாலை, மாரீசன்கூடல், விளான், அளவெட்டி ஆகிய பிரதேசங்களிலும்,

நாளை மறுதினம் காலை 8.30 தொடக்கம் 5.30 மணி வரை ஸ்ரான்லி வீதிப் பிரதேசத்திலும்.

பிற்பகல் 1.30 தொடக்கம் மாலை 5.30வரை உரும்பிராய், கோண்டாவில், மருத்துவபீடப்பிரதேசம், திருநெல்வேலிப் பிரதேசம், பட்டணப்பகுதி, யாழ். மாநகர சபைப்பகுதி, குருநகர், பாசையூர், காக்கைதீவு, மீனாட்சிபுரம், கொட்டடி, நாவாந்துறை, யாழ் பிரதான வீதி, பண்ணைப் பகுதி, புன்னாலைக்கட்டுவன், அச்செழு, ஈவினை ஆகிய இடங்களிலும் மின் விநியோகம் தடைப்பட்டிருக்குமெனயாழ்பிரதேச மின் பொறியியலாளர் தெரிவித்துள்ளார்.

# நவநீதம்பிள்ளையின் விஜயத்தால் குழப்பங்கள் உருவாகக்கூடாது

## எதிர்ப்பு அரசியல் அழிவைத்தான் தரும் - டக்ளஸ்



ஐக்கிய நாடுகளின் மனித உரிமைகள் ஆணைக்குழுவின் ஆணையாளர் நவநீதம்பிள்ளை இங்கு வரலாம் போகலாம் ஆனால் குழப்பங்களை ஏற்படுத்திவிடக் கூடாது எனவும் எதிர்ப்பு அரசியல் முள்ளிவாய்க்காலுக்குத்தான் கொண்டு செல்லும் எனவும் அமைச்சர் கே. என். டக்ளஸ் தேவானந்தா தெரிவித்துள்ளார்.

513 ஆவது படைப் பிரிவின் கட்டுப்பாட்டின் கீழ் இருந்த 39 வீடுகளும் காணிகளும் அதன் உரிமையாளர்களிடம் நேற்று இராணுவத்தினரால் கையளிக்கப்பட்டது.

யாழ். சுன்னாகப் பகுதியில் நேற்று மாலை இடம்பெற்ற இந்த நிகழ்வில் கலந்துகொண்ட அமைச்சர் மேலும் தெரிவிக்கையில்,

யாழ். மாவட்டம் உட்பட வடக்கு மாகாணத்தில் இராணுவத்தின் கட்டுப்பாட்டின் கீழ் இருந்த வீடுகள் மற்றும் காணிகள் படிப்படியாக விடுவிக்கப்பட்டு வருகின்றன. இந்த நிகழ்வுகள் தொடர்ந்து இடம்பெறும். பொது மக்களின் காணிகள், வீடுகள் மற்றும் அவர்களின் சொத்துக்கள் அவர்களிடமே மீண்டும் கையளிக்கப்படும்.

தென்னிலங்கை மக்களைப் போன்று வட இலங்கையைச் சேர்ந்தவர்களும் சுதந்திரமாக வாழவேண்டும் என்பதில் ஜனாதிபதி உறுதியாக உள்ளார்.

மேலும் ஐக்கிய நாடுகளின் மனித உரிமை ஆணைக்குழுவின் ஆணையாளர் நவநீதம் பிள்ளை இங்கு வரலாம் போகலாம் யாரை வேண்டுமானாலும் சந்திக்கலாம். ஆனால் இங்கு குழப்பங்களை ஏற்படுத்தி பிரச்சினைகளை உருவாக்கிவிடக் கூடாது.

அத்தோடு நவநீதம்பிள்ளையை சந்திப்பவர்களால் மக்களின் பிரச்சினைக்கு தீர்வு காண முடியாது.

எமது மக்களின் பிரச்சினைகளுக்கு எம்மால்தான் தீர்வு காணமுடியும். எமது பிரச்சினைகளுக்கு நாமே தீர்வு காண வேண்டும். நவநீதம்பிள்ளையோ சர்வதேசமோ எமது மக்களின் பிரச்சினைகளுக்கு தீர்வைப் பெற்றுத் தரப்போவதில்லை.

எதிர்ப்பு அரசியல் மூலம் தீர்வு காணமுடியும் என்று கூறி எமது மக்களை முள்ளிவாய்க்கால் வரை கொண்டு சென்றனர். மீண்டும் எதிர்ப்பு அரசியல் நடத்தி தமிழ் மக்களை முள்ளிவாய்க்காலுக்கு கொண்டு செல்ல அனுமதிக்க மாட்டோம்.

அத்தோடு முள்ளிவாய்க்காலில் தமிழ் மக்களை பாதுகாத்தது இலங்கை அரசாங்கமும் அதன் கீழ் இயங்கும் இராணுவத்தினருமே. நவநீதம்பிள்ளையோ சர்வதேசங்களோ எம் மக்களை பாதுகாக்கவில்லை எனவும் அவர் மேலும் தெரிவித்தார். (செ-6)

# தபால்மூல வாக்களிப்பிற்கான வாக்காளர் அட்டைகள் விநியோகம்

(யாழ்ப்பாணம்)

தபால்மூலம் வாக்களிப்புக்கான வாக்காளர் அட்டைகள் தேர்தல்கள் திணைக்களத்தினால் அஞ்சல் திணைக்களங்களுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளதாக தேர்தல்கள் திணைக்களத்தின் வட மாகாண பிரதித்தேர்தல் ஆணையாளரும் யாழ். மாவட்ட உதவித்தேர்தல் ஆணையாளருமான சிவசுதன் அச்சுதன் தெரிவித்துள்ளார்.

இந்தப் பணிகள் நேற்று முன்தினம் தொடக்கம் மேற்கொள்ளப்பட்டு வருவதாகவும் எதிர்வரும் செப்ரெம்பர் மாதம் 9-ம், 10-ம் திகதிகளில் தபால் மூலம் வாக்களிப்பு இடம் பெறவுள்ளதாகவும் தெரிவித்தார்.

வடக்கு மாகாண சபைத் தேர்தல் தபால்மூலம் வாக்களிக்க யாழ். மாவட்டத்தில் 9 ஆயிரம் பேருக்கு மேல் வாக்களிக்கத் தகுதி பெற்றுள்ளனர். எனவும் அவர் மேலும் தெரிவித்தார் .(செ-6)

# பிறந்துவிட்ட புதுயுகத்தில் சிறுகதைத் தொகுதி நாளை வெளியீடு

(யாழ்ப்பாணம்)

மூத்த எழுத்தாளர் திருமதி சந்திரா தனபாலசிங்கம் எழுதிய பிறந்துவிட்ட புதுயுகத்தில் என்ற சிறுகதைத் தொகுதி நூல் வெளியீட்டு விழா நாளை பிற்பகல் 3 மணிக்கு மானிப்பாய் பிரதேச சபை கலாசார மண்டபத்தில் இடம்பெறும்.

யாழ்.பல்கலைக்கழக தமிழ்த்துறை விரிவுரையாளர் ஈ.குமரன் தலைமையில் நடைபெறும் இந்நிகழ்வில் ரூபாவாஹினிக் கூட்டுத்தாபனத்தின் ஓய்வுநிலை தமிழ் நிகழ்ச்சிப் பணிப்பாளர் சி.வன்னியகுலம் பிரதம விருந்தினராகவும் ஓய்வு நிலை அதிபர் அ.பஞ்சலிங்கம் சிறப்பு விருந்தினராகவும் காரைநகர் பிரதேச செயலர் திருமதி தேவந்தினி பாபு கௌரவ விருந்தினராகவும் கலந்து கொள்வர்.

நூல் வெளியீட்டு உரையை யாழ்.பல்கலைக்கழக ஆங்கில சிரேஷ்ட விரிவுரையாளர் கலாநிதி கந்தையா ஸ்ரீ கணேசன் நிகழ்த்த, நூல் மதிப்பீட்டு உரையை வலம்புரியின் பிரதம ஆசிரியர் நிகழ்த்துவார்.

நூல் ஆசிரியர் திருமதி சந்திரா தனபாலசிங்கம் ஏற்புரை வழங்குவார். (ந)


## பிள்ளையார் இன்

சனி, ஞாயிறு தினங்களில் புஃவே (Buffet) முறையில் இந்திய சமையற்கலை வல்லுநர்களால் தயாரிக்கப்பட்ட உணவு வகைகள் வழங்கப்படும். 6 - 10 pm - 250/=

தினமும் **12 மணிமுதல் 3 மணிவரை** மிகச் சிறந்த சைவ, அசைவ உணவு வகைகள் வழங்கப்படுகின்றன.

**சைவ உணவு: 150/-** **அசைவ உணவு 180/-**

தொடர்புகளுக்கு: இல.31, மானிப்பாய் வீதி, யாழ்ப்பாணம். 021 222 2829

(சி-4427)




## காணி தேவை

கிளிநொச்சியில் கரடிப்போக்குச் சந்திக்கும் கிளிநொச்சி பொது வைத்தியசாலைக்குமிடையில் 4 பரப்பு அல்லது அதற்கு கூடுதலான காணி தேவை.

ஏ-9 வீதியில் இருந்து 2-ம், 3-ம் காணியும் கட்டிடம் உள்ள காணியும் ஏற்றுக் கொள்ளப்படும்.

விற்பனை செய்யவுள்ளோர்.

தொலைபேசி :

**0776341216**

எனும் தொலைபேசி இலக்கத்துடன் தொடர்பு கொள்ளவும்.

(C-4448)




**வட்டக்கச்சி - கிளிநொச்சி**

**ஸ்ரீ ரங்கநாதப் பெருமாள் கோவில்**

**பிரமோற்சவம் - 2013**

இன்று வட்டக்கச்சி ஸ்ரீ ரங்கநாதப் பெருமாள் கோவிலில் 5-ம் திருவிழா. இன்று எம் பெருமான் அழகிய மணவாளராக ஆண்டாள் நாச்சியாரோடு காட்சி தரும் அற்புதத் திருநாள். காலை 9 மணிக்கு பகல் பூசை ஆரம்பமாகி 12 மணிக்கு நிறைவுறும். மாலைத் திருவிழா மாலை 5 மணிக்கு ஆரம்பமாகி இரவு 8 மணிக்கு நிறைவுறும்.

(C-4429) —பரிபாலன சபையினர்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நாட்டின் எதிர்காலத்தை கருத்தில் கொண்டு ஊடகங்கள் பொறுப்புடன் செயற்படவேண்டும்

## கூட்டுப்படைகளின் தளபதி ஜகத் ஜயசூரிய

(கொழும்பு)

**நாட்டின் தேசிய பாதுகாப்பு தொடர்பில் செய்திகள் எழுதும் போதும் தகவல்களை வெளியிடும் போதும் ஊடகவியலாளர்கள் மிகவும் பொறுப்புடனும் கவனமாகவும் செயற்பட வேண்டும் என்று பாதுகாப்புப் படைகளின் பிரதம அதிகாரி ஜெனரல் ஜகத் ஜயசூரிய கேட்டுக் கொண்டார்.**

நாட்டின் தேசிய பாதுகாப்பு மற்றும் தேசிய நலனை கருத்திற் கொண்டே இந்த வேண்டுகோளை விடுப்பதாக அவர் கூறினார்.

கொழும்பிலுள்ள பண்டாரநாயக்க ஞாபகார்த்த சர்வதேச மாநாட்டு மண்டபத்திலுள்ள பாதுகாப்பு படைகளின் பிரதம அதிகாரி அலுவலகத்தில் இடம்பெற்ற சந்திப்பில் கலந்து கொண்ட போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டார். அவர் தொடர்ந்து கூறுகையில்,

நாட்டில் அடுத்து வரும் சில மாதங்களில் பல்வேறு முக்கிய நிகழ்வுகள் இடம்பெறவுள்ளன. அவற்றில் பொது நலவாய நாடுகளின் தலைவர்களின் மாநாடு, மனித உரிமைகள் ஆணைக்குழுவின் ஆணையாளர் நாயகம் நவநீதம்பிள்ளையின் இலங்கைக்கான வருகை, விசேடமாக வடக்கில் நடைபெறவுள்ள வடமாகாண தேர்தல் என்பனவாகும்.

இந்நிலையில் ஏதாவது ஒரு பிரச்சினை ஏற்படுவதை பலர் எதிர்பார்த்துக் கொண்டிருக்கின்றார்கள். இதனை சந்தர்ப்பமாக பயன்படுத்தி நாட்டில் தற்பொழுது காணப்படும் சட்டத்தையும் ஒழுங்கையும் சீர்குலைக்க தீய சக்திகள் முயற்சிக்கின்றன.

புலிகள் இராணுவ ரீதியில் தோற்கடிக்கப்பட்ட போதிலும் அவர்களது ஆதரவாளர்கள், புலம்பெயர் அமைப்புக்கள் இன்றும் எமக்கு எதிராக செயற்பட்டு வருகின்றன.

யுத்தத்தை முடிவுக்கு கொண்டு வர இராணுவத்தினர் மனிதாபிமான நடவடிக்கைகளை முன்னெடுத்த அதேசமயம், ஊடகங்களும் பாரிய ஒத்துழைப்பையும் நடவடிக்கையையும் முன்னெடுத்தன. எனவே, நாட்டின் நலனை எதிர்காலத்தை கருத்திற் கொண்டு தொடர்ந்தும் ஊடகவியலாளர்கள் ஒத்துழைக்க வேண்டும் என்றும் அவர் கேட்டுக் கொண்டார். (அ-2)

## தகவல் தொழில்நுட்ப கட்டட திறப்பு விழா

இணுவில் பொதுநூலகம், சனசமூக நிலையத்தில் திரு.திருமதி இராசையா- இராசம்மா ஞாபகார்த்த அமைக்கப்பட்ட தகவல் தொழில் நுட்பமைய கட்டடத் திறப்பு விழா இன்று சனிக்கிழமை மாலை 7 மணிக்கு சொ.ஹரிசங்கர் தலைமையில் நடைபெறும். இந்நிகழ்வுக்கு பிரதம விருந்தினராக யாழ். மாவட்ட அரசாங்க அதிபர் சுந்தரம் அருமை நாயகம் கலந்துகொண்டு சிறப்பிக்கவுள்ளார். சிறப்பு விருந்தினர்களாக வலி.தெற்கு பிரதேச செயலர் மு.நந்தகோபாலன், வலிகாமம் கல்வி வலய கல்விப் பணிப்பாளர் எஸ். சந்திர ராஜா ஆகியோர் கலந்துகொள்ளவுள்ளனர்.

கௌரவ விருந்தினராக யா/ இணுவில் இந்துக் கல்லூரி அதிபர் மு.செல்வஸ்தான், யா/ இணுவில் மத்திய கல்லூரி அதிபர் நா.சிவநேசன், யா/இராமநாதன் கல்லூரி அதிபர் திருமதி க.கிருஷ்ணப்பிள்ளை ஆகியோர் கலந்து கொள்ளஉள்ளனர். இந்நிகழ்வில் நூலின் வெளியீட்டுரையை யாழ்.பல்கலைக்கழக தமிழ்த்துறை சிரேஷ்ட விரிவுரையாளர் ஈ.குமரன் ஆற்ற நூலின் முதற் பிரதியை அண்ணா தொழிலக போசகர் சு.பொ. நடராசா பெறுவார். (அ-2)


**வடமாகாண சபைத் தேர்தல் 2013**

**கிளிநொச்சி மாவட்டம்**



கரைச்சி கிராம சபைத் தலைவராகவும் கிளிநொச்சி பட்டண சபையின் முதல் தலைவராகவும் இருந்த...

**வீ.ஆனந்தசங்கரி**

தமிழ்த்தேசியக் கூட்டமைப்பு (இலங்கைத் தமிழரசுக் கட்சி)

X 2

(CE-4910)


# நுண்கலை துறையினரின் ஏற்பாட்டில் கலந்துரையாடல்

(யாழ்ப்பாணம்)

நுண்கலைத் துறையினரின் ஏற்பாட்டில் நாளை மறுதினம் திங்கட்கிழமை பிற்பகல் 2 மணிக்கு தஞ்சைப் பல்கலைக்கழக நாடகத் துறை முன்னாள் தலைவரும் பேராசிரியருமான மு.இராமசாமியுடனான கலந்துரையாடல் ஒன்று யாழ்.பல்கலைக்கழக புதிய கலைப்பீட கட்டடத் தொகுதியில் நடைபெறவுள்ளது.

எனவே, ஆர்வமுள்ள அனைவரும் கலந்துகொண்டு பயன்பெறுமாறு யாழ்.பல்கலைக்கழக நுண்கலைத்துறைத் தலைவர் அறிவித்துள்ளார். (அ-2)

# வடிகான் சுத்திகரிப்பு தொடர்பில் குறைநிறைகளை முறையிடலாம்

## இணைப்பாளர் கே.வி.குகேந்திரன் தெரிவிப்பு

(யாழ்ப்பாணம்)

யாழ்.மாநகர சபை எல்லைக்குட்பட்ட பகுதியில் மேற்கொள்ளப்படவேண்டிய வீதி அபிவிருத்திப் பணிகள் மற்றும் வடிகான் சுத்திகரிப்பு பணிகள் மற்றும் குறைபாடுகள் குறித்து பொதுமக்கள் எழுத்து மூலம் அறிவித்தால் உடனடியாக நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவின் இணைப்பாளர் கே.வி.குகேந்திரன் (வி.கே.ஜெகன்) தெரிவித்துள்ளார்.

யாழ். மாநகர சபையின் ஆட்சிக்காலம் மேலும் ஒருவருடத்திற்கு நீடிக்கப்பட்டுள்ள நிலையில் யாழ். மாநகர சபை எல்லைக்குட்பட்ட பகுதியில் வடிகான்கள் சுத்திகரித்து புனரமைக்கும் பணிகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

இதன் தொடர்ச்சியாக வீதிகள் புனரமைப்பு பணிகளையும் மேற்கொள்ளத் திட்டமிடப்பட்டுள்ளது. அத்தோடு கிராமப் புறங்களில் காணப்படுகின்ற குறைபாடுகளையும் யாழ். மாநகர சபை நிவர்த்தி செய்ய நடவடிக்கை மேற்கொண்டு வருகின்றது.

எனவே, பொதுமக்கள் தங்கள் பிரதேசங்களிலுள்ள குறைபாடுகளை எழுத்து மூலமாக ஈழமக்கள் ஜனநாயகக் கட்சியின் யாழ். அலுவலகத்தில் ஒப்படைக்குமிடத்து உரிய நடவடிக்கையினை மேற்கொள்ள முடியும் என அவர் மேலும் தெரிவித்தார். (அ-6)


**வடக்கு மாகாணசபைத் தேர்தல் - 2013**

**தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு**

**மாபெரும் தேர்தல் பரப்புரைக் கூட்டம்**
**வேட்பாளர் அறிமுக நிகழ்ச்சி**

இடம் : யாழ்.வீரசிங்கம் மண்டபம்
காலம் : 25.08.2013 ஞாயிறு பி.ப 5.00 மணி
தலைமை : திரு.மாவை.சோ.சேனாதிராசா பா.உ

**சிறப்பு உரைகள்**

- திரு.இரா.சம்பந்தன் பா.உ
- நீதியரசர். க.வி.விக்னேஸ்வரன்
- திரு.தர்மலிங்கம் சித்தார்த்தன்
- திரு. வீ. ஆனந்தசங்கரி
- திரு.செல்வம் அடைக்கலநாதன் பா.உ
- திரு.எம்.ஏ.சுமந்திரன் பா.உ
- திரு.ந.சிறீகாந்தா
- ஜனாப். ஐயுப் அஸ்மின் (நளீமி)
- திரு.சுரேஸ் பிரேமச்சந்திரன் பா.உ
- திரு.பொன். செல்வராசா பா.உ

(010)

மற்றும் வேட்பாளர் அறிமுக உரைகளும் அதிதிகள் உரைகளும் இடம்பெறும். அலை அலையாய் அணிதிரண்டு வருமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

**அதேபோல் செப்ரெம்பர் 21 அதிகாலையில் எழுந்து வந்து தமிழின விடிவுக்காய் எழுதுகோல் எடுத்து வாக்களித்து வரலாறு படையுங்கள்.**

அழிந்துபோன எம் தேசத்தையும் வீழ்ந்து போன எம் சமுதாயத்தையும் மீளக் கட்டியெழுப்புவோம்.
எங்கள் வீட்டுக்கு நாம் போவோம், எம் மண்ணில் நாம் ஆளுவோம்.
வாழ்வுரிமைக்காய் போராடுவோம். சுதந்திரம் எம் பிறப்புரிமை, எம் சுயநிர்ணய உரிமையை நிலை நாட்டுவோம்.

**இலங்கைத் தமிழரசுக் கட்சி** X

மாவை.எம்.சேனாதிராசா
பொதுச் செயலாளர், இலங்கைத் தமிழரசுக் கட்சி

ஒருங்கிணைப்புக்குழு,
தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு.



**வடக்கு மாகாணசபை தேர்தல் 2013**

**யாழ்.மாவட்டம்**

தமிழ் இன அழிப்பை செய்தோரைத் தோற்கடிப்போம்!
தமிழ் இனத்திற்கு நீதி கிடைக்க வாக்களிப்போம்!!
தமிழ்த்தேசியக் கூட்டமைப்பு வேட்பாளர்

**எம்.கே.சிவாஜிலிங்கம்**

முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர்
(இலங்கை தமிழரசுக் கட்சி)



9

**இலங்கைத் தமிழரசுக் கட்சி** X

| | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| 1 | 2 | 3 | 4 | 5 | 6 | 7 | 8 | 9 | 10 |
| 11 | 12 | 13 | 14 | 15 | 16 | 17 | 18 | 19 | |


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இன்று ஒரு தகவல்

## தாவும் மனிதர்கள்

உண்மையும் நேர்மையும் உயர்வதற்கு வழிகள். அதை விட்டு விட்டு உட்கார்ந்த இடத்தில் இருந்து கொண்டே உயரப்போக வேண்டும் என்று நினைக்கக்கூடாது.

அதேபோல் செய்யும் தொழிலே தெய்வம். எந்தத் தொழிலைச் செய்தாலும் அந்தத் தொழிலுக்குரிய பெருமையைப் புரிந்து கொண்டு அதில் ஈடுபட வேண்டும்.

அதை விட்டு என்ன பிழைப்பு இது. இந்த தொழிலை மனுஷன் செய்வானா? என்று சொல்லிக் கொண்டே அந்தத் தொழிலை தொடர்ந்து செய்பவர்கள் நம்மில் பலருண்டு.

எனக்கு வேண்டப்பட்ட நண்பர் ஒருவரை சந்தித்தேன். அவர் ஒரு கதை சொன்னார். இந்தக் கருத்துக்கு அந்தக் கதை பொருத்தமாக இருக்கும்.

அதாவது ஒரு பெரிய மலைப்பகுதி. அந்த மலையடி வாரத்தில் ஒரு சிற்பி உட்கார்ந்து சிலைவடித்துக் கொண்டிருந்தான்.

கையில் ஒரு சின்ன உளியை வைத்துக் கொண்டு ஒரு பெரிய கருங்கல் பாறையை கொஞ்சம் கொஞ்சமாக உடைத்துக் கொண்டிருந்தான்.

சிற்பம் செய்வதற்கு எல்லோராலும் முடியுமா? அது எப்பேற்பட்ட தொழில்.

அந்த தொழில் மூலம் சிற்பிக்கு மனநிறைவு ஏற்படவில்லை.

வெய்யிலில் இருந்து வேலை செய்வது மிகவும் கஷ்டமாக இருந்தது. சூரியன் சுட்டெரித்துக் கொண்டிருந்தான். சிற்பியாக இருப்பதால் தானே சூரியன் கடுமையான வெய்யிலை நம்மீது பாய்ச்சுகிறான். நாம் அந்த சூரியனாக இருந்து விட்டால் கஷ்டமே இராது என்று நினைத்தான்.

உடனே அவனது எண்ணம் நிறைவேறியது. இயற்கை அந்த சிற்பியை ஒரு சூரியனாக மாற்றி விட்டது. சிற்பி சூரியனாக மாறிவிட்டான். இந்த உலகத்தில் நம்மைவிட வலிமையுடையவன் யாரும் கிடையாது என்று நினைத்தான். இந்த நேரத்தில் மேகம் வந்து சூரியனை மறைத்துவிட்டது.

இப்பொழுது சிற்பி நினைத்தான். என்னையே மேகம் மறைக்கிறதென்றால் அது என்னைவிட பெரிய ஆளாகத் தான் இருக்க வேண்டும். அதனால் மேகமாக இருக்க வேண்டும் என்று நினைத்தான்.

இயற்கை அவனை ஒரு மேகமாக மாற்றிவிட்டது. மேகமாக மாறி வான வீதியால் உலா வந்து கொண்டிருந்த போது எதிரில் பெரியமலைகள் போகும் வழியை அடைத்துக் கொண்டு நின்றது. அதைத் தாண்டிப்போக முடியவில்லை. நாம் மேகமாக இருந்து பயனில்லை. மலையாக இருக்க வேண்டும். அது தான் பெருமை என்று நினைத்து மேகம்.

உடனே மேகமாக இருந்த சிற்பி மலையாக மாறிவிட்டான். இனிமேல் எந்த கஷ்டமும் இல்ல்ல என்று நினைத்தது மலை. இப்படி நினைத்துக் கொண்டிருந்த போது சிற்பி ஒருவன் மலையை உடைத்து சிற்பம் செய்து கொண்டிருந்தான்.

மலையையே ஒருவன் உடைக்கிறான் என்றால் அவன் எப்படிப்பட்ட வலிமையுடைவனாக இருக்க வேண்டும். இனிமேல் மலையாக இருந்து பிரயோசனமில்லை. மனிதனாக மாற வேண்டும் என்று நினைத்தது மலை.

உடனே மலை மனிதனாக மாறியது. மறுபடியும் பழைய நிலைமைக்கு வந்து விட்டான் அந்த ஆள்.

இதிலிருந்து விளங்கிக் கொள்வது என்னவெனில் "தன்னுடைய உண்மையான பலம் தெரியாமல் தாவித்தாவி தடுமாறிக் கொண்டிருக்கிறான் மனிதன்" என்பது தான்.

இனிமேலாவது அதைப் புரிந்து கொள்ள வேண்டும். ஒரு குடும்பத் தலைவருக்கு விபரீதமான ஆசை. அதாவது ஒரு நாள் முழுவதும் சேலை கட்டிக் கொண்டு மனைவி செய்யும் வீட்டு வேலைகள், சமையல் எல்லாம் செய்ய வேண்டும். மனைவியை ஆண் வேடம் போட்டு அலுவலகத்துக்கு அனுப்ப வேண்டும். இது தான் அந்த ஆசை. அதே மாதிரி செய்து விட்டார். பெண் வேடத்தில் சமயல் செய்து கொண்டிருந்த போது இருட்டி விட்டது. யாரோ கதவைத்தட்டும் சத்தம் கேட்டது.

ஓடிப்போய் திறந்தார். பக்கத்து வீட்டு அம்மா ஏதோ வாங்குவதற்கு வந்தார். இவர் பயந்து போய் "கமலா அம்மா... நான் சுசிலா இல்லை. சுசிலாவின் புருஷன். சும்மா ஒரு சேஞ்சுக்காக!" என்றார்.

உடனே அந்த அம்மா "பயப்படாதே நானும் கமலா இல்லை கமலாவின் புருஷன். இதுவும் ஒரு சேஞ்சுக்குத்தான்" என்றார்.

*தென்கச்சி கோ. சுவாமிநாதன்*

# தெல்லிப்பழை பிரதேசத்தில் நடமாடும் சேவை திங்களன்று

வலிகாமம் வடக்கு தெல்லிப்பழை பிரதேசசெயலகத்தில்கபேநிறுவனத்தின் அனுசரணையுடன் தேசிய அடையாள அட்டையினைப் பெற்றுக் கொள்வதற்கான இலவசநடமாடும்சேவையொன்று நாளை மறுதினம் திங்கட்கிழமை, மறு நாள் செவ்வாய்க்கிழமை ஆகிய நாட்களில் காலை 8.30 மணி தொடக்கம் பிரதேச செயலக மாநாட்டு மண்டபத்தில்நடைபெறுமெனதெல்லிப் பழை வலிகாமம் வடக்கு பிரதேச செயலாளர் அறிவித்துள்ளார்.

ஜே/212 மல்லாகம் வடக்கு, ஜே/213 மல்லாகம் மத்தி, ஜே/214 மல்லாகம் வடக்கு, ஜே/215 அளவெட்டி வடக்கு, ஜே/216 அளவெட்டி மத்தி, ஜே/217 அளவெட்டி கிழக்கு, ஜே/218 கணேஸ்வரம், ஜே/ 219 அளவெட்டி தெற்கு, ஜே/ 220 அளவெட்டி மேற்கு, ஜே/221 இளவாலை வடக்கு, ஜே/222 இளவாலை வட மேற்கு, ஜே/223 வித்தகபுரம், ஜே/ 224 பன்னாலை, ஜே/225 கொல்லன்கலட்டி, ஜே/226 நகுலேஸ்வரம், ஜே/229 துர்க்காபுரம், ஜே/230 தந்தை செல்வாபுரம், ஜே/231 மாவிட்டபுரம், ஜே/232 மாவிட்டபுரம் தெற்கு ஆகிய கிராம சேவையாளர் பிரிவுகளுக்கும் மறுநாள் செவ்வாய்க்கிழமை ஜே/233 காங்கேசன்துறை மேற்கு, ஜே/234 காங்கேசன்துறை மத்தி, ஜே/235 காங்கேசன்துறை தெற்கு, ஜே/236 பளை வீமன்காமம் வடக்கு, ஜே/237 பளை வீமன்காமம் தெற்கு, ஜே/238 கட்டுவன், ஜே/239 கட்டுவன் மேற்கு, ஜே/240 தென்மயிலை, ஜே/241 வறுத்தலைவிளான், ஜே/242 குரும்பசிட்டி, ஜே/243 குரும்பசிட்டி கிழக்கு, ஜே/ 244 வசாவிளான் கிழக்கு, ஜே/245 வசாவிளான் மேற்கு, ஜே/246 மயிலிட்டி வடக்கு, ஜே/247 தையிட்டி கிழக்கு, ஜே/248 மயிலிட்டி துறை தெற்கு, ஜே/249 தையிட்டி வடக்கு, ஜே/250 தையிட்டி தெற்கு, ஜே/251 மயிலிட்டித் துறை வடக்கு, ஜே/252 பலாலி தெற்கு, ஜே/253 பலாலி கிழக்கு, ஜே/254 பலாலி வடக்கு, ஜே/255 பலாலி வடமேற்கு, ஜே/256 பலாலி மேற்கு ஆகிய கிராம சேவையாளர் பிரிவுகளுக்கும் தனித்தனியே நடைபெறுமென அவர் குறிப்பிட்டுள்ளார்.

எனவே வலிகாமம் வடக்கு பிரதேச செயலக பிரிவினைச் சேர்ந்தவர்களில் இதுவரை காலமும் தமது தேசிய அடையாள அட்டையினை பெற்றுக்கொள்ள தவறியிருப்பின் அல்லது தொலைத்திருப்பின் மேற்படி சேவையில் பிரதி அடையாள அட்டையினை பெற்றுக் கொள்ளலாம்.

அத்துடன் புதுப்பிக்க வேண்டியிருப்பின் இவ் இலவச நடமாடும் சேவையில் கலந்து கொண்டு தம் தேவையினை நிறைவேற்றிக் கொள்ளலாம். இப் பிரதேச செயலக பிரிவிலிருந்து இடம்பெயர்ந்து வேறிடங்களில் வசித்து வரும் பொது மக்களும் உரிய திகதிகளில் கலந்து கொண்டு பயன்பெறுமாறு அவர் கேட்டுள்ளார். (அ-2)

# இராணுவத்தினரின் வருடாந்த பாதுகாப்பு கருத்தரங்கு

இலங்கை இராணுவம் ஆண்டுதோறும் நடத்தி வரும் பாதுகாப்புக் கருத்தரங்கு எதிர்வரும் செப்டெம்பர் மாதம் 3 ஆம் திகதி தொடக்கம் 5 ஆம் திகதி வரை தொடர்ந்து கொழும்பு கலதாரி விடுதியில் நடைபெறவுள்ளதாக இணையத் தளங்கள் செய்தி வெளியிட்டுள்ளன. அச் செய்தி குறிப்பில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளவை வருமாறு,

போருக்குப் பிந்திய இலங்கை சவால்களும் பிராந்திய உறுதிப் பாடும் என்ற தொனிப்பொருளில் இக் கருத்தரங்கு நடத்தப்படவுள்ளது. இதன் போது பிராந்திய மற்றும் பூகோள விவகாரங்கள் குறித்து பரந்தளவிலான கலந்துரையாடல்களும் கருத்துப் பகிர்வுகளும் இடம் பெறவுள்ளன.

அத்துடன் போருக்குப் பிந்திய மீள்கட்டுமானம், சமூக ஒருங்கிணைப்பு, நல்லிணக்கம், பிராந்திய உறுதிப்பாடு மற்றும் பிராந்திய பூகோள பாதுகாப்பு உறுதிப்பாட்டை வலுப்படுத்திக் கொள்வதற்கான சாத்தியப் பாடுகள் குறித்து இந்தக் கருத்தரங்கில் முக்கிய கவனம் செலுத்தப்படும். இந்தக் கருத்தரங்கு பங்கேற்பாக 22 நாடுகளின் பிரதிநிதிகள் வருகை தருவதாக உறுதிப்படுத்தியுள்ளனர்.

மேலும் இந்தியாவிலும் கொழும்பிலும் உள்ள வெளிநாட்டுக் தூதரகங்களினது பாதுகாப்பு ஆலோசகர்களும் இலங்கைத் தூதரகங்களில் பணியாற்றும் இராஜதந்திரிகளும் அழைக்கப்பட்டுள்ளனர். இக் கருத்தரங்கில் சீனா, பங்களாதேஷ், ஜேர்மனி, இந்தியா, பாகிஸ்தான், வியட்நாம் நாடுகளைச் சேர்ந்த எட்டு பேச்சாளர்கள் உரையாற்றவுள்ளனர். இந்த ஆண்டு மாநாட்டில் 22 நாடுகளே பங்கேற்கவுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

மனித உரிமை மீறல்களில் ஈடுபட்ட இலங்கை இராணுவத்தின் பாதுகாப்புக் கருத்தரங்கை புறக்கணிக்க வேண்டும் என்று அனைத்துலக மனித உரிமை அமைப்புகள் கடந்த ஆண்டுகளில் பெரும் பரப்புரைகளை முன்னெடுத்திருந்ததாக தெரியவருகின்றது.

இந்த மாநாட்டுக்கான பயண, தங்குமிட, உணவு மற்றும் சுற்றுலா என அனைத்து செலவுகளையும் இலங்கை இராணுவமே பொறுப்பேற்றுள்ள நிலையிலும் குறைந்தளவு நாடுகளே இம்முறை பிரதிநிதிகளை அனுப்ப முன்வந்துள்ளதாகவும் குறிப்பிடப்படுகின்றது. (அ-2)

# சந்தைகளில் நேற்றைய விலை விபரம்

| மரக்கறி வகைகள் | நெல்லியடி | திருநெல்வேலி | கிளிநொச்சி |
|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 60 | 60 | 40 |
| உருளைக்கிழங்கு | 90 | 80 | 80 |
| பச்சைமிளகாய் | 60 | 80 | 100 |
| தக்காளி | 60 | 60 | 80 |
| மரவள்ளிக்கிழங்கு | 40 | 60 | 50 |
| கோவா | 60 | 50 | 100 |
| கரட் | 80 | 90 | 120 |
| பூசணி | 25 | 40 | 40 |
| புடோல் | 30 | 40 | 40 |
| வாழைக்காய் | 70 | 50 | 60 |
| சின்ன வெங்காயம் | 160 | 140 | 160 |
| பெரிய வெங்காயம் | 140 | 100 | 160 |
| பாகற்காய் | 60 | 60 | 80 |
| வெண்டிக்காய் | 40 | 50 | 40 |
| கருணைக் கிழங்கு | 100 | 80 | 80 |
| பயற்றங்காய் | 120 | 150 | 80 |
| லீக்ஸ் | 80 | 120 | 120 |
| பீற்றூட் | 20 | 30 | 40 |
| கறிமிளகாய் | 60 | 50 | 60 |
| முருங்கைக்காய் | 40 | 80 | 120 |
| போஞ்சி | — | 140 | 200 |
| கத்தரித்தம்புள்ள | 20 | — | — |
| கீரை (பிடி) | 10 | 20 | 30 |
| தேசிக்காய் | 350 | 220 | 300 |
| தேங்காய் (ஒன்று) | 50 | 50 | 30-40 |
| இராசவள்ளி | 100 | 80 | 120 |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இராசி பலன்

24.08.2013
(ஆவணி 08, சனிக்கிழமை)
சூரிய உதயம் காலை 6.04 மணிக்கு
சதுர்த்தி பின்னிரவு 3.44 மணிவரை
உத்தரட்டாதி முற்பகல் 11.49 மணிவரை
இராகுகாலம் 9.05-10.35 மணிவரை
சுபநேரம் 3.05-4.35 மணிவரை
சங்கடகர கணபதி விரதம்

**மேடம்** வழிபாட்டால் மகத்துவம் காண வேண்டிய நாள், ஆடம்பர பொருட்களில் நாட்டம் காட்டுவீர்கள், தேகாரோக்கியத்தில் கவனம் தேவை, வேலைச்சுமை கூடும்.

**இடபம்** செல்வாக்கு மேலோங்கும் நாள், புதிய பொருட்சேர்க்கையுண்டு, மனதில் இனம் புரியாத சந்தோசம் குடிகொள்ளும், உறவினர் வருகையுண்டு.

**மிதுனம்** மனதிற்கினிய சம்பவங்கள் நடைபெறும் நாள், கொள்கைப் பிடிப்போடு செயற்படுவீர்கள், நண்பர்கள் மூலம் உதவிகள் கிடைக்கலாம், முயற்சிகள் கைகூடும்.

**கடகம்** மறதியால் விட்டுப் போன காரியங்களை இன்று செய்து முடிப்பீர்கள், மனதில் உற்சாகமும் மகிழ்ச்சியும் அதிகரிக்கும், சுப நிகழ்வுகளில் கலந்து கொள்ளும் வாய்ப்புண்டு.

**சிங்கம்** பணத் தேவைகள் கடைசி நேரத்தில் பூர்த்தியாகும், வாகன பழுதுச் செலவுகள் அதிகரிக்கும், உறவினர்களின் மனக் கசப்புக்கு ஆளாகாமல் பார்த் துக் கொள்வது நல்லது, போசன சுகமுண்டு.

**கன்னி** குடும்பத்தில் கலகலப்பான சூழ்நிலை உருவாகும், சுபகாரியச் செலவுகள் அதிகரிக்கும், மற்றவர்கள் மத்தியில் உங்களின் மரியாதை உயரும், போசன நன்மையுண்டு.

**துலாம்** நல்ல செய்திகள் நாடி வரும் நாள், விருந்தினர் வருகையுண்டு, செய் தொழில் முன்னேற்றம் காண்பீர்கள், வெளியூர்த் தொடர்புகள் அதிகரிக்கும், உற்சாகமான நாள்.

**விருச்சிகம்** சொல்லை செயலாக்கிக் காட்டுவீர்கள், தொலைபேசித் தகவல் தொழில் வளர்ச்சிக்கு உறுதுணை புரியும், எதிர்பார்த்த வரவுகள் வந்து சேரலாம், புண்ணிய காரியங்களில் ஆர்வம் காட்டுவீர்கள்.

**தனுசு** நேர்மையும் தன்னம்பிக்கையும் கொண்ட நண்பர்களின் உதவிகள் கிடைக்கலாம், பெற்றோர் மீது பிரியம் கூடும், கல்வியில் ஆர்வம் காட்டுவீர்கள், திடீர்ச் செலவுகள் ஏற்படலாம்.

**மகரம்** கேட்ட இடத்தில் உதவிகள் கிடைக்கலாம், பிரபலமானவர்களின் சந்திப்பால் பெருமைகள் வந்து சேரும் நாள், சிலர் தொழில் ரீதியாக உதவி கேட்டு வரலாம், சகோதர வழியில் நன்மையுண்டு.

**கும்பம்** கோரிக்கைகள் நிறைவேறும் நாள், ஆரோக்கியம் சம்பந்தப்பட்ட வகையில் இருந்த கவலைகள் தீரும், வாக்கு மேன்மையுண்டு, பொருளாதார நிலையில் முன்னேற்றம் காண்பீர்கள்.

**மீனம்** பக்குவமாக நடந்து பாராட்டு பெறுவீர்கள், பிதா சிந்தையுண்டு, கோபப்படுவதை தவிர்ப்பது நல்லது, திட்டமிட்ட பயணமொன்றில் திடீர் திருப்பங்கள் ஏற்படலாம், போசன சுகமுண்டு.

வளவன்

# இணுவில் பொது நூலகம், சனசமூக நிலையம்

## திரு.திருமதி இராசையா இராசம்மா ஞாபகார்த்த (K.R.S ஸ்தாபகர்)

# தகவல் தொழில்நுட்ப மையம் கட்டடத் திறப்புவிழா - 2013

### பரராஜசேகரப் பிள்ளையார் ஆலய குருவின் ஆசிச்செய்தி

இன்றைய காலகட்டத்தில் எல்லாமே கணனி மயமாக்கப்பட்டுள்ளது. எங்கு பார்த்தாலும் எதிலும் கணனிதான். மாணவர்களின் கல்விசார்ந்த எல்லாமே கணனிமயமாக்கப்பட்டுள்ளது. கணனியில் இல்லாதது ஒன்றுமே இல்லை.

இவ்வாறான கணனி தகவல் தொழில்நுட்ப மையம் இன்று மாணவர்களுக்கு மிக முக்கியமானது. நூலகத்தில் எத்தனையோ புத்தகங்கள் உள்ளன. இவையனைத்தையுமே இன்று கணனியில் காணலாம். பலராலும் போற்றப்படும் கணனித் தொழில்நட்ப மையத்திற்கென ஒரு கட்டடத்தை உருவாக்கிய இணுவில் பொது நூலகத்தாரை போற்றாமல் இருக்கமுடியாது. இவர்களின் பணி மேன் மேலும்வளர எல்லாம்வல்ல ஸ்ரீ பரராஜசேகரப்பிள்ளையார் அருள்புரிவாராக.

**சிவஸ்ரீ வை. சோமாஸ்கந்தக்குருக்கள்**
**சிவஸ்ரீ சோ. அரவிந்தக்குருக்கள்**
**ஸ்ரீ பரராஜசேகரப் பிள்ளையார் கோவில், இணுவில்.**

### ஆசிச்செய்தி

எமது கிராமத்திலே பொது நூலகம் என்று ஒன்று உள்ளது. அங்கே சிறுவர், மாணவ மாணவிகள் எல்லோருக்கும் உகந்ததாக நடத்துகின்றனர்.

அந்த வகையிலே இன்று கணனி வகுப்புக்களும் நடத்துவதற்கு கணனிக்கூடமும் திறந்துவைப்பதற்கு தயாராக உள்ளனர். மிகவும் சிறந்த சேவைகளைச் செய்வதற்கு முன்வந்ததையிட்டு பெருமகிழ்ச்சி அடைகின்றோம். எல்லாவற்றிற்கும் பரராசசேகரனின் திருவருளும் முருகப் பெருமானின் திருவருட் கடாட்சமும் இதனை நடத்துகின்ற அத்தனை பேருக்கும் கிடைக்கவேண்டி பிரார்த்திக்கின்றோம்.

**ந. உருத்திரமூர்த்திக் குருக்கள்,**
**இரண்டாவது குருமஹா சந்நிதானம்**

### செஞ்சொற்செல்வரின் வாழ்த்து

இணுவில் பொது நூலகத்தில் புதிதாக உருவாக்கப்பட்ட தகவல் தொழில்நுட்ப மையத்தின் திறப்பு விழாவிற்கு ஆசிச் செய்தி வழங்குவதில் மிக்க மகிழ்வடைகிறேன். தகவல் தொழில்நுட்பக் கூடத்தை அமரர் இராசையா இராசம்மா தம்பதிகள் நினைவாகக் கட்டப்பட்ட செய்தியறிந்து மிகவும் ஆனந்த மடைகிறேன். இன்றைய நூற்றாண்டுக்குப் பொருத்தமான நல்லறிவை நம் ஊர்ப் பிள்ளைகள் அறிவதற்குப் பெரிய வாய்ப்பாக இப்பணி அமையும் என்பதில் ஐயமில்லை. இப்பணியில் ஆர்வமாகச் செயற்பட்ட பேராசிரியர் க. தேவராஜா அவர்கட்கும், அவர் குடும்பத்தவர்களுக்கும் எம் சமூகம் என்றும்நன்றிக்கடன்பட்டது.

எமது கிராமம் நிறை செல்வத்தோடு இருப்பதற்கு எம் கிராமத்து மூத்தோர் பேணிய தெய்வ வழிபாடே முதற்காரணம் என்பதை அனைவரும் ஒத்துக் கொள்வர். தெய்வ கைங்கரியமாகச் செய்யும் தர்மகாரியங்கள் என்றும் நிலைத்து நிற்பது இயற்கை. அவ்வகையில் பொது நூலகப்பணியிலுள்ள அன்னவரது ஆன்மீக நாட்டமும், அறிவுசார் பணியும் என்றும் நிறைவான வெற்றியைத் தரும் என்பதில் ஐயமில்லை.

அமரர் இராசையா அவர்களின் இளைய மைந்தன் திரு.இ.சிவகுமாரன் அவர்கள், ஊர் உறவுப் பற்றிலி மிகப்பிரியமுடையவர். அவரது ஆர்வமும், முயற்சியும் பொது நூலக வளர்ச்சிப் பாதையில் முக்கியத்துவம் பெறுவதை யான் அறிவேன். இணுவில் பொதுநூலகம் மேலும் நல்விருத்தியுடன் சிறக்க எமது குலதெய்வங்களையும், துர்க்கா தேவியையும் பிரார்த்தித்து வாழ்த்துக் கூறி அமைகிறேன்.

*"யாவர்க்குமாம் பிறர்க்கின்னுரை தானே"*

**கலாநிதி ஆறு. திருமுருகன் , தலைவர்,**
**ஸ்ரீ துர்க்காதேவி தேவஸ்தானம்,**
**தெல்லிப்பழை.**

### அறிவினையும் சேவையையும் வழங்கும் நிறுவனம்

இணுவில் மக்களிடையே தகவல் தொழில்நுட்ப அறிவினையும், அது சார்ந்த சேவையினையும் வழங்கும் நோக்குடன் இணுவில் பொதுநூலக சனசமூக நிலையத்தில் தகவல் தொழில்நுட்ப மையம் இயங்கவிருப்பதனையிட்டு மிக்க மகிழ்ச்சியடைகின்றேன்.

இன்றைய இலத்திரனியல் யுகத்தில் தகவல் தொடர்பாடல் மற்றும் தொழில்நுட்ப அறிவு மிக இன்றியமையாததொன்றாக உள்ளது. இந்த வகையில் பொதுநல நோக்கும், சமூக உணர்வுமிக்க திரு.இ. சிவகுமார் அவர்களினால் அன்பளிப்புச் செய்யப்பட்ட நிதியுதவியுடன் ஆரம்பிக்கப்படும் இத்தகவல் தொழில்நுட்ப மையத்தில் இளைய சமூகத்தினர் தகவல்தொழில்நுட்பத்தைக் கற்பதன் மூலம் கிட்டும் அறிவும், ஆற்றலும் அவர்கள் எதிர்காலத்தில் தொழில்வாய்ப்புக்களைப் பெற்றுக்கொள்வதற்குப் பேருதவியாக இருக்கும் எனவும், அத்துடன் இணுவில் சூழலில் வாழ்வோர் இத் திறனைப் பெற்றுக்கொள்ளவும், அத்துறையில் சேவையினைப் பெற்றுப் பயன்பெறவும் ஒரு அரிய சந்தர்ப்பமாக அமையும் எனவும் கருதுகின்றேன்.

இவ்வாறு மக்களின் தேவைகளுக்கேற்றவாறு தகவல் தொழில்நுட்பத் துறையில் அறிவு, ஆற்றல், சேவைகள் எனப் பயன்பல பெறத்தக்க வாய்ப்பை ஏற்படுத்திக்கொடுக்க முன்வந்துள்ள "இணுவில் பொதுநூலக சனசமூக நிலையத்தினரின் முயற்சினைப் பாராட்டுவதுடன், இவ் உன்னதமான சேவையின் ஆரம்பமாய் விளங்கும். இம் மையத்தின் சேவைகள் மக்களுக்கு நன்முறையில் சென்றடையவும், மக்களை நல்வழிப்படுத்தும் பயனுள்ள பணிகளை முன்னெடுத்துச் செல்லவும் இந்நாளில் மனமுவந்து வாழ்த்துகின்றேன்.

**சுந்தரம் அருமைநாயகம்**
**அரசாங்க அதிபர் / மாவட்டச் செயலர்,**
**யாழ் மாவட்டம்.**

| | |
|---|---|
| காலம் | : 24.08.2013 சனிக்கிழமை |
| நேரம் | : மாலை 7 மணி |
| தலைவர் | : திரு.சொ.ஹரிசங்கர் |

**பிரதம விருந்தினர் :**
திரு.சுந்தரம் அருமைநாயகம்
அரசாங்க அதிபர்/மாவட்ட செயலாளர்,
மாவட்ட செயலகம், யாழ்ப்பாணம்

**சிறப்பு விருந்தினர்கள்**
திரு.மு.நந்தகோபாலன் (பிரதேச செயலர்,
வலி.தெற்கு பிரதேச செயலகம்)

திரு.எஸ்.சந்திரராஜா ( வலயக் கல்விப் பணிப்பாளர்,
வலிகாமம் கல்வி வலயம்)

**கௌரவ விருந்தினர்கள்**
திரு.மு.செல்வஸ்தான்,
(அதிபர், யா/இணுவில் இந்துக் கல்லூரி)

திரு.நா.சிவநேசன்
(அதிபர், யா/இணுவில் மத்திய கல்லூரி)

திருமதி க.கிருஷ்ணபிள்ளை
(அதிபர் , யா/இராமநாதன் கல்லூரி)

### வலயக் கல்விப் பணிப்பாளரின் வாழ்த்து

பாரம்பரியமும் மரபுகளும் கோலோச்சுகின்ற சைவசமயத் தளமாகத் திகழ்கின்ற இணுவிலில், நவீன தொழில்நுட்ப வளர்ச்சியின் வித்தொன்று பதியமிடப்படுகின்ற நாளாக தகவல் தொழில்நுட்ப மையத்தின் திறப்பு விழா நாள் அமைகின்றது.

தகவல் தொழில்நுட்பம் என்பது மனித வாழ்வின் சகல துறைகளினதும் நாடி நரம்பாக மாறியுள்ளது. இப்பூகோளத்தின் தகவல் தொழில்நுட்பத்தின் பிரமாண்டம் முழுவதும் மனிதனின் உள்ளங்கைத் தொலைபேசிகளுள் சுருங்கிவிட்டது. உலகமயமாதல் பூமியை ஒரு கிராமமாக அல்லது நகரமாகச் சுருக்கியதுடன் அச்சுருக்கத்தை உள்ளங்கை நெல்லிக்கனி யாகவும் மாற்றியுள்ளது. சோதிடம் பார்த்ததிலிருந்து விண்வெளிப்பயணம் வரை எல்லாமே கணனி மயமாகிவிட்டன. விவசாயம், மருத்துவம், பொறியியல், கணக்கியல், முகாமைத்துவம், படைத்துறை, பொதுசனத்தொடர்பாடல்துறை முதலிய அனைத்துத் துறைகளினதும் குருதிச் சுட்றோட்டமாக தகவல் தொழில்நுட்பம் (ICT) காணப்படுகிறது. அத்னால் மேற்படி அனைத்துத் துறைகளுக்குமான மனிதவள ஆளணியை உருவாக்கி வழங்குகின்றன கல்வித்துறையின் ஒரு பிரதான பாடத்துறையாக தகவல் தொழில்நுட்பம் மாறிவருகிறது. ஆகையால் பாடசாலைகள், பல்கலைக்கழகங்கள் ஆகியவற்றில் மாத்திரமல்லாமல் மக்கள் வாழ்கின்ற கிராமங்களிலும் தகவல் தொழில்நுட்ப மையங்கள் அமைக்கப்படுதல் தகவல் தொழில்நுட்ப அறிவின் இடைவெளியை (digital divide) நிரப்புவதாகவும் அமையும்.

மனித நாகரீக தகவல்தொழில்நுட்ப விஞ்ஞானம் அமைந்திருக்கின்ற தகவல் தொழில்நுட்ப விஞ்ஞானம் மானிட நேயத்துடனும் அறக்கோட்பாடுகளுடனும் சட்டவன்முறைக்கு உட்பட்டும் பயன்படுத்தப்பட வேண்டும். எந்தவொரு கட்டத்திலும் மானிட நேயத்திற்கும் மனிதாபிமான நோக்கங்களுக்கும் அப்பாற்சென்று விஞ்ஞானத்தின் ஆற்றலை, முறைதவறிப் பயன்படுத்துதல் தவிர்க்கப்படவேண்டும்.

இவ்விலக்குகளை இணுவில் பொதுநூலகத்தின் சனசமூக நிலையம் ஆரம்பிக்கும் தகவல் தொழில்நுட்ப மையம் அடையவேண்டும் என்றும் ஒரு நிலைபேறான சேவையை சமூகத்துக்கு வழங்கவேண்டும் என்றும் எல்லாம்வல்ல இறைவனை நினைந்து வாழ்த்தி நிறைவு காண்கிறேன்.

**திரு. எஸ். சந்திரராஜா**
**வலயக் கல்விப் பணிப்பாளர், வலிகாமம் கல்வி வலயம்.**

### தலைவரின் உள்ளத்திலிருந்து.....

இணுவில் பொதுநூலகத்தின் நீண்டநாள் கனவு இன்று நிறைவேறுகின்றது. எமது அங்கத்தவர்களின் விடா முயற்சியும் இப்பிரதேச வளர்ச்சியில் கொண்டுள்ள அக்கறையின் வெளிப்பாடே இப் பொதுநூலக வளர்ச்சிக்கு முக்கியகாரணம் என்றால் மிகையாகாது. இந்நூலகம் காலத்திற்கு பொருத்தமான வகையிலும் மக்களின் அறிவுதேடலுக்கு ஏற்ற வகையிலும் தனது சேவையை விரிவுபடுத்தி வருகின்றது. அந்த வகையில் இந்நூலகம் இன்று தகவல் தொழில்நுட்ப மையத்தை திறந்து வைப்பதில் பெருமையடைகின்றது.

இம்மையத்தின் மூலம் இந்நூலகமானது பல சேவைகளை ஆற்றுவதற்கு தன்னைத்தயார்படுத்திக்கொண்டிருக்கின்றது. அந்த வகையில் கணனிசார் பயிற்சி நெறிகளை வழங்குதல், Online ஊடான கற்கை நெறிகளை அறிமுகஞ் செய்தல், இணைய பாவனையை அனைவருக்கும் வழங்குதல், முன்பள்ளி மாணவர்களுக்கான கணனிப் பயிற்சி வகுப்புக்கள், Online ஊடான ஆங்கில கற்கைநெறிகள் போன்ற வற்றை ஒழுங்கு செய்தல், நவீன கைத்தொலைபேசிகள் போன்றவற்றில் பயன்படும் மென்பொருள் வடிவமைப்பு என்பனவற்றை இம்மையத்தினூடாக முன்னெடுப்பதற்கு எண்ணியுள்ளோம்.


அடுத்தடுத்த சந்ததிகள் தொடர்ந்து பயன்படுத்துவதற்கும் இப்பிரதேச மக்களின் தகவல் தொடர்பாடல் தொழில்நுட்ப அறிவை மேம்படுத்துவதற்கும் இம்மையம் எப்பொழுதும் தயாராகவே உள்ளது.


இச்செயற்பாடுகளுக்கு காரணமான அனைத்து இவ்வூரைச் சேர்ந்த மற்றும் வெளிநாடுகளில் வாழும் எமது அன்பு சகோதரர்களுக்கும் நூலகம் சார்பாக நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

**திரு.சொ.ஹரிசங்கர், தலைவர்,**
**இணுவில் பொதுநூலகம்**



திரு.திருமதி இராசையா இராசம்மா





### வணிகத்துறை பேராசிரியரின் வாழ்த்து

இணுவில் பொதுநூகலம் முன்னெடுக்கும் தகவல் தொழில்நுட்ப மையத்துக்கான கட்டடத் திறப்புவிழாவிற்கு வாழ்த்துச் செய்தி வழங்குவதில் அதன் போஷகர் என்ற வகையில் மட்டற்ற மகிழ்ச்சியடைகின்றேன். இன்றைய தகவல் தொழில்நுட்ப யுகத்தில் அதனை விருத்தி செய்வதற்காக நடவடிக்கை எடுத்தல் காலத்தின் கட்டாயமாகும.

அமரர்களான இராசையா - இராசம்மா நினைவாக அமைக்கப்பட்டிருக்கும் இக் கட்டடத்திற்கு தேவைப்பட்ட நிதியை திரு. இராசையா சிவகுமாரன் வழங்கியிருப்பது நூலகத்தின் மீதும் கிராம மக்கள் மீதும் அவர் கொண்டிருக்கும் பற்றினையும், பெற்றோர் மீதம் அவர் வைத்திருந்தபாசத்தினையும் எடுத்துக் காட்டுவதாக உள்ளது. "சேவை செய்வதே ஆனந்தம்" என்ற முதுமொழிக்கிணங்க இணுவில் பொது நூலகத்தின் ஊடாக இக் கைங்கரியத்தைச் செய்ய முன்வந்திருப்பது தூரநோக்கினைக் கொண்ட அவரின் அபிவிருத்திச் செயற்பாடாகும். இலத்திரனியல் செயற்பாடுகள் வளர்ச்சி கண்டுவரும் இக்காலத்தில் உருவாக்கப்பட்டிருக்கும் தகவல் தொழில்நுட்ப மையத்தின் கட்டடத் தொகுதி மக்களின் எதிர்பார்ப்பினை நிறைவேற்றும் என்பதில் ஐயமில்லை.

இணுவில் பொது நூலகம் எடுத்திருக்கும் காலத்தின் தேவை கருதிய இந்நடவடிக்கையை பாராட்டி வாழ்த்துவதுடன் அதற்கு நிதியளித்த திரு.சிவகுமாரன்அவர்களின் தெய்வ சிந்தனையுடன் கூடிய இக்கல்வி அபிவிருத்திப் பணியினையும் பாராட்டுவதுடன், எதிர்காலத்தில் மேலும் பல புதிய கிராம அபிவிருத்தி சார்ந்த பணிகளை முன்னெடுக்க வேண்டுமென இணுவில் பொதுநூலகத்தை வேண்டி நிற்கின்றேன்.

*"வளர்க பொதுநூலகப் பணி"*

**பேராசிரியர் க. தேவராஜா தலைவர்,**
**வணிகத்துறை, யாழ் பல்கலைக்கழகம்.**

### பிரதேச செயலரின் வாழ்த்து

முத்தமிழும், சிவநெறியும் முறை சிறந்து ஓங்கிட கற்றவரும் ஞானியரும் தனிசிறந்து விளங்கிட பல்வளம் சார்ந்த பழம்பதி இணுவையம்பதியாகும். இறையருள் தந்து வாழ்விற்கும் பரராஜசேகரப் பிள்ளையார் கோவிலின் அருகே இணுவில் பொதுநூலகம் அமையப் பெற்றுள்ளது.

இந்த நூலகமானது இணுவில் கிராமத்திற்கு மாத்திரமன்றி இப் பிரதேசத்திற்கும் தனது தேவையை ஆற்றி வருகின்றது.

"சேவையில் சிறப்பு தேவையில் தெரியும் . சேவையின் ஏற்றம் சிறப்புறின் மக்களுக்கு ஆங்கோர் தேவையிருக்காது"

என்பதற்கு இணங்க மக்களின் தேவையறிந்து நவீன உலகமயமாக்கலுக்கு ஏற்ப தனது சேவையை விரிவாக்க உளங்கொண்டு புதிய கட்டடமொன்றினைத் திறப்பதையிட்டு நான் பெரு உவ்கையடைவதுடன் இணுவில் பொதுநூலக சேவை என்றும் மக்களுக்கு பல்கிப் பெருக வாழ்த்துகின்றேன்.

இப்புதிய கட்டடத்தில் நவீன வசதிகளுடன் கூடிய தகவல் தொடர்பு நிலையமும் விரிவுரை மண்டபமும் அமையப்பெறுவது எமது பிரதேசத்திற்குக் கிடைத்த வரப்பிரசாதம் மட்டுமல்ல, ஏனைய அயல் பிரதேசத்தில் வாழ்வோருக்கும் அறிவுள்ள வகையில் பயனுள்ள பொழுதுபோக்கை கழிக்க இது ஒரு நல்ல வரப்பிரசாதமாகும். வளர்ந்து வரும் நவீன உலகுக்கேற்ப இந்தக் கட்டிடத் தொகுதி அமைந்திருப்பது இப்பிரதேச மக்களின் அறிவுத் தேடலுக்கு ஒரு உந்துசக்தியாக அமையும் என்பதில் ஐயமில்லை.

**திரு.மு. நந்தகோபாலன் , பிரதேச செயலர்,**
**வலி.தெற்கு பிரதேச செயலகம்.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தேர்தல் காலத்தில் சில நடவடிக்கைகளுக்கு தடை


(தும்பளை)

வடமாகாண சபைத் தேர்தலை முன்னிட்டு சாதாரண மீள்குடியேற்றம் தவிர்ந்த காணி பகிர்ந்தளித்தல், காணிக் கச்சேரி நடத்துதல், காடுகளை அழித்து துப்புரவு செய்தல் போன்ற நடவடிக்கைகளை மேற்கொள்ளமுடியாது என மீள்குடியேற்ற அபிவிருத்தி பாதுகாப்புக் கான ஜனாதிபதி செயலணியின் செயலாள ரால் சகல மாவட்ட அரசாங்க அதிபர்கள் ஊடாக அனைத்து பிரதேச செயலகங்களுக் கும் அறிவுறுத்தப்பட்டுள்ளது.

எதிர்வரும் செப்டெம்பர் மாதம் வடமாகாண சபைத் தேர்தல் நடத்தப்படவுள்ள நிலையிலே மேற்படி நடவடிக்கைகள் அமுலுக்கு கொண்டு வரப்பட்டுள்ளன.

ஆயினும், தேர்தல் ஆணையாளரின் அறிவித்தலின் பிரகாரம் உள் நாட்டில் இடம் பெயர்ந்தோர் தமது சொந்த நிலங்களில் சாதாரணமாக மீள்குடியேற்றப்படும் திட்டம் நிறுத்தப்படவில்லை என்பது சுட்டிக்காட்டத்தக் கது. (அ-9-19)




# வேட்பாளர் தாக்கப்பட்ட விவகாரம்; விசாரணையின் பின்னர் கைது நடவடிக்கை

## காங்கேசன்துறை சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர்

(யாழ்ப்பாணம்)

**யாழ்.நகரில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் வேட்பாளர் தாக்கப்பட்ட சம்பவம் தொடர்பில் புல னாய்வு விசாரணையின் இறுதியில் குற்றவாளி கைது செய்யப்படுவார் என காங்கேசன்துறை சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் எல்.எஸ்.பத்திநாயக்க தெரி வித்தார்.**

யாழ்.பொலிஸ் நிலையத்தில் நேற்று முற் பகல் 10.30 மணியளவில் நடைபெற்ற ஊட கவியாளர் சந்திப்பின் போதே அவர் மேற் கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் வடக்கு மாகாண சபை வேட்பாளர் கந்தப்பர் முத்தையா பிள்ளை தவராசா கடந்த 20 ஆம் திகதி யாழ்.நகரப் பகுதியில் வைத்து தாக்கப்பட்ட தோடு, அவர் வந்திருந்த வாகனமும் உடைக் கப்பட்டிருந்தது.

தாக்குதலுக்குள்ளான வேட்பாளர் யாழ். பொலிஸ் நிலையத்திலும் தேர்தல் திணைக் களத்திலும் முறையிட்டுள்ளார்.

சம்பவம் நடைபெற்ற இடத்தில் தன்னை இவர்கள்தான் தாக்கியிருந்தனர் என தாக்கு தலுக்குள்ளான வேட்பாளர் கூறியிருந்ததோடு தன்னை கை துப்பாக்கியினால் சுடுவதாக அச்சுறுத்தியிருந்தனர் எனவும் கூறியிருந் தார்.

எனினும் பொலிஸ் நிலையத்தில் பதிவு செய்யப்பட்ட முறைப்பாட்டின் போது துப் பாக்கியினால் அச்சுறுத்தியவர் யார் என வேட்பாளர் அடையாளம் காட்டவில்லை.

இதனைவிட தன்னை தாக்கும் போது வீடியோ பிடித்த வேட்பாளர் துப்பாக்கியை காட்டி அச்சுறுத்தும் போது வீடியோ எடுக்க வில்லை.

கை துப்பாக்கியை காட்டி அச்சுறுத்திய மைக்கான சான்றாதாரங்கள் எதுவுமற்ற நிலையிலேயே கை துப்பாக்கியை காட்டி அச்சுறுத்தப்பட்டதாக குற்றச்சாட்டு முன்வைக் கப்பட்டுகின்றது.

வேட்பாளரையும் வாகனத்தையும் தாக்கிய வர்கள் தொடர்பில் நாம் புலனாய்வு விசார ணைகளை மேற்கொண்டு வருகின்றோம்.

புலனாய்வு விசாரணையின் முடிவில் தான் வேட்பாளர் மீதுதாக்குதல் மேற்கொண்ட குற்ற வாளியை கைது செய்யமுடியும்.

இதேவேளை, வேட்பாளர் தன்மீது தாக்கு தல் மேற்கொண்டதாக குறிப்பிடுகின்ற நப ரும் வேட்பாளருக்கெதிராக அன்றைய தினமே முறைப்பாடு செய்துள்ளார்.

வேட்பாளரின் முறைப்பாட்டில் தன்னை 12 பேர் தாக்கியதாக குறிப்பிட்டுள்ள போதிலும் அதற்கான ஆதாரங்கள் முன்வைக்கப்பட வில்லை.

தாக்குதல் சம்பவம் தொடர்பில் யாழ்.நீதி மன்றில் தகவல் அறிக்கை சமர்ப்பிக்கப்பட்டுள் ளது.


புலனாய்வு விசாரணையின் இறுதியில் நீதிமன்றில் குற்றப்பத்திரம் தாக்கல் செய்து இருபகுதியினரையும் நீதிமன்றில் ஆஜர்படுத் தவுள்ளோம்.

உடைக்கப்பட்ட வேட்பாளரது வாகனமும் யாழ். பொலிஸ் நிலையத்திலேயே உள்ளது என்றார் சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் பத்திநாயக்க.

மேலும் தம்மை தாக்கியவர்களது பெயர் களை தாம் பொலிஸாரிடம் கூறியுள்ளதாக தாக்குதலுக்குள்ளான வேட்பாளர் தரப்பினர் தெரிவிக்கின்றனர். (அ-4)







யாழ்.பல்கலைக்கழக நுண்கலைப்பீட கலை வட்டத்தின் ஏற்பாட்டில் **பின்னல்** எனும் கலைக் கண்காட்சி நேற்று காலை பல்கலைக்கழகத்தில் ஆரம்பமானது. இக் கண்காட்சியை கலைஞர் ஹனா ஹோல்மன் நாடாவெட்டி திறந்து வைப்பதையும்ஃதுணைவேந்தர் பேராசிரியர் திருமதி வசந்தி அரசரட்ணம் மங்கல விளக்கேற்று வதையும் மாணவர்கள் கண்காட்சியை பார்வையிடுவதையும் படங்களில் காணலாம்.

(படங்கள்:-உ.சாளீன்)

## வேலை திட்டங்களை விரைவில் பூர்த்தி செய்க

(கரணவாய்)

கரவெட்டி பிரதேச செயலகத்திற்குட்பட்ட பன்முகப்படுத்தப்பட்ட வரவுசெலவுத் திட்டத் தின் நிதி ஒதுக்கீட்டில் செய்யப்பட்டுவரும் வேலைத் திட்டங்கள் யாவும் எதிர்வரும் செப் டெம்பர் மாதம் 30 ஆம் திகதிக்கு முன்னர் நிறைவடைய வேண்டுமென கரவெட்டி பிர தேச செயலர் எஸ்.சிவசிறி வேண்டுகோள் விடுத்துள்ளார்.

இவ்வாண்டுக்கான பன்முகப்படுத்தப்பட்ட வரவுசெலவுத் திட்ட முன்னேற்றம் தொடர் பான கூட்டத்திலேயே பிரதேச செயலர் மேற் கண்டவாறு கோரிக்கை விடுத்தார்.

இக் கூட்டம் நேற்று வெள்ளிக்கிழமை முற்பகல் 10 மணிக்கு கரவெட்டி பிரசே செய லக மாநாட்டு மண்டபத்தில் இடம்பெற்றது.

இதில் மேற்படி திட்டத்தினூடாக நிதி ஒதுக் கீட்டைப் பெற்றுக் கொண்ட முன்பள்ளிகள் , சனசமூக நிலையங்கள், பொது அமைப் புக்கள் என்பன கலந்து கொண்டன.

மேற்படி நிதி ஒதுக்கீட்டைப் பெற்றுக் கொண்ட அமைப்புக்கள் குறிப்பிட்ட கால எல்லைக்குள் வேலைகளை நிறைவேற்று வதாக உறுயளித்திருந்தன. (அ-9-60)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நல்லூர் ஆலய சூழலில்...

நல்லூர் முருகன் மஹோற்சவத்தை முன்னிட்டு தெல்லிப்பழை துர்க்காதேவி தேவஸ்தான அனுசரணையுடன் நல்லூர் இளங்கலைஞர் மன்றம் நடத்தும் தெய்வீக இசையரங்கு உற்சவ காலத்தில் தினமும் மாலை 6.45 மணி முதல் 8.15 மணி வரை நல்லூர் துர்க்கா தேவி மணி மண்டபத்தில் நடைபெற்று வருகின்றது. இதற்கமைய இன்று சனிக்கிழமை எஸ்.சூரியகுமார் வழங்கும் பாடலுடனான இசையரங்கம் இடம்பெறும்.

இந்நிகழ்விற்கு அணி செய் கலைஞர்களாக வயலின் எ.ஜெய்ராமன், மிருதங்கம் எஸ்.விமல்சங்கர், முகர்சிங் கே.நந்தகுமார் ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர்.

• • • • • • • • • • • • • • • • • • • • • • • • • • • • • • • • • • • • • • • • • • •

நல்லூர் கந்தசுவாமி கோயில் மஹோற்சவத்தை முன்னிட்டு இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களம் நடத்தும் ஆன்மீக சிந்தனை, சமய சொற்பொழிவு, கலை நிகழ்வுகள் என்பன உற்சவகாலத்தில் தினமும் பிற்பகல் 3 மணி முதல் 6 மணி வரை நல்லூர் ஸ்ரீலஸ்ரீ ஆறுமுக நாவலர் மணி மண்டபத்தில் நடைபெற்று வருகின்றது. இன்றைய நிகழ்வாக கவிமாமணி அன்னைதாசன் வழங்கும் திருவாசகம் தந்த மணிவாசகர் என்னும் விடயப் பொருளிலான சொற்பொழிவு இடம்பெறவுள்ளது. தொடர்ந்து வட்டுக்கோட்டை துணவி அறநெறிப்பாடசாலை, இளவாலை ஒல்லுடை ஸ்ரீ ஞானவைரவர் அறநெறிப்பாடசாலை, இளவாலை சித்தமேழி ஸ்ரீஞானவைரவர் அறநெறிப்பாடசாலை மாணவர்கள் வழங்கும் கலை நிகழ்வுகளும் இடம்பெறும்.

• • • • • • • • • • • • • • • • • • • • • • • • • • • • • • • • • • • • • • • • • • •

நல்லூர் கந்தனின் மஹோற்சவத்தை முன்னிட்டு சர்வதேச இந்து குருமார் ஒன்றியத்தின் ப்ரம்மகான சபா நடத்தும் தெய்வீக இசைச்சங்கமம் நிகழ்வு தினமும் மாலை 6.30 மணிக்கு நல்லை ஆதீன புதிய மண்டபத்தில் நடைபெற்று வருகின்றது. இதன்படி இன்று திருநெல்வேலி இசைக்கலைமாணி ஸ்ரீமதி சிந்துஜா ரிஷிகேசசர்மாவின் இசைக்கச்சேரி இடம்பெறும்.

• • • • • • • • • • • • • • • • • • • • • • • • • • • • • • • • • • • • • • • • • • •

நல்லூர் கந்தன் மஹோற்சவத்தை முன்னிட்டு நல்லூர் சைவ மகா சபையின் ஏற்பாட்டில் நல்லை ஆதீன குருமூர்த்த ஆலய மண்டபத்தில் நல்லைக் குருமணியின் பிரதமவாரிசு கானகதாவாரிதி, பிரம்ம ஸ்ரீ சிவ.வை.நித்தியானந்த சர்மா வழங்கும் பாரத வம்சம் பற்றிய இசைப் பேருரை பக்கவாத்திய சகிதம் இடம்பெறவுள்ளது. இந்நிகழ்வில் இன்று சனிக்கிழமை குருகுல வாசம் என்னும் விடயப் பொருளிலானஇசைப் பேருரை இடம்பெறவுள்ளது.

• • • • • • • • • • • • • • • • • • • • • • • • • • • • • • • • • • • • • • • • • • •

நல்லூர் கந்தசுவாமி கோயில் மஹோற்சவத்தை முன்னிட்டு சைவத்தமிழ் பண்பாட்டுக் கழகத்தினால் நடத்தப்படும் தெய்வீகப் பேருரை, கலை நிகழ்வு, மாணவர் சொற்பொழிவு, கலைஞர் கௌரவிப்பு நிகழ்வுகள் என்பன மஹோற்சவ காலங்களில் தினமும் பிற்பகல் 6.30 மணி முதல் இரவு 8 மணி வரை நல்லூர் வடக்கு வீதியில் அமைந்துள்ள நடராஜா பரமேஸ்வரி மணிமண்டபத்தில் நடைபெறும். இதன்படி இன்று சனிக்கிழமை ரி.மயூரகிரி சர்மா வழங்கும் உதித்தனன் உலகமுய்ய என்னும் விடயப் பொருளிலான சொற்பொழிவு இடம்பெறும்.

• • • • • • • • • • • • • • • • • • • • • • • • • • • • • • • • • • • • • • • • • • •

நல்லூர் கந்தன் மஹோற்சவத்தை முன்னிட்டு தினமும் மாலை 7.15 மணி தொடக்கம் 7.45 மணிவரையும் யாழ்.சின்மயா மிஷன் ஆச்சிரம வதிவிட ஆச்சாரியார் பிரம்மச்சாரி ஜாக்கிரத் சைதன்ய சுவாமிகள் நல்லூர் மகேஸ்வரன் மணி மண்டபத்தில் சொற்பொழிவாற்றி வருகிறார். இதில் இன்று சனிக்கிழமை கடவுள் எனும் தொனிப்பொருளில் அவர் சொற்பொழிவொன்றை ஆற்றவுள்ளார். (2)

# தபால் மூல வாக்குச் சீட்டுகள் தபாலில் அனுப்பி வைப்பு

(கொழும்பு)

வடக்கு, வடமேல் மற்றும் மத்திய மாகாணங்களின் 10 நிர்வாக மாவட்டங்களுக்குமான தபால்மூல வாக்கெடுப்பிற்கான வாக்குச் சீட்டுக்கள் தபால் திணைக்களத்தில் காப்புறுதி அஞ்சல் செய்யப்பட்டது.

தபால் மூல வாக்களிப்புக்கு தகுதி பெற்ற அனைவருக்குமான வாக்குச் சீட்டுக்கள் அடங்கிய ஒரு இலட்சத்து 11 ஆயிரத்து 333 பொதிகள் தேர்தல்கள் திணைக்களத்தினால் நேற்று முன்தினம் காப்புறுதி அஞ்சல் செய்யப்பட்டுள்ளதாக தேர்தல்கள் பிரதி ஆணையாளர் எம்.மொஹமட் தெரிவித்துள்ளார்.

தேர்தல்கள் திணைக்களம் உத்தியோகபூர்வ தபால் மூல வாக்களிப்பு நடைபெறும் தினங்களாக எதிர்வரும் செப்டெம்பர் மாதம் 9,10 ஆகிய திகதிகளை ஏற்கனவே பிரகடனம் செய்துள்ளது.

வாக்குச் சீட்டுக்கள் அடங்கிய பொதிகள் மாவட்ட செயலக அலுவலகங்களின் அத்தாட்சி அலுவலகர்களது பெயர்களுக்கு அனுப்பி வைக்கப்படும்.

அதனை அவர்கள் தமது காப்பறையில் பாதுகாப்பாக வைத்து செப்டெம்பர் 9 ஆம் திகதியன்று கட்சிப் பிரதிநிதிகள் முன்னிலையில் இரகசிய வாக்கெடுப்பு நடத்துவர்.

அன்றைய தினம் வாக்களிக்க முடியாதவர்கள் மறுநாள் வாக்களிக்க முடியும். அடையாளமிடப்பட்ட வாக்குச் சீட்டுக்கள் பொதி செய்து கடித உறையினூடாக தபால் தெரிவத்தாட்சி அலுவலகங்களுக்கு அனுப்பி வைக்கப்படும்.

அடையாளமிடப்படாதவை மாவட்ட தேர்தல் அலுவலகங்களுக்கு அனுப்பி வைக்கப்படும்.

மேற்படி இரு தினங்களிலும் வாக்களிக்க முடியாதவர்கள் தமது மாவட்ட தேர்தல் அலுவலகங்களுக்குச் சென்று தமது ஆள் அடையாளத்தை நிரூபித்து 21 ஆம் திகதிக்கு முன்னர் வாக்களிக்க முடியும். அனைத்து வாக்குச் சீட்டுக்கும் 21 ஆம் திகதி மாலை 4 மணிக்கு முன்னர் தெரிவத்தாட்சி அதிகாரிகளை சென்றடைய வேண்டும்.

அதற்கேற்ற வகையில் தபால் மூல வாக்களிப்பு பூர்த்தி செய்யப்பட வேண்டுமெனவும் பிரதி தேர்தல்கள் ஆணையாளர் கேட்டுக் கொண்டார். (அ-2)

## பள்ளிவாசல் தாக்குதல் விவகாரம்; விசாரணைகள் தொடர்கின்றன

கொழும்பு, கிராண்ட்பாஸ், சுவர்ண சைத்திய வீதியிலுள்ள பள்ளிவாசலை சேதப்படுத்திய சந்தேக நபர்களை கண்டுபிடிப்பதற்கான விசாரணைகளை ஆரம்பித்துள்ளதாக கிராண்ட்பாஸ் பொலிஸார் கொழும்பு நீதவான் நீதிமன்றத்தில் தெரிவித்தனர்.

பள்ளிவாசலுக்கும் சூழவுள்ள சொத்துக்களுக்கும் ஏற்படும் சேதங்கள் பற்றி 45 இற்கும் மேற்பட்ட முறைப்பாடுகளை தாம் பெற்றுள்ளதாக நீதிமன்றத்தில் சமர்ப்பித்த அறிக்கையில் கிராண்ட்பாஸ் பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி தரமிட்டி பொல கூறியுள்ளார்.

மேற்படி பிரதேசத்தில் கலகம் ஏற்பட்டவுடனேயே அப்பகுதியைப் பாதுகாக்கும் நடவடிக்கைகளை பொலிஸார் மேற்கொண்ட போதிலும் தாக்குதல்களை நடத்தியவர்களை பொலிஸாரால் இனங்காண முடியவில்லை என்றும் அவர் அவ்வறிக்கையில் குறிப்பிட்டுள்ளார். (அ-2)

## 5856 பொலிஸார் பதவி விலகியுள்ளனர்

இலங்கை பொலிஸ் திணைக்களத்தில் கடமையாற்றிய 5 ஆயிரத்து 856 உத்தியோகத்தர்கள் பதவியை விட்டு விலகிச் சென்றுள்ளதாக ஆளும் கட்சியின் பிரதம கொறடா தினேஷ் குணவர்த்தன தெரிவித்துள்ளார்.


கடந்த 2012 ஆம் ஆண்டு ஜூலை மாதம் முதல் இதுவரையில் 593 உத்தியோகத்தர்கள் இவ்வாறு பதவியை கைவிட்டுச் சென்றுள்ளனர்.

இவ்வாறு பதவியை விட்டுச் செல்லும் உத்தியோகத்தர்களுக்கு எதிராக அபராதமோ அல்லது தண்டனையோ விதிக்கப்படுவதில்லை. தனிப்பட்ட காரணங்களுக்காக இவ்வாறு சிலர் பதவியை விட்டு விலகிச் செல்கின்றனர்.

அதேவேளை 2012 ஆம் ஆண்டு ஜூலை மாதம் முதலாம் திகதி தொடக்கம் இதுவரையில் 13 பொலிஸ் உத்தியோகத்தர்கள் காணாமற் போயுள்ளனர் என தெரிவித்துள்ளார்.

ஐக்கிய தேசியக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் ரவி கருணாநாயக்க எழுப்பிய வாய்மொழி மூல கேள்விக்கு பதிலளித்த போது அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டுள்ளார். (அ-2)

# நல்லூரான் திருவடிக்கு பதின்மூன்றாம் திருவிழா




## பணிந்தவர்கள் கொடும்பிறவியகலுந்தானே

கண்ணானைக் கண்ணினுள்ளே ஒளியானானை
கார்த்திகைப் பெண் வளர்த்தெடுத்த குழவிதன்னை
பண்ணானைப் பழங்கேட்டுப் பழமானானை
பராபரனை நிராமயமாய் நின்றான்தன்னை
எந்நாளும் தேவர்கட்கும் ஈடில்லானை
இந்திரனும்பணிந்தேத்தும் தேவன்தன்னை
பொன்னான மயூரமதில் இவருவானை
பணிந்தவர்கள் கொடும்பிறவியகலுந்தானே.

கவிமணி கந்த முருகேசதாசனார்.

## யாழிருக்க லயம் நல்வேல்!

யாமிருக்க பயம் ஏன்
வாழ்விருக்க வியம் மேன்
யாழிருக்க லயம் நல்வேல்
தாழிருக்க நயம் தேன்

வில்லில் சொல்லில் எல்லில்
அல்லிலும் எல்லிலும் இல்லில் ஆல்
எல்லையில் ஏல்லில் ஆலல்
நல்லையில் அல்லலில் இல்லல்.

வைத்தியகலாநிதி- சி.யமுனாநந்தா.

## இஷ்டமாய் என் முன்

தேன்பொழில் நல்லைக் குமரா
கண்பார்த்து என்னை யாள் கார்த்திகேயா
என் கஷ்ட நிஷ்ரூரம் கவலைகள் மாற்றி
அஷ்டலஷ்மி வாழ் அருளெனக்கு உதவி
இட்டமாய் என்முன் இருந்து விளையாடத்
திட்டமாய் எனக்கருள் செய்வாய் குகனே
சரவணபவனே உன்பாதம் சரணமய்யா

வ.பவளகேசி
கொய்யாத்தோட்டம்.

## கனவிலேனும் வருவாய் கந்தா

பண்ணேறு மொழியடியார் பரவி வாழ்த்தும்
பாதமலர் அழகினைப் பாவிகாண் பார்க்கில்
கண்ணூறு படுமொன்றே கனவிலெனும் காட்டென்றால்
காட்டு கிலாய்கந்தா உன்கருணை ஈதோ

அருணகிரி அவ்வை அகத்தியன் நக்கீரசூரன்
தருசனம் பெறவருள் தண்டமிழ்த் தெய்வமே
கனவிலே சயந்தனுக்கு நற்காட்சி கொடுத்தனையே
மனமார மயிலேறி என்கனவில் வாராயோ.

சி.வேலாயுதம், ஓய்வு-அதிபர்,
சைவப்புலவர் -சித்தானந்த பண்டிதர்

## அருள் புரிந்திடுவாய்...

நல்லூரில் குடிகொண்ட நாயகனே
நாடி வரும் பக்தர்களுக்கு அருள் புரிவாயப்பா
கதிர்வேலா என்றழைத்தாள் கண்ணிழந்த குருடனுக்குப்
பார்வை தருவானப்பா... உன் பக்தர்களின் வேதனை
நீக்கிட அருள் புரிவாயப்பா...!

சிந்து சிவதாஸ், சுதுமலை.

## நல்லூர் கந்தன் அநுபூதி

பாடும் மெனையாண் டுதுயர் களைவாய்
கூடும் பலவா றுநலம் பொழிவாய்
தேடு மெனுளத் திலுறைந் துதினம்
சூடும் புகழ்சேர்த் திடுநல்.லூரா!

கலாபூஷணம், சந்தக் கவிஞர். நவ.பாலகோபால்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சர்வதேச சவால்களுக்கு பதிலளிக்க இராஜதந்திரிகளுக்கு பயிற்சி தேவை

## பேராசிரியர் ரொஹான் தெரிவிப்பு

(கொழும்பு)

**இலங்கை சர்வதேச ரீதியான சவால்களை எதிர்நோக்கி வருவதாக சர்வதேச பயங்கரவாத ஒழிப்புக்காக குரல் கொடுத்து வரும் பேராசிரியர் ரொஹான் குணரட்ன தெரிவித்துள்ளார்.**

இரத்மலான ன கொதலாவல பாதுகாப்பு பல்கலைக்கழகத்தில் நடைபெற்ற கருத்தரங்கொன்றில் கலந்து கொண்டபோதே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் தொடர்ந்து கூறுகையில், யுத்தம் நிறைவுக்குக் கொண்டு வரப்பட்ட தன் பின்னர், அரசாங்கம் உள்நாட்டு விவகாரங்களில் கூடுதல் கவனம் செலுத்திவருகின்றது.

எனினும் சர்வதேச விவகாரங்கள் குறித்து கூடுதல் கவனம் செலுத்த வேண்டிய அவசியம் எழுந்துள்ளதாக அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

இராணுவ மற்றும் பாதுகாப்பு நிறுவனங்கள் வலுவாக காணப்



பட்டபோதிலும் வெளிவிவகார அமைச்சின் நடவடிக்கைகள் பலம் பொருத்தியதாக இல்லை என அவர் குறிப்பிட்டுள்ளார்.

புலிகள் மீளவும் ஒருங்கிணைய முடியாத வகையில் திட்டங்கள் வகுக்கப்பட்டு அமுல்படுத்தப்பட்டுள்ளதாக தெரிவித்துள்ளார்.

எவ்வாறெனினும் சர்வதேச ரீதியாக எழும் சவால்களுக்கு சரியான முறையில் பதிலளிக்கக் கூடிய ஆற்றல் இன்னமும் வளர்த்துக் கொள்ளப்பட வேண்டியிருப்பதாக அவர் குறிப்பிட்டார்.

குறிப்பாக எமது இராஜதந்திரிகளுக்கு விசேட பயிற்சிகள் வழங்கப்பட வேண்டியது அவசியமானது என சுட்டிக்காட்டியுள்ளார்.

தமிழீழ விடுதலைப் புலிகளின் சர்வதேச வலையமைப்பு பிழையான பிரசாரங்களை மேற்கொண்டு வருகின்றது. எதிர்வரும் காலங்களில் இந்தப் பிழையான பிரசாரங்களை தடுத்து நிறுத்தக் கூடிய வகையிலான நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டியது மிகவும் அவசியமானது என பேராசிரியர் சுட்டிக்காட்டியுள்ளார். (அ-2)

# மாத்தளை மனித எச்சங்கள் சீனாவுக்கு அனுப்பி வைப்பு

மாத்தளை பிரதேசத்தில் பாரிய மனித புதைகுழியிலிருந்து மீட்கப்பட்ட எச்சங்கள் சீனாவிற்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளன.

இந்த மனித எச்சங்கள் எந்தக் காலத்திற்கு உரியவை என்று அறிந்து கொள்வதற்காகவே சீனாவிற்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளன.

சீனாவின் பெய்ஜிங் பல்கலைக்கழக விஞ்ஞான பீடத்திற்கு இவை அனுப்பி வைக்கப்பட்டுள்ளன.

மாத்தளை வைத்தியசாலை வளாகத்தில் பாரியளவில் மனித எலும்புக் கூடுகள் மீட்கப்பட்டிருந்தன.

இவை 1988 தொடக்கம் 89 கிளர்ச்சியில் ஈடுபட்ட ஜே.வி.பி. உறுப்பினர்களது சடலங்கள் என அந்தக் கட்சி குற்றம் சுமத்தி வருகின்றது.

உண்மையில் இந்த எச்சங்கள் எந்தக் காலத்திற்குரியவை என்று துல்லியமாக கண்டறியும் நோக்கில் மனித எச்சங்கள் சீனாவிற்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளன.

இதற்கு முன்னர், குறித்த மனித எச்சங்கள் 88 தொடக்கம் 89 ஆம் ஆண்டு காலப்பகுதிக்குரியவை என களனி பல்கலைக்கழகம் அறிவித்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (அ-2)

# இரும்பு பாகங்களை களவாடிய நபருக்கு இருவருட கடூழிய சிறை

(முல்லைத்தீவு)

முல்லைத்தீவு புதுக்குடியிருப்பு பகுதியில் கடந்த 2012 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 29 ஆம் திகதி அன்று வன்னி யுத்தத்தின் போது கைவிடப்பட்ட வாகங்களின் இரும்புப் பாகங்களைக் களவாடியதாக அரச சொத்துக்கள் கட்டளைச் சட்டத்தின் கீழ் குற்றஞ்சாட்டப்பட்ட நபர் ஒருவருக்கு விசாரணையின் பின்னர் 2 வருட கடூழியச் சிறைத் தண்டனை வழங்கி முல்லைத்தீவு மாவட்ட நீதிபதி மாணிக்கவாசகர் கணேசராஜா கடந்த புதன்கிழமை தீர்ப்பளித்துள்ளார்.

போரின் போது கைவிடப்பட்ட வாகனங்களை களவாடுவது முல்லைத்தீவு பகுதியில் அதிகரித்துக் காணப்படுவது இங்கு குறிப்பிடத்தக்கது. (அ-ம)

## ஓடும் ரயிலில் பாய்ந்து ஏறியவரின் கை துண்டிப்பு

(கொழும்பு)

ஓடும் புகையிரதத்தில் பாய்ந்து ஏற முற்பட்ட இளைஞர் ஒருவர் தடுக்கி விழுந்ததில் புகையிரத சில்லினால் அவரது கை துண்டிக்கப்பட்டுள்ளது.

இச்சம்பவம் நேற்றுமுன்தினம் மாலை கொழும்பு கோட்டை புகையிரத நிலையத்தில் இடம்பெற்றது.

கொழும்பு-வவுனியா புகையிரதத்தில் ஏற முற்பட்டபோதே இவ் விபத்து நிகழ்ந்துள்ளது.

இது தொடர்பாக தெரியவருவதாவது,

புகையிரதவண்டி பயணிகள் ஏறுவதற்காக நிறுத்தப்படுவதற்கு முன்பே குறித்த இளைஞர் ஓடிச் சென்று புகையிரதத்தில் ஏற முற்பட்டுள்ளார். சம்பவத்தில் குறித்த இளைஞனின் கைவேறாக துண்டிக்கப்பட்டிருந்தது.

பொதுமக்கள், பொலிஸாரின் உதவியுடன் காயமடைந்த இளைஞனையும் துண்டிக்கப்பட்ட கையினையும் உடனடியாக வைத்திய சாலைக்கு எடுத்துச் சென்றனர். (அ-2)



சுகாதார அமைச்சின் ஏற்பாட்டில் மாபெரும் மருத்துவ முகாமொன்று அண்மையில் சாவகச்சேரி சிவன் கோவிலடி கலைகலாசார மண்டபத்தில் நடைபெற்றபோது...
(படம்:- சாவகச்சேரி செய்தியாளர்)

## மல்லாகச் சந்தியில் விபத்து; இருவர் படுகாயம்!

(யாழ்ப்பாணம்)

மல்லாகச்சந்தி பெற்றோல் நிலையத்திற்கு முன்பாக இரண்டு மோட்டார் சைக்கிள்கள் ஒன்றுடன் ஒன்று மோதி விபத்துக்குள்ளாகின.

இவ் விபத்துச் சம்பவம் நேற்றுமுன்தினம் வியாழக்கிழமை மாலை 4 மணியளவில் இடம்பெற்றுள்ளது.

இது தொடர்பில் மேலும் தெரியவருவதாவது, யாழிலிருந்து கே.கே.எஸ். வீதி நோக்கி பயணித்துக் கொண்டிருந்த மோட்டார் சைக்கிள் கட்டுப்பாட்டை இழந்து, யாழ் நோக்கி பயணித்துக் கொண்டிருந்த மோட்டார் சைக்கிளுடன் மோதியதிலேயே இவ் விபத்து இடம்பெற்றுள்ளது.

இதில் மோட்டார் சைக்கிளில் பயணித்த இருவரும் படுகாயமடைந்த நிலையில் தெல்லிப்பழை ஆதார வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். (அ-9)

# சந்தேக நபருக்கு பதிலாக ஆள்மாறாட்ட நபர் ஆஜர்

நீதிமன்ற வழக்கு விசாரணையின் போது சந்தேக நபருக்கு பதிலாக ஆள் மாறாட்டம் செய்து நீதிமன்றத்தை அவமதித்த குற்றச் சாட்டின் பேரில் அந்நபருக்கு நீதவான் ஒருவருட கடூழியச் சிறைத்தண்டனையையும் 15 ஆயிரம் ரூபா அபராதமும் விதித்துள்ளார்.

குருணாகல் நீதவான் நீதிமன்றத்தில் கடந்த 21 ஆம் திகதி நீதவான் ரவீந்திர பிரேமரட்ன முன்னிலையில் இத்தீர்ப்பு வழங்கப்பட்டது.

போலியான அனுமதிப் பத்திரத்துடன் கடற் சிப்பிகளின் ஓடுகளை சட்டவிரோதமாக வாகனம் ஒன்றில் ஏற்றிச் சென்ற நபர் ஒருவருக்கு எதிராக பொலிஸார் வழக்கு தொடர்ந்



திருந்தனர்.

இவ்வழக்கு விசாரணை சந்தேக நபருக்கு பதிலாக வேறொரு நபர் மோசடியான வகையில் நீதிமன்றத்திற்கு அவமதிப்பை ஏற்படுத்தும் வகையில் ஆள் மாறாட்டம் செய்த குற்றத்தை ஒப்புக் கொண்டார்.

இதனையடுத்து நீதவான் ஒரு வருட கடூழியச் சிறைத்தண்டனையும் 15 ஆயிரம் ரூபா அபராதமும் விதித்து தீர்ப்பு வழங்கினார். (அ-2)

# பொதுநலவாய மாநாட்டில் இந்தியா பங்கேற்க கூடாது


## நடிகர் சரத்குமார் வலியுறுத்து

(சென்னை)

இலங்கையில் நடைபெறவுள்ள பொதுநலவாய நாடுகளின் தலைவர்கள் மாநாட்டில் பிரதமர் கலந்து கொள்ளக்கூடாது என சரத்குமார் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக அகில இந்திய சமத்துவ மக்கள் கட்சி தலைவர் ஆர்.சரத்குமார் வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறியிருப்பதாவது,

இலங்கை அரசுக்கு நமது எதிர்ப்பையும் கண்டனத்தையும் தெரிவிப்பதற்கான ஒரு வாய்ப்புதான், இலங்கையில் நடைபெறவுள்ள பொதுநலவாய நாடுகளின் தலைவர்கள் மாநாட்டில் [illegible]



காரத்திற்காக இந்திய அரசு பங்கேற்கவில்லை என்று தெரியவரும் போதுதான் ஏனையநாடுகளும் தங்கள் கண்டனத்தை பதிவு செய்வதற்கான ஒரு வாய்ப்பும், சூழ்நிலையும் உருவாகும்.

இந்த முடிவு எதிர்வரும் காலத்திலாவது இலங்கை அரசு ஈழத் தமிழர்கள் வாழ்வில் அக்கறை கொண்டு செயற்படுவதற்கான அச்ச உணர்வையும், சூழ்நிலையையும் உருவாக்கும்.

எனவே, இலங்கையில் நடைபெறவிருக்கும் பொதுநல்வாய நாடுகளின் தலைவர்கள் மாநாட்டில் இந்திய பிரதமர் பங்கேற்கக் கூடாது.

இந்தியாவின் பிரதிநிதித்துவம் கூட இருக்கக்கூடாது. இதற்கான காரணம் ஈழத்தமிழர்களுக்கு எதிரான இலங்கை அரசின் வன்செயல்கள் என்பதாக இருக்க வேண்டும் என்று சமத்துவ மக்கள் கட்சியின் சார்பில் மத்திய அரசை வலியுறுத்திக் கேட்டுக்கொள்கிறேன் என அவர் குறிப்பிட்டுள்ளார். (ஸ்ரீ-2)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org



# சிறுவர் அரங்கம்

555

## குதிரைக் குட்டி பறந்தது



"குதிரை முட்டை மிகவும் கனமாக உள்ளது. எப்படிச் சுமந்து செல்வது?" என்று கேட்டான் மூடன். "நாம் இருவரும் மாறி மாறித் தலையில் சுமந்து செல்வோம் அப்பொழுதுதான் எளிதாக இருக்கும்" என்றான் மட்டி. அதன்படியே இருவரும் சுமந்து சென்றனர். "இந்தக் குதிரை முட்டையே இவ்வளவு கனமாக உள்ளதே. இதிலிருந்து வரும் குட்டி எவ்வளவு கனமாக இருக்கும்?" என்று கேட்டான் மட்டி.

"நன்றாக அடைகாத்துக் குதிரைக் குட்டி வரட்டும். அதன் பிறகு பார். நம் மடத்தின் பெருமையே உயரப் போகிறது" என்றான் மூடன். குறைவான விலைக்குக் குதிரை முட்டையை வாங்கிவிட்டோம். மடத்தில் எல்லோரும் நம்மைப்புகழப்போகிறார்கள்" என்றான் மட்டி. இவ்வாறு பேசிக் கொண்டே இருவரும் நடந்தார்கள்.

மட்டியின் தலையில் கிடந்த பெரிய கல்லை அவன் கவனிக்கவில்லை. அந்தக் கல் தடுக்கியதால் கீழே விழுந்தான். பூசணிக்காய் உருண்டு ஓடியது. அருகிலிருந்த புதரில் முயல் ஒன்று இருந்தது. சத்தத்தைக் கேட்டு அது ஓட்டம் பிடித்தது. இதைப் பார்த்த மூடன் ," ஐயோ! முட்டைக்குள் இருந்த குதிரைக்குட்டி வேகமாக ஓடுகிறது" என்ற அலறினான்.

இருவரும் முயலைத்துரத்தினார்கள். சிறிது நேரத்தில் அந்த முயல் அவர்கள் கண்களில் இருந்து மறைந்தது. குதிரைக்குட்டி இவ்வளவு வேகமாக ஓடுகிறதே. எப்படியும் அதைப் பிடித்தே ஆகவேண்டும். விடக்கூடாது என்று கத்திக் கொண்டே ஓடினான் மட்டி.

இருவரும் அங்கிருந்த புதர்களில் எல்லாம் நுழைந்து தேடினார்கள். முட்கள் குத்தியதால் அவர்கள் உடலெங்கும் காயம் ஏற்பட்டது. வலி தாங்காமல் அவர்கள் துடித்தார்கள். "குதிரைக் குட்டி கிடைக்காது. இனி அதைத் தேடுவதில் பயன் இல்லை. மடத்திற்குத் திரும்புவோம்" என்றான் மடையன்.

உடலெங்கும் காயத்துடன் இருவரும் மடத்திற்கு வந்தார்கள். அவர்களின் கோலத்தைக் கண்ட குரு திடுக்கிட்டார். "என்ன நடந்தது? தோட்டக்காரன் குதிரை முட்டை தர வில்லையா? பணத்தைப் பிடுங்கிக் கொண்டு அடித்து விரட்டிவிட்டானா?" என்று பரபரப்புடன் கேட்டார்.

"இல்லை குருவே" என்றான் மூடன். போகும் வழியில் திருடர்களிடம் சிக்கிக் கொண்டீர்களா?" "இல்லை குருவே" மட்டி என்றான் மட்டி. மற்ற சீடர்களும் அங்கு வந்தார்கள்."குதிரை முட்டை வாங்கவே இல்லையா? என்ன நடந்தது? சொல்லுங்கள்" என்று கேட்டார் குரு.

"குருவே! நாங்கள் சென்று அந்தத் தோட்டக்காரனைச் சந்தித்தோம். ஆனால், அவனோ குதிரை முட்டைக்கு அதிக பணம் என்றான். உங்கள் சீடர்களாகிய நாங்களா விடுவோம்? உங்கள் பெயரைச் சொல்லிக் கெஞ்சினோம். நான்கு பணத்திற்கு ஒப்புக்கொண்டான். பெரிய குதிரை முட்டை ஒன்றை வாங்கினோம்" என்றான் மூடன்.

"உங்கள் திறமை யாருக்கு வரும்? பிறகு என்ன நடந்தது? "என்று மகிழ்ச்சியுடன் கேட்டார் அவர்.அந்தக் குதிரை முட்டையை எங்களால் தூக்க முடியவில்லை. எப்படியோ முயற்சி செய்து மாறி மாறித்தூக்கி வந்தோம். உங்களிடம் காட்ட வேண்டும் என்பதற்காக வழியில் இளைப்பாறவில்லை. வேகமாக நடந்துவந்தோம். அப்பொழுதுதான் அந்த அதிசயம் நடந்தது. அதை என் இரு கண்களாலும் பார்த்தேன்" என்றான் மூடன்.

"என்ன அதிசயம்?" என்று பரபரப்புடன் கேட்டார் அவர். என்னிடம் இருந்த குதிரை முட்டையை வாங்கினான் மட்டி. அதைத் தலையில் சுமந்தபடி நடந்தான். வழியிலிருந்த கல் தடுக்கிக் கீழே விழுந்தான்.

அவன் தலையில் இருந்த குதிரை முட்டை உருண்டு கொண்டே சென்றது. அருகில் இருந்த புதரில் மோதி உடைந்தது. அப்பொழுதுதான் அந்த அதிசயம் நடந்தது.முட்டைக்குள் இருந்து குதிரைக்குட்டி வெளியேவந்தது. வேகமாக ஓடத்தொடங்கியது. அங்கிருந்த புதர்களுக்குள் நுழைந்தது.

அதை நான் நன்றாகப் பார்த்தேன். பால் போன்று வெள்ளைநிறம். இரண்டு சிறிய காதுகள். நான்கு கால்கள். பார்ப்பதற்கு மிக அழகாக இருந்தது" என்றான் அவன்.

"ஆ! குதிரைக் குட்டி அப்படியா இருந்தது? என்று மகிழ்ந்தார் அவர். பிறகு என்ன நடந்தது?" என்று கேட்டார். "நாங்களும் அங்கிருந்த புதர்களில் எல்லோரும் நுழைந்து தேடினோம். முட்கள் கிழித்து உடலெங்கும் காயம்தான் ஏற்பட்டது. குதிரைக் குட்டி கிடைக்கவே இல்லை. ஏமாற்றத்துடன் இங்கு வந்தோம்" என்றான் அவன். "குதிரைக் குட்டி தப்பித்து ஓடி விட்டதே. கிடைத்து இருந்தால் நன்றாக இருக்குமே" என்று வருத்தப்பட்டான் மிலேச்சன்.

"எல்லாம் நன்மைக்குத்தான் நடந்து உள்ளது. குட்டியிலேயே அது இவ்வளவு வேகம் ஓடியுள்ளது.

### பரமார்த்த குரு கதைகள்

சீடர்களான உங்களாலேயே அதைப் பிடிக்க முடியவில்லை. பெரிய குதிரையானால் அது இவ்வளவு வேகம் ஓடும்? முதியவனான என்னால் அதன் மேல் பயணம் செய்ய முடியுமா? என்னைக் குப்புறத் தள்ளி மிதித்து இருக்கும். குதிரைக் குட்டி போனதற்காக கவலைப்பட்டவேண்டாம்"



என்று ஆறுதல் சொன்னார் அவர்.

சீடர்கள் அனைவரும் "முக்காலமும் உணர்ந்த குருவாழ்க என்று முழக்கம்" செய்தார்கள். "குதிரைக்குட்டி ஓடியதும் நல்லதற்கே" என்று எல்லோரும் மகிழ்ச்சி அடைந்தார்கள்.

தொடரும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


# தாய்பாதம்



## ஆன்மீகம் 95

இயங்க மறுத்தன உள்ளமும் உடலும். அதே நேரம் என் பின் பக்கம் யாரோ என்னை பேர் சொல்லிக் கூப்பிடவும் திரும்பினேன்! அங்கு சித்தர் பெருமான் தன் படுக்கையில் எனக்கு முதுகைக் காட்டியவாறு அமர்ந்திருந்தார். இதைக் கண்ட நான் ஒரு நிமிடம் அசந்துபோனேன். மனதைச் சற்று நிதானப்படுத்திக்கொண்டு ஆசானை நெருங்கினேன். அவர் முன்போய் நின்றேன். அவரோ ஏதுமறியாதவர் போல் என்ன ராஜா! தூக்கம் வர வில்லையா? என்று கேட்டார். நான் அந்த குடுகுடுப்பை ஒலியைப் பற்றி விபரம்கேட்டேன். அதற்கு அவர் அது ஒரு பெரிய மலைப்பாம்பின் ஒலி என்றார். அருகிலே கேட்கிறதே என்றேன். ஆம் மிக அருகிலே தான் இருக்கிறது. நம்மை - நலமா? என்று குசலம் விசாரிக்கிறது என்ற சித்தர் பெருமான் சிரித்தவாறே போய்விடு! காலையில் புறப்பட வேண்டும் என்றார். எப்படி சாமி நிம்மதியா தூங்க முடியும் பக்கத்திலே பாம்பை அதுவும் பெரிய மலைப்பாம்பை வைச்சிட்டு எப்படி தூங்க முடியும். நாம் தூங்கும் போது அது நம்மளை விழுங்கிடாதா? என்றேன் அச்சத்துடன். அது கேட்டுக் குழந்தை போல் குலுங்கிக் குலுங்கி சிரித்தார். கவலைப்படாதே அவர் உங்களிடம் வரமாட்டார். இவர் மட்டுமல்ல வேறு எந்த மிருகமோ - பாம்போ உங்களை நெருங்காது. அதோடு நெருப்பைக் கண்டால் எதுவும் கிட்டவராது. ஆனால் இங்குள்ள சித்தர்கள் பெரியவர்கள தான் வந்து போவார்கள் என்றார். நானும் ஆசானே கதி என்று அவரிடம் பாரத்தைப்போட்டுவிட்டு படுத்தேன். அடுத்த கணம் எனக்குத் தெரியாது உதய சூரியன் வருகைக்கான பறவைகளில் உதயகானம் தான் என்னை எழுப்பியது.

காலைக்கடன்களை முடித்து ஈர உடைகளுடன், எங்களுடன் வந்தவர்களில் சிலர் சித்தர் பெருமானை அடைந்து அவர் எதிரில் பணிவுடன் நின்றார்கள். இதைக் கண்டு புரியாதவனாக நானும் அவரை நெருங்கி நின்றேன். நிமிர்ந்து பார்த்த சித்தர் என்னை இப்படி ஈர உடையுடன் வந்து என்ன விடயம் என்று வினவினார். அதற்கு ஒருவர் வினயத்துடன் சாமி எங்களுக்கு தீட்சை கொடுங்கள் என்நறார். இதைக்கேட்ட சித்தர் பலமாக சிரித்தார். எல்லோரும் அவரை அச்சத்துடன் நோக்கினார்கள். கேட்டது தவறோ என்று வினா அவர்கள் முகங்களில் பளிச்சிட்டது. நகைத்துமுடித்தவர் எல்லோரையும் ஒருமுறை உற்று நோக்கினார். அவர் முகத்தில் காணப்பட்ட சிரிப்பு மறைந் தது. முகம் சருங்கியது! என்ன கேட்டீர்கள் தீட்சையா? என்று கேட்கவும், ஆமாம் சாமி என்றார் ஒருவர் பதிலுக்கு. அடுத்த கணம் சவுக்கடி போல் வந்து விழுந்தன.



தாய்பாதத்தில் அன்னை சித்தர்

சித்தரின் வார்த்தைகள், யாருக்கு யார் தீட்சை கொடுப்பது இக்காலத்து குருவேது, சிஷ்யனது அந்தத் தர்மங்கள் மறைந்து காலம் பலவாகிறது. குரு சிஷ்யனுக்கே போட்டி ஏற்படும் காலமிது. காரணம் எல்லாமே, வியாபாரமாகிவிட்டது. குருவின் செல்வநிலை கண்டு தானும் அது போல வாழவேண்டும் என்ற எண்ணம் குருவின் போக்கறிந்த சிஷ்யனுக்கும் ஏற்படுகிறது. அவன் தனி கடைதிறந்து கொள்ளுகிறான். அவனுக்கும் எல்லாம் மனம் போல வாய்க்கின்றது. நல்ல காலம் முடியும் போது எல்லாமே முடிந்து விடும். கடைசியில் சட்டத்தின் கையில் மாட்டிக் கொண்டு விடுகிறார்கள் என்றார்.

இது கேட்டு திகைத்து போனவர்களாய் தீட்சை கேட்டவர்கள் வீழ்ச்சியடைந்து விரர்களைப்போல தலை குனிந்து விலகிச் சென்றனர்.அப்போது சித்தர் பெருமான் என்ன ராஜா? அப்படியே நின்றுட்டே? எனவும் நானும் சிரித்தவாறே உனக்கு ஒரு கதை தெரியுமா? என்று கேட்டார். நான் அவரையே பார்த்து நின்றேன்.


தொடரும்

அன்னை சித்தர்
இராஜ்குமார் குருஜி

# தமிழ் தனி ஈழ அரசு என்ற தீர்வுக்கு மாற்று...?

### 13- வது திருத்தம்

இனவாத அரசை ஆதரிக்கும் தங்களது இந்த ஒருசார்பு செயற்பாட்டை மறைத்து, அதற்காக நாட்டின் ஒற்றுமை- இனங்களின் ஒற்றுமை என்ற உயர்ந்த நல்லெண்ணத்தின் பாற்பட்ட தீர்வாக பொய் முகமூடி போட்டுக் காட்டுகின்றனர். இவர்களில் இந்தியாவின் இடதுசாரிகளுக்கும் இடதுசாரி சிந்தனையாளர்கள் என்று தங்களை கூறிக் கொள்பவர்களும் அடங்குவர்.



அவர்களில் இந்தியாவின் முன்னாள் குடியரசுத் தலைவர் திரு.அப்துல் கலாமும் ஒருவர். அவர், தன்னுடைய இலங்கை சுற்றுப்பயணத்தின் போது ஐரோப்பாவிவல் பல வேறு இனங்கள், தங்களுக்கு இடையேயான கடந்த கால பகைமையை மறந்துவிட்டு, ஐரோப்பிய ஒன்றியம் என்று ஒர அரசியல் ஏற்பாட்டில் ஒற்றுமையுடன் தற்போது வாழ்ந்து வருவதை உதாரணம் காட்டினார். ஆனால், அத்தகைய ஒற்றுமையை எவ்வாறு சாத்தியமானது? எத்தகைய அரசியல் ஏற்பாடுகளின் மூலம் அதனை உருவாக்க முடிந்தது. அதற்காக உருவாக்கப்பட்டுள்ள அரசியல் நிறுவனங்கள் யாவை? இவை பற்றி, அவர் எதுவும் தெரிவிக்கவில்லை. பாவம், அவரால் இந்தியாவை உதாரணமாகக் காட்டவில்லை.! அவரது ஊரான இராமநாதபுரத்திற்கு குடிநீராக வரும் முல்லைப் பெரியாறு நீரினை தரமாட்டோம் என்று கேரளா தடுப்பதையோ அப்பிரச்சினையை தீர்க்க இந்திய நடுவண் அரசு கையாலாகாத ஒர் அரசாக இருக்கிறது என்பதைக் குறித்தோ அரசியல் சிக்கல்களுக்கு தீர்வு காண திராணியற்ற இந்திய அரசுதான், ஈழ பிரச்சினைக்கும் தீர்வு கண்டு தரப் போவதாக நம்மை நம்ப வைக்க முயன்றார். அணு உலை, அணு மின்சாரம் மற்றும் அணு ஆயுதம் குறித்தெல்லாம் சாதாரண மக்களுக்கு எதுவும் தெரியாபது என்பது போன்றே மேற்படி அரசியல் சிக்கல்களுக்கான தீர்வுகளையும் மக்கள் அறியமாட்டார்கள் என்ற மக்களின் அறியாமையை பயன்படுத்துவதுதான் அவரது இந்த கருத்தும்.

இனங்களின் ஒற்றுமை என்ற கருத்தும் சமத்துவம் என்ற சட்டக் கருத்து போன்றதுதான். சமநிலையில் இருப்பவர்களைத்தான் சமமாக பாவிக்க முடியும். சமமற்றவர்களை சமமாக பாவித்தால், சமத்துவமின்மை தானே நிகழும்? அது போன்றுதான், ஒரு தேசிய இனம் மற்றொரு தேசிய இனத்தாரால் ஒடுக்கப்படும் போது அந்த ஒடுக்கப்படும் இனத்தின் அரசியல் உரிமைகளுக்கு முதன்மை அளிக்கவேண்டும். அப்பொழுது இன்னங்களின் சுமூகம் மற்றும் ஒற்றுமை என்பது பேசுவது உண்மையில் ஒடுக்கிவரும் ஒரு இனத்தின் தர்பை ஆதரிப்பதாகவே இருக்கும்.

மஹிந்த ராஜபக்ச, முழு இலங்கையருக்கும் சொந்தமானது என்று சமத்துவ பாசாங்கு பேசிக்கொண்டு, முழு தீவையும் சிங்கள மக்களின் ஆதிக்கத்திற்கும் சிங்கள இராணுவத்தின் கட்டுப்பாட்டிற்கு உட்படுத்தி வரும் நயவஞ்சகம் எவ்வளவு சூழ்ச்சி மிக்கதோ அதே அளவு சூழ்ச்சியுடன் த்மிழ் ஈழ மக்களின் விடுதலையை மறுத்து இலங்கை ஒருமைப்பாட்டை முதன்மைப்படுத்தி வரும் சிங்கள ஆதரவு இந்திய அரசியல் கரல்களும், தங்களது சிங்கள ஆதரவினை. இனங்களுக்கிடையே சுமூகம் மற்றும் ஒற்றுமை என்ற கருத்துகளில் தான் மூடிமறைக்கின்றன.

இவ்விடத்திலும் ஒரு எதிர் மறையான உதாரணம் அவசியமாகிறது. தங்களது நாட்டுடன் நெருங்கிய பண்பாட்டு உறவு கொண்ட நாடு என்றும் தங்களது நலன்கள் நெருக்கமானவை என்றும் இந்தியாவும் இலங்கையும் கூறிக்கொள்கின்றன. சமீபத்தில் மத்திய பிரதேசம் காஞ்சியில் ஒரு புத்த மத நிகழ்விற்கு மஹிந்த ராஜபக்ச முக்கிய அரசு விருந்தினராக அழைக்கப்பட்டது அனைவரும் அறிந்ததே. பல்லாயிரக் கணக்கான கோடிகளில் இந்தியாவிடமிருந்து இலங்கைக்கு உதவிகள் செல்கின்றன. சமீபத்தில் இந்தியாவிற்கான இலங்கைத்தூதர் காரியாவம்சம், சிங்களவர்கள் இந்தி இனத்தாரின் ரத்தவகையை சார்ந்தவர்கள் என்று உறவு பாராட்டியது குறிப்பிடத்தக்கது. இந்தியாவுடன் இவ்வளவு நெருக்கம் கொண்ட இலங்கை நாடு, அந்நாட்டின் மக்கள் தொகையை விட பல மடங்கு மக்கள் தொகை கொண்ட இனத்தார்கள் இந்தியாவின் அரசியலமைப்புச் சட்டத்தில் வழங்கப்பட்டுள்ள உரிமைகளை பெற்று வாழ்வதைப்போன்று இந்தியாவின் ஒரு மாநிலமாக சேர்ந்துகொண்டு அரசியல் வாழ்வு வாழலாமே என்று இந்திய ஆட்சியாளர்கள் இலங்கையிடம் கேட்கலாமே? இலங்கை சுற்றுப்பணத்தின் போது அப்துல்காம் இவ்வாறு கேட்டிருக்கலாமோ?

அதற்கு அந்நாட்டின் அரசு ஒப்புக்கொள்ளுமா? சிங்களவர்கள் ஒப்புக்கொள்வார்களா? அப்பொழுது தனி நாட்டுரிமை என்ற கூட்டு உரிமையின் மதிப்பு குறித்து மட்டும் எடுத்துரைக்க மாட்டார். அதன் தேவைகுறித்தும் தெளிவாக எடுத்துரைப்பர்.

தொடரும்

ஆய்வாளர் சு. அருணாச்சலம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வெலிவேரிய இராணுவ விசாரணை அறிக்கை இராணுவ தளபதியிடம்

(கொழும்பு)

வெலிவேரிய பிரதேசத்தில் அண்மையில் இடம்பெற்ற துப்பாக்கிச் சம்பவம் தொடர்பில் நியமிக்கப்பட்ட இராணுவ நீதிமன்றத்தினால் மேற்கொள்ளப்பட்ட விசாரணை அறிக்கை இராணுவத் தளபதி லெப்டினன்ட் ஜெனரல் தயா ரத்னாயக்கவிடம் கையளிக்கப்பட்டுள்ளது.

இராணுவ விசாரணை நீதிமன்றத்தின் தலைவராக நியமிக்கப்பட்ட மேஜர் ஜெனரல் ஜகத் டயஸ் தலைமையிலான குழுவினரால் இந்த விசாரணை அறிக்கை கொழும்பிலுள்ள இராணுவத்தலைமையகத்தில்வைத்து கடந்த 21 ஆம் திகதி மாலை உத்தியோகபூர்வமாக இராணுவத் தளபதியிடம் கையளிக்கப்பட்டதாக இராணுவப் பேச்சாளர் பிரிகேடியர் ருவன் வணிகசூரிய தெரிவித்துள்ளார்.

இராணுவ நீதிமன்றத்தின் விசாரணை அறிக்கையை முழுமையாக ஆராய்ந்த பின்னர் இராணுவத் தளபதி லெப்டினன்ட் ஜெனரல் தயா ரத்நாயக்க இந்த விடயம் தொடர்பில் தீர்மானத்தை மேற்கொள்வார் என்று அவர் மேலுத் தெரிவித்தார்.

வெலிவேரிய பிரதேச மக்கள் தங்களது குடிநீரில் தொழிற்சாலை ஒன்றிலிருந்து வெளியாகும் இரசாயனம் கலந்துள்ளதாக கூறி கடந்த முதலாம் திகதி பாரிய ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர். இதன்போது ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்ட பொது மக்களுக்கும் படையினருக்கும் இடையில் மோதல் நிலை உருவானது.

இந்த சம்பவத்தின் போது படுகாயமடைந்து வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டிருந்தவர்களில் மூவர் உயிரிழந்தனர்.

இந்தச் சம்பவத்தை அடுத்து இது தொடர்பில் விரிவாக ஆராய்ந்து விசாரணை அறிக்கை ஒன்றை சமர்ப்பிக்கும் பொருட்டு இராணுவத் தளபதி லெப்டினன்ட் ஜெனரல் தயா ரத்னாயக்கவினால் கடந்த 2 ஆம் திகதி மேஜர் ஜெனரல் ஜகத் டயஸ் தலைமையில் இராணுவ விசாரணை நீதிமன்றம் நியமிக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (அ-2)

# பூமியை நோக்கி வருகிறது சூரியப்புயல்; தொ.தொ.சாதனங்களைப் பாதிக்கும்?

சூரியனிலிருந்து நேற்று முன்தினம் அதிகாலை வெளிப்பட்ட சூரியப் புயல் பூமியை நோக்கி வருகின்றது எனவும் இதனால் பூமிக்கு நேரடி பாதிப்பு இல்லை என்றாலும் தொலைத்தொடர்பு சாதனங்களுக்கு பாதிப்பு ஏற்படலாம் என்று நாசா ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

சூரியப்புயல் நிகழ்வு பல ஆண்டுகளுக்கு ஒருமுறை நடைபெறும் ஒரு நிகழ்வுதான். சூரியனின் மேற்புறத்தில் பல்வேறு வேதியியல் மாற்றங்களால் சூரியக் கதிர்கள் பெருமளவில் கொந்தளித்துக் காணப்படும். சூரிய காந்தப் புயல் மூன்று விதத்தில் நிகழும்.

முதலில் மின்காந்தத் தூண்டல் கதிர்வீச்சும், இரண்டாவதாக புரோட்டன்கள் நிறைந்த அதிர்வலையால் கதிர் வீச்சும், மூன்றாவதாக சூரியனின் கரோனா என்ற மேற்புறத்தில் இருந்து எழும் பிளாஸ்மா கதிர் வீச்சும் அடுத்தடுத்து பூமியை நோக்கி வரும்.

இதனால் சூரியனிலிருந்து அதி சக்தி வாய்ந்த வெப்பம் வெளிப்பட்டு பூமியை நோக்கி வருகிறது. இது விநாடிக்கு 570 மைல் என்ற வேகத்தில் வெளிவருகிறது. பூமியை வந்தடைவதற்கு ஒன்றுமுதல் மூன்று நாட்கள் ஆகும். இதனால் பூமிக்கு எவ்விதப் பாதிப்பும் ஏற்படாது. ஆனால், உலக நாடுகள் விண்வெளியில் அதிகளவிலான செயற்கைக்கோள்களை நிலைநிறுத்தியுள்ளன.

இச்செயற்கைக்கோள்கள்மூலம் தான் தொழில்நுட்ப பயன்பாட்டை நாம் பெற்றுக்கொண்டிருக்கிறோம். பூமியில் இருந்து வெளிவரும் சூரியப்புயலால் செயற்கைக்கோள்கள் பாதிக்கும் அபாயம் ஏற்பட்டுள்ளது.

ஆனால், 1989 ஆம் ஆண்டு சூரியப்புயல் கனடாவைத் தாக்கியது. இது அங்கு பெரும் பாதிப்பை ஏற்படுத்தியது. (அ-2)

## இலவச கண்சிகிச்சை மருத்துவ முகாம்

சம்பத் வங்கியின் யாழ்ப்பாணக் கிளையின் 4 ஆவது வருட நிறைவை முன்னிட்டு, Vision Care ஸ்தாபனத்துடன் இணைந்து நடத்தும் இலவச கண் சிகிச்சை மருத்துவ முகாமொன்று இன்று சனிக்கிழமை காலை 9 மணிதொடக்கம் பிற்பகல் ஒரு மணி வரை சம்பத் வங்கியின் யாழ்ப்பாணக்கிளையில் நடைபெறவுள்ளது.

எனவே, ஆலோசனை பெற விரும்பும் அனைவரும் அன்றைய தினம் இவ் இலவச கண் சிகிச்சை முகாமில் பங்கேற்று பயனடையுமாறு கேட்கப்பட்டுள்ளனர். (அ-2)

# வவுவில் கூட்டமைப்பின் தேர்தல் பிரசாரம்

(பூந்தோட்டம்)

தமிழ்த் தேசிய கூட்டமைப்பின் முதற்கட்ட பிரசாரம் வன்னி பாராளுமன்ற உறுப்பினர் சிவசக்தி ஆனந்தன் தலைமையில் நாளை ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 3 மணிக்கு வவுனியா குருமன்காடு கலைமகள் விளையாட்டரங்கில் நடைபெறவுள்ளது.

இப்பிரசார நிகழ்வில் தமிழ்த் தேசிய கூட்டமைப்பின் தலைவர் இரா. சம்பந்தன், முதன்மை வேட்பாளர் சி.வி. விக்னேஸ்வரன் மற்றும் பாராளுமன்ற உறுப்பினர்களான மாவை சேனாதிராசா, க.சுரேஷ் பிரேமச்சந்திரன், அ.செல்வம் அடைக்கலநாதன், முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர்களான வீ.ஆனந்தசங்கரி, தர்மலிங்கம் சித்தார்த்தன் உட்பட தமிழ்த் தேசிய கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர்களும் கலந்து கொள்ளவுள்ளனர்.

இந்நிகழ்வில் வவுனியா மாவட்டத்தில் தமிழ்த் தேசிய கூட்டமைப்பு சார்பில் போட்டியிடும் ஒன்பது வேட்பாளர்களின் அறிமுக நிகழ்வுடன் வவுனியாவில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் முதலாவது பிரசாரம் ஆரம்பமாகுமென சிவசக்தி ஆனந்தன் எம்.பி. தெரிவித்துள்ளார். (அ-266)

# தேர்தல் ஆணையாளர் வவுனியாவுக்கு விஜயம்

(பூந்தோட்டம்)

வட மாகாண சபைத் தேர்தல் இடம்பெறவுள்ள நிலையில் தேர்தல் ஆணையாளர் மஹிந்த தேசப்பிரிய நேற்று முன்தினம் வவுனியா தேர்தல் அலுவலகத்திற்கு விஜயம் செய்துள்ளார்.

வவுனியாவில் தேர்தல் பிணக்குகள் தொடர்பில் உதவி தேர்தல் ஆணையாளரிடம் கேட்டறிந்து கொண்ட அவர் வவுனியா மாவட்டத்தில் தேர்தல் நிலைமைகள் தொடர்பில் கலந்துரையாடியிருந்தார்.

இதனையடுத்து ஊடகவியலாளர்களுக்கு கருத்து தெரிவித்த அவர்,

சுதந்திரமானதும் நீதியானதுமான தேர்தல் இடம்பெறும் என்பதில் எவ்வித ஐயப்பாடுகளும் இல்லை. அவ்வாறு நடைபெறுவதற்கு அனைத்து தரப்பினரும் தங்களது ஒத்து ழைப்புக்களை வழங்க வேண்டும்.

இராணுவம் தேர்தல் செயற்பாடுகளை குழப்புவதாக தெரிவிக்கப்படுவதில் உண்மையில்லை. அவ்வாறான முறைப்பாடுகள் சிவில் அமைப்புக்களிடம் இருந்து இது வரை கிடைக்கவில்லை. எனவே, ஆதாரமற்ற அவ்வாறான முறைப்பாடுகள் போலியானவையாகவுள்ளன.

இதேவேளை, தேர்தல் வன்முறை சம்பவங்கள் தொடர்பாக பொலிஸில் அதிகளவு முறைப்பாடுகள் கிடைக்கவில்லை. அபேட்சகர்களுக்கு ஏற்படும் பிரச்சினைகள் தொடர்பில் முறைப்பாடுகள் கிடைக்கப் பெற்றுள்ளபோதிலும் அவை தொடர்பில் விசாரணை நடத்துமளவிற்கு அமைய விடயங்கள் அல்ல. எனினும் பொலிஸார் வன்முறைச் சம்பவங்கள் இடம்பெறுகின்றனவா என்பதில் அவதானமாக உள்ளனர். எனினும் இதுவரை அவ்வாறான பெரியளவான சம்பவங்கள் இடம் பெறவில்லை.

அத்துடன் அபேட்சகர்கள் அனைவரும் தேர்தல் சட்டதிட்டங்களுக்கு அமைவாக நாட்டின் எப்பகுதிகளுக்குச் சென்றும் தனது பிரசார செயற்பாடுகளில் ஈடுபடுவதற்கு முழு சுதந்திரமும் வழங்கப்பட்டுள்ளது எனவும் தெரிவித்தார். (அ-2-266-250)

# புனித ஹஜ்ஜுக்காக செல்பவர்களிடம் நான்கு இலட்சம் ரூபா அறவிட வேண்டும்

புனித ஹஜ்ஜுக்காக இம்முறை சவுதி அரேபியா செல்லும் ஹாஜிகளிடமிருந்து ஒருவருக்கு நான்கு இலட்சம் ரூபா மாத்திரமே அறவிட வேண்டுமென முகவர்களுக்கு சிரேஷ்ட அமைச்சர் ஏ.எச்.எம்.பௌஸி உத்தரவிட்டுள்ளார்.

இத்தொகைக்கு மேலாக அறிவிடும் முகவர்கள் குறித்து முஸ்லிம் சமய திணைக்களத்தில் ஹாஜிகள் முறையிட முடியும் எனவும் அமைச்சர் தெரிவித்துள்ளார்.

அவரது அமைச்சில் நடைபெற்ற ஊடகவியலாளர் மாநாட்டில் வைத்தே மேற்கண்ட தகவலை அமைச்சர் கூறியுள்ளார். அவர் அங்கு மேலும் கருத்துத் தெரிவிக்கையில்,

வழமையைவிட இம்முறை ஹஜ் பயணிகளின் எண்ணிக்கை குறைவாக இருப்பதனால் புனித மக்கா மற்றும் மதீனாவில் செலவுகள் குறைவென எதிர்பார்க்கப்படுகிறது. இம்முறை 91 முகவர்களுக்கு 2 ஆயிரத்து 240 ஹஜ் கோட்டாக்கள் பகிர்ந்தளிக்கப்பட்டுள்ளன.

அத்துடன் இம்முறை இலங்கையில் இருந்து 2 ஆயிரத்து 240 பேருக்கு மட்டுமே ஹஜ் செல்வதற்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளது. இவர்களை தெரிவு செய்வதற்காக முதலில் 2 ஆயிரத்து 800 பேருக்கு நேர்முகத் தேர்வு நடத்தப்பட்டது. இம்முறை முதலாவது ஹஜ் குழு எதிர்வரும் செப்டெம்பர் இரண்டாம் வாரம் அனுப்பி வைக்கப்படும்.

இதன்படி சவுதி அரேபியாவிலுள்ள யாத்திரிகர்களின் எண்ணிக்கை 50 வீதத்தினாலும் வெளிநாட்டு யாத்திரிகர்களின் எண்ணிக்கை 20 சதவீதத்தினாலும் அந்நாட்டு அரசாங்கம் குறைத்துள்ளது. இதனால் இம்முறை 15 இலட்சம் பேர்களே ஹஜ் கடமைக்காக வருவார்களென எதிர்பார்க்கப்படுகின்றது. (அ-2)




- ✱ 1349 - ஜேர்மனியின் மாயின்ஸ் நகரில் 6 ஆயிரம் யூதர்கள் உயிரிழந்தனர்.
- ✱ 1511 - மலாக்காவை போர்த்துக்கல் மன்னன் அல்பொன்சோ டி அல்புகேர்க் கைப்பற்றினான்.
- ✱ 1572 -புனித பார்த்தெலோமேயு தினப் படுகொலை: பிரான்சின் 9ஆம் சார்ல்சின் கட்டளைக்கேற்ப பிரெஞ்சுப் புரொட்டெஸ்தாந்தர்கள் படுகொலைப் படலம் ஆரம்பமாகிற்று.
- ✱ 1690 - கொல்கத்தா நகரம் அமைக்கப்பட்டது.
- ✱ 1814 - பிரித்தானியப் படையினர் வோஷிங்டன், டி.சி.யை முற்றுகையிட்டு வெள்ளை மாளிகை உட்பட பல கட்டடங்களுக்குத் தீ வைத்தனர்.
- ✱ 1821 - மெக்சிகோவின் ஸ்பெயினுடனான விடுதலைப் போர் முடிவுக்கு வந்தது.
- ✱ 1875 - கப்டன் மத்தியூ வெப் ஆங்கிலக் கால்வாயை நீந்திக் கடந்த முதலாவது மனிதர் ஆனார்.
- ✱ 1912 - அலாஸ்கா ஐக்கிய அமெரிக்காவுடன் இணைக்கப்பட்டது.
- ✱ 1929 - பாலஸ்தீனத்தில் நிகழ்ந்த கலவரங்களில் நூறுக்கும் மேற்பட்ட யூதர்கள் உயிரிழந்தனர்.
- ✱ 1931 - பிரான்சும் சோவியத் ஒன்றியமும் தமக்கிடையே போர் தவிர்ப்பு ஒப்பந்தத்தை ஏற்படுத்தினர்.
- ✱ 19[illegible] - [illegible]ர்க்டிக் பிரதேசம் [illegible]பட்டது.
- ✱ 1939 - நாசி-சோவியத் உடன்பாடு ஹிட்லருக்கும் ஜோசப் ஸ்டாலினுக்கும் இடையில் எட்டப்பட்டது.
- ✱ 1949 - நேட்டோ ஒப்பந்தம் அமுலுக்கு வந்தது.
- ✱ 1954-அமெரிக்கக் கம்யூனிஸ்ட் கட்சி அமெரிக்காவில் தடை செய்யப்பட்டது.
- ✱ 1968 -பிரான்ஸ் தனது முதலாவது ஐதரசன் குண்டை வெடிக்க வைத்தது.
- ✱ 1989 - வொயேஜர் 2 நெப்டியூனைத் தாண்டியது.
- ✱ 1991 -சோவியத் கம்யூனிஸ்ட் கட்சியின் தலைமைப் பதவியில் இருந்து மிக்கைல் கொர்பசோவ் விலகினார்.
- ✱ 1991 - சோவியத் ஒன்றியத்தில் இருந்து உக்ரேன் பிரிந்தது.
- ✱ 1992 - மக்கள் சீனக் குடியரசுக்கும் தென் கொரியாவுக்கும் இடையில் தூதரக உறவுகள் ஏற்படுத்தப்பட்டன.
- ✱ 1995 - விண்டோஸ் 95 வெளியிடப்பட்டது.
- ✱ 2006 -புளூட்டோ ஒரு கிரகம் அல்லவென அறிவிக்கப்பட்டது.

**பிறப்புகள்**

- ✱ 1906 - நாரண துரைக்கண்ணன், எழுத்தாளர், பத்திரிகையாளர்
- ✱ 1929 - யாசர் அரபாத், பாலஸ்தீனத் தலைவர் (இ. 2004)
- ✱ 1941 - இ. பத்மநாப ஐயர், ஈழத்து இலக்கிய ஆர்வலர்
- ✱ 1963 - தா. பாலகணேசன், ஈழத்து எழுத்தாளர்

**இறப்பு**

- ✱ 1972 - வே. இராமலிங்கம் பிள்ளை, நாமக்கல் கவிஞர் (பி. 1888)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கடைசிவரை அவிழ்க்காத முடிச்சு

கொழும்பில் நடக்கவுள்ள கொமன்வெல்த் உச்சிமாநாட்டுக்கான அழைப்பிதழை, இந்தியப் பிரதமர் மன்மோகன்சிங்கிடம் கையளித்து விட்டுத் திரும்பியுள்ளார் வெளிவிவகார அமைச்சர் ஜி.எல்.பீரிஸ். கடந்த திங்கட்கிழமை புதுடெல்லியில் ரேஸ்கோஸ் வீதியில் உள்ள இந்தியப் பிரதமரின் அதிகாரப்பூர்வ வதிவிடத்தில் வைத்து ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ச கொடுத்தனுப்பிய அழைப்பிதழை மன்மோகன்சிங்கிடம் கையளிக்கப்பட்டுள்ளது.

அதைப் பெற்றுக்கொண்ட அவர் கொமன்வெல்த் மாநாட்டுக்கு அழைப்பு விடுத்ததற்காக நன்றி தெரிவித்துக் கொண்டுள்ளார். மாநாட்டுக்கு வருவேன், நிச்சயம் கலந்தகொள்வேன் என்று எந்த வாக்குறுதியையும் மன்மோகன்சிங் கொடுக்கவில்லை.

வெளிவிவகார அமைச்சர் பீரிஸிடம் மட்டுமல்ல, இது குறித்து வெளிப்படையாக இப்போதைக்கு அவர் எந்தக் கருத்தையும் வெளியிடப் போவதில்லை என்பதே உண்மை. ஏனென்றால், கொமன்வெல்த் மாநாடு குறித்தும் அதில் பங்கேற்கும் மட்டம் குறித்தும் முடிவுகளை எடுக்கும் விவகாரத்தில் இந்தியாவுக்கு வெளிவிவகாரக் கொள்கைகளுக்கு அப்பாலும் சில அழுத்தங்கள் உள்ளன.

குறிப்பாக இலங்கை தொடர்பாக தமிழ்நாட்டில் உள்ள கருத்துக்களை மன்மோகன்சிங்கினாலோ அவரது அரசாங்கத்தினாலோ அவ்வளவு இலகுவாக புறக்கணித்துச் செயற்பட முடியாது. கொமன்வெல்த் மாநாட்டை இந்தியா புறக்கணிக்க வேண்டும் என்றே தமிழ்நாட்டிலுள்ள பெரும்பாலான கட்சிகளும் தலைவர்களும் கருதுகின்றனர்.

இதற்கு வெளிப்படையாக யாரும் இதுவரை எதிர்ப்புத் தெரிவிக்காவிட்டாலும் சுப்பிரமணியன் சுமாமி போன்ற விரல் விட்டு எண்ணிவிடத் தக்கவர் தமிழ்நாட்டில் இருக்கத்தான் செய்கிறார்கள். ஆனாலும், அவர்கள் புறக்கணிக்கத்தக்கதாகவே உள்ளதால் பெரும்பாலானோரின் கருத்தாக கொமன்வெல்த் மாநாட்டுப் புறக்கணிப்புக் கோரிக்கையே உள்ளது.

அரசியலில் எப்போதுமே கீரியும் பாம்புமாகச் செயற்படும் தி.மு.கவும் அ.தி.மு.கவுமே இந்த விடயத்தில் ஒன்றுபட்டு நிற்கும் போது இவற்றில் ஏதாவதொரு கட்சியுனனேயே கூட்டணி வைத்துப் பழகிவிட்ட காங்கிரஸ் கட்சிக்கு என்ன செய்வதென்று தெரியாத நிலை ஏற்பட்டுள்ளது.

கொமன்வெல்த் மாநாட்டைப் பொறுத்தவரையில் முடிவுகளை எடுப்பதற்கு இந்தியாவுக்கு மூன்று தெரிவுகள் உள்ளன.

இலங்கை அரசாங்கம் எதிர்பார்ப்பது போன்று முழுஅளவில் மாநாட்டில் பங்கேற்பது முதலாவது தெரிவு.

தமிழ்நாட்டின் கருத்துக்களுக்கு மதிப்பளித்து ஒட்டுமொத்த மாநாட்டையும் புறக்கணிப்பது இரண்டாவது தெரிவு.

தமிழ்நாட்டின் கருத்துக்களை மதித்து- அதேவேளை, இந்தியாவின் வெளிவிவகாரக் கொள்கையையும் விட்டுக்கொடுக்காமல், கீழ்மட்டக் குழுவை அனுப்புவது மூன்றாவது தெரிவு.

மன்மோகன்சிங் தலைமையிலான அரசும் காங்கிரஸ் கட்சியும் இந்த மூன்றில் ஒன்றையே தெரிவு செய்தாக வேண்டும்.

ஆனால், இந்த முடிவுகளில் எதை எடுத்தாலும் இந்தியாவின் மத்திய அரசுக்கும் காங்கிரஸ் கட்சிக்கும் நிறையவே சிக்கல்களை எதிர்கொள்ள வேண்டிய நிலை ஏற்படும்.

முதலாவது தெரிவான இலங்கையின் எதிர்பார்ப்பை நிறைவேற்றும் வகையில் முழுஅளவில் பங்கேற்பது மத்திய அரசு மீது தமிழ்நாட்டின் விரோதத்தை சம்பாதிக்க வைக்கும். மத்திய அரசு ஏழுகோடி தமிழர்களினதும் கருத்தை அவமானப்படுத்திவிட்டதான பழிச்சொல்லுக்கு இலக்காக நேரிடும்.

அதேவேளை, இந்தியாவின் கருத்தையும் இந்தியாவுக்கு கொடுத்த வாக்குறுதிகளையும் இலங்கை மதிக்கவோ நிறைவேற்றவோ இல்லை என்ற கருத்து இந்திய அரசிடம் உள்ளது. எனவே, தமிழ்நாட்டின் வலுவான புறக்கணிப்பு அழைப்புக்களை உதாசீனம்செய்துகொண்டு கொமன்வெல்த் மாநாட்டுக்கு முழு அளவிலான பிரதிநிதிகளை அனுப்பினால் இந்தியாவை மேலும் அவமதிக்க இடமளித்ததாகவும் ஆகிவிடும்.

இரண்டாவது தெரிவான முழு அளவில் மாநாட்டைப் புறக்கணிப்பது இந்தியாவைப் பொறுத்தவரையில் மிகவும் சிக்கலானதும் இக்கட்டானதுமான முடிவாகவே இருக்கும். அண்டைநாடுகளுடன் நெருக்கமான உறவுகளை வைத்துக்கொள்ளும் இந்தியாவின் வெளியுறவுக் கொள்கை இதனால் கேள்விக்குள்ளாகும்.

ஏனென்றால், இது இலங்கை நடத்துகின்ற மாநாடே தவிர, முற்றிலும் இலங்கையின் நலன்கருதி இலங்கைக்காக நடத்தப்படுகின்ற மாநாடு அல்ல. 54 நாடுகளின் தலைவர்கள் கூடுகின்ற ஒரு சர்வதேச மாநாடு. இதில் பங்கேற்பதால் உலகத் தலைவர்களை சந்தித்துப் பேசுகின்ற வாய்ப்புக் கிடைக்கும். அது இந்தியாவுக்கு அரசியல் பொருளாதாரம், இராஜதந்திரம், பாதுகாப்பு போன்ற துறைகளில் நலன்களை ஏற்படுத்தித் தரக்கூடிய ஒருகளம். இத்தகையதொரு வாய்ப்பை இந்தியாவினால் முற்றிலுமாக ஒதுக்கித்தள்ளிவிட முடியாது.

இலங்கை என்ற ஒரு நாட்டுக்காக ஏனைய 52 நாடுகளினதும் நட்புறவு வாய்ப்புக்களைப் புறக்கணிப்பது நியாயமா என்ற கேள்வி எழும். எனவே, மாநாட்டில் முழுஅளவில் பங்கேற்பதற்கு இந்தியா எந்தளவிற்கு யோசிக்குமோ அதைவிட இன்னும் அதிகமாக முற்றிலும் புறக்கணிப்பதற்கு யோசிக்கும், பின்நிற்கும்.

அடுத்த மூன்றாவது தெரிவையே இந்தியா அதிகம் விரும்பக்கூடும். தமிழ்நாட்டின் கருத்துக்கும் மதிப்பளித்துக்கொண்டு இந்திய வெளிவிவகாரக் [illegible] கொடுக்காம[illegible]



இந்தத் தெரிவுதான் இந்தியாவுக்கு இருக்கும் தெரிவுகளிலேயே மிகவும் யதார்த்தமானது.

அதாவது, இலங்கை எதிர்பார்க்கின்ற அளவுக்கு முழுஅளவிலான உயர்மட்டக் குழுவையும் அனுப்பாமல் அதேவேளை தமிழ்நாட்டின் கோரிக்கைகளை முற்றிலும் புறக்கணிக்காமல் நடந்துகொள்வதே இது.

இத்தகையதொரு முடிவை எடுப்பது குறித்து இந்தியா அதிகம் யோசிக்க வேண்டியிருக்காது. ஏனென்றால் அது இலங்கை, தமிழ்நாடு என்ற இருதரப்புகளினது தெரிவுகளுக்கு நடுவேயுள்ள ஒன்று. இத்தகைய முடிவை இந்தியா எடுத்தால் இந்தியப் பிரதமர் மன்மோகன்சிங் கொமன்வெல்த் மாநாட்டுக்கு வரமாட்டார். அது தமிழ்நாட்டைத் திருப்திப்படுத்தும், அதேவேளை ஓர் அமைச்சர் மட்டக்குழுவை அனுப்பி வைப்பதன் மூலம் தலை வராதுபோனாலும் தலைப்பாகையாவது வந்ததே என்று இலங்கையும் திருப்திகொள்ளும்.

மேலும், இந்தியப் பிரதமராக மன்மோகன்சிங் 2004 இல் பதவியேற்றதிலிருந்து அதற்குப் பின்னர் நடந்த எல்லா கொமன்வெல்த் மாநாடுகளுக்கும் செல்லவில்லை. 2005 இல் மால்டாவில் நடந்த மாநாட்டுக்கும் 2011 இல் கடைசியாக நடந்த மாநாட்டுக்கும் அவர் செல்லவில்லை.

2007 இல் உகண்டாவிலும் 2009 இல் ரினிட்டாட் அன் டுபாகோவில் நடந்த மாநாட்டிலும்தான் அவர் பங்கேற்றுள்ளார். எனவே, கொழும்பு மாநாட்டையும் அவர் ஏதேனும் காரணத்தைக் கூறி தவிர்த்துக்கொள்ளலாம்.

ஆனால், இவற்றில் எந்த முடிவையும் இந்திய அரசினால் உடனடியாக எடுத்துவிட முடியாது. அவ்வாறு எடுத்தால் ஆபத்தானதாகிவிடும். ஏனென்றால், வடக்கு மாகாணசபைக்கு நியாயமான தேர்தலை நடத்துவது 13-வது திருத்தச்சட்டத்தை பாதுகாப்[illegible] பல விவகாரங்களில் [illegible]த் மாநாட்டை வைத்து இந்தியா காய்களை நகர்த்தி வருகிறது. எனவே, புறக்கணிப்பை அறிவித்தால் இவையிரண்டும் கேள்விக்குள்ளாகிவிடும்.

அதேபோல், மாநாட்டுக்குச் செல்லப்போவதாக அறிவித்தால் தமிழ்நாட்டில் போராட்டங்கள் வெடிக்கவும். அரசியல் எதிர்ப்பலை உருவாகவும் காரணமாகிவிடும். எனவே, முடிந்தளவு இந்திய அரசாங்கம் இந்த விடயத்தில் மௌனத்தைக் காக்கவே முற்படும்.

எத்தகைய முடிவு எடுக்கப்பட்டாலும், அதை இந்தியா கடைசி நேரம் வரைக்கும் வெளியிடாமல் இருக்கும். அல்லது முடிவு எடுப்பதை கடைசிநேரம்வரை இழுத்தடிக்கும்.

ஐ.நா.மனித உரிமைகள் பேரவையில் இலங்கைக்கு எதிரான தீர்மானத்தின் மீது எப்படி வாக்களிப்பது என்று ஒருசில மணிநேரத்துக்கு முன்னர் முடிவு செய்ததுபோலக்கூட புதுடெல்லி நடந்துகொள்ளலாம்.

எவ்வாறாயினும் முழு அளவில் மாநாட்டில் பங்கேற்பது என்ற முடிவு தவிர்ந்து இந்தியா எடுக்கப்போகும் எத்தகைய முடிவும் இலங்கைக்கு சாதகமாக இருக்காது. ஏனென்றால் இந்தியா பாதி அளவில் பங்கேற்றாலோ முழுஅளவில் புறக்கணித்தாலோ இலங்கைக்கு அவமானமாகவிடும்.

இந்தியப் பிரதமர் மன்மோகன்சிங்கை தனிப்பட்ட ரீதியாக அழைத்தும் வராமல் போனால் அது இலங்கையை மிகவும் அவமானப்படுத்தியதாகிவிடும். ஏனென்றால், மன்மோகன்சிங் 2005 இலும், 2011 இலும் பங்கேற்காத மாநாடுகளில் இத்தகைய சிறப்பு அழைப்பு அவருக்குக் கொடுக்கப்பட்டிருக்கவில்லை. எல்லாத் தலைவர்களுக்கு வழங்கப்பட்டது போலவே அழைக்கப்பட்டார். சிறப்பாக அழைக்கப்பட்ட தலைவர் வராமல்போனால் அந்த மாநாடு தோல்வி என்றுதானே அர்த்தம்.

-கே. சஞ்சயன்-

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கரையோர மணற்பாங்கான பகுதியில் வீட்டுத்தோட்டத்தின் அவசியம்



பேராசிரியர் கு.மிகுந்தன்
விவசாய உயிரியல்துறை
விவசாய பீடம்
யாழ்.பல்கலைக்கழகம்

வாருங்கள் எம்மினிய உறவுகளே!

பசுமைப் புரட்சியின் விளிம்பிலிருந்து வீட்டுத்தோட்டத்தைப் பற்றி நிறையவே பேச வேண்டியிருக்கின்றது. உலகமயமாதலில் தற்போது உலகமக்களனைவருக்கும் உணவினை உற்பத்தி செய்ய வேண்டிய தேவையைப் பற்றி பலரும் பலமாக கலந்துரையாடிக் கொண் டிருக்கும் இவ்வேளையில் நம்மூரின் பட்டி தொட்டிகளின் வசதிவாய்ப்புக்கள், களுக்கு மரக்கறிவகைகள் எடுத்துச் செல்வதிலுள்ள சிரமமும் இவற்றுக்கு காரணமெனலாம்.

இந்நிலையில் இத்தட்டுப்பாட்டினை நிவர்த்தி செய்ய கரையோர பகுதியிலுள்ள வீடுகளில் சிறியளவில் இலைக்கறிவகைகளை அவர்களே உற்பத்தி செய்வதற்கான வழிகளைகளை இனங்காண வேண்டும்.

இதுவொரு ஆரம்ப முயற்சியாக கொண்டு இலைக் கறிவகைகளை செல்வி ஜீவகியால் மேற் கொள்ளப்பட்டது.

கரையோரப் பகுதிகளான குடாரப்பு, சித்தங்கேணி, நாகர்கோ வில் போன்ற பகுதிகளில் நிலப்பரப்பு மணல்மண் நிறைந்திருப்பதனாலும் அங்குள்ள குடும்பங்களின் விஸ்தீரணம் சிறியதாக இருப்பதாலும் வீட்டுத்தோட்டம் அமைப்பது இலகுவான காரியமல்ல.

மேலும் இப்பகுதியில் உள்ள வீடுகளில் மரங்களின் எண்ணிக் கையும்குறைவானதாகும். இதனைக் கருத்தில் கொண்டு சிறியளவில் உற்பத்தி செய்யக்கூடிய "பயிர் உற்பத்தி அலகுகளை' வடிவமைப்பது அவசியமாகும். இப்பயிர் உற்பத்தி அலகுகளை உருவாக்குவதற்கு பிளாஸ்ரிக் வகைகளோ அல்லது தகரவகைகளோ பயன்படுத்த முடியாது. இப்பகுதியில் நிலவும் அதிகரித்த வெப்பநிலையும் மணல் பாங்கான தன்மையுமே இதற்கு காரணமாகும். இந்நிலையில் "பயிர் உற்பத்தி அலகுகளை' அப்பகுதியிலுள்ள பனை மரத்தின் பாகங்களை அடிப் படையாகக் கொண்டும் ஏனைய கழிவுபொருட்களைக் கொண்டும் உருவாக்க முயற்சி மேற்கொள்ளப்பட்டது.


## இனியொரு பசுமைப் புரட்சிக்கு... 30-III

அங்குள்ள எம்மினிய உறவுகளின் வாழ்க்கை, அவர்களுக்கான உணவுத் தேவை என்பன பற்றி நாம் கரிசனை கொள்ள வேண்டியது அவசியமாகும்.

கரையோர கிராமங்களில் வாழுகின்ற எம்மக்களில் அதிகமானவர்கள் கடலுணவைத்தவிர மரக்கறிவகைகளை உணவில் சேர்த்துக் கொள்வது மிக மிக அரிதாகும்.

இப்பகுதியில் வாழும் சிறுவர்கள், பெண்கள் மற்றும் கர்ப்பிணிப பெண்களுக்கு சத்துணவுக் குறைபாடு அதிகம் இருப்பது கண்டறியபட்டுள்ளது.

கடலுணவு தவிர்ந்த வேறு உணவுப்பொருட்களுக்கு குறிப்பாக மரக்கறி வகைகளுக்கு அந்த இடங்களில் நிலவும் தட்டுப்பாடும் அப்பகுதி




மணற்பாங்கான இடத்தில் உற்பத்தி செய்வதற்கான ஆய்வு விவசாய பீடத்தில் இறுதியாண்டு மாணவி

இதன்படி பனையோலைக் காம்பு எனப்படும் மட்டையைக் கொண்டு பயிர் உற்பத்தி அலகுக்கான கொள்கலனை உருவாக்கி அதனுள் மண்,கூட்டெரு, வடிசாலைக் கழிவு ஆகியனவற்றையிட்டு இப்பயிர் உற்பத்தி அலகினுள் வல்லாரை, பொன்னாங்காணி, சிறுகீரை மற்றும் பொதினா ஆகியனவற்றை வளர்த்து ஆராயப்பட்டது. இங்கே எந்த விதமான அசேதன பசளையுமிடாமல் பனஞ்சாராய வடிசாலையில் கழிவாக கிடைக்கும வடிசாலை திரவத்தை (கோடா) பலவிதப்பட்ட அளவுகளில் நீர் சேர்த்து கரைத்து விசிறி இவ் இலைக்கறிவகைகளின் வளர்ச்சி அளவிடப்பட்டது.

முற்றுமுழுதாக உள்ளூரில் கிடைக்கும் கழிவுப் பொருட்களைப் பாவித்தும் பயன்படுத்தியும் பயிர் உற்பத்தி அலகினை உருவாக்கி அதனுள் கழிவினை பயன்படுத்தி இவ் இலைக்கறி வகைகளை உற்பத்தி செய்ய முடியும் என கண்டறியப்பட்டு ள்ளது.

விலை மிகவும் குறைந்த பொருட்களைக் கொண்டும் கழிவுப் பொருட்களைக் கொண்டும் இப் பயிர் உற்பத்தி கொள்கலனும் உள்ளீடுகளும் பெறப்படுவதனால் கரையோரப்பகுதிகளில் வாழ்க்கைத் தரத்தை தக்கவைத்து வாழும எம்மக்களுக்கு இது ஒருவரப் பிரசாதமாக இருக்கும்.

# பாதிக்கப்பட்டவர்களுக்கு நியாயமான நட்டஈடு வழங்கப்படும் - தினேஷ்

(கொழும்பு)

**வெலிவேரிய ரத்துபஸ்வல சம்பவத்தில் உயிரிழந்தவர்கள் மற்றும் பாதிக்கப் பட்டவர்களுக்கு நியாயமான நட்டஈடு வழங்கப்படுவதற்கான அனைத்து நடவடிக் கைகளும் மேற்கொள்ளப்படும் என பாராளுமன்றத்தில் அரசாங்கம் அறிவித்துள்ளது.**

பாராளுமன்றத்தில் இடம் பெற்ற சபை ஒத்திவைப்பு பிரேரணை மீதான விவாதத்தில் உரையாற்றும் போதே அரசாங்கத்தின் பிரதம கொறடா வான அமைச்சர் தினேஷ் குணவர்த் தனமேற்கண்டவாறுதெரிவித்துள்ளார்.

அமைச்சர் சபையில் தொடர்ந்து உரையாற்றி அவர், வெலிவேரிய பிரதேசத்தில் மூன்று விடயங்களை மையமாகக் கொண்டு இத்தொழிற் சாலை 1994இல் ஆரம்பிக்கப்பட்டது. இதன் பின்னர் அப்பிரதேசம் நகர மயமாக மாறியுள்ளது. இதனால் தொழிற் சாலை கழிவு நீருக்கு விஷம் கலந்துள்ளதாகவும் விவாதம் எழுந்துள்ளது.

அதேபோன்று இத்தொழிற்சாலை மூடப்பட வேண்டுமென்ற கோரிக் கையும் காணப்பட்டது என்பதை எதிர்க் கட்சி தெரிந்துகொள்ள வேண்டும்.

தற்போது இப்பிரதேசத்தில் 520 குடும்பங்களுக்கு பவுசர்கள் மூலம் குடிநீர் வழங்கப்பட்டு வருகிறது. எதிர் காலத்தில் 10ஆயிரம் குடும்பங்களுக்கு சுத்தமான குடிநீரை வழங்கும் விதத்தில் குழாய் நீர் விநியோகத் திட்ட நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.


இத் தொழிற்சாலையிலிருந்து வெளியேற்றப்படும் கழிவு நீரில் விசம் கலந்துள்ளதா என்பதை ஆராய்ந்து அத்தொழிற்சாலை தொடர்பான சோதனைகளை மேற்கொள்ளுமாறு ஜனாதிபதி உத்தரவிட்டுள் ளார்.

காலம் காலமாக நீர் மாசடைவது தொடர்பாக இப்பிரதேசத்தில் குற்றச் சாட்டுக்கள் முன்வைக்கப்பட்டன. ஆனால் அப்போதெல்லாம் எதிர்ப்புக் கள் கிளம்பவில்லை. ஆனால் இத் தொழிற்சாலையில் ஒரு தொழிற் சங்கத்தை சேர்ந்த 105பேர் தொழிலிருந்து வெளியேற்றப்பட்டதன் காரணமாகவே பதற்றமான நிலைமை உருவாகியுள்ளது.

துப்பாக்கி சூடு நடத்தியமை ஏற்றுக்கொள்ள முடியாது. இது தொடர்பில் விசாரணைகள் நடைபெறுகின்றன. குற்றவாளிகள் தண்டிக்கப் படுவார்கள். இத்தொழிற்சாலை கழிவு நீர் தொடர்பான சோதனைகள் நடைபெறுகின்றன. அதன் அறிக்கை கிடைத்ததும் அத்தொழிற்சாலையை அங்கிருந்து வெளியேற்றவும் அரசாங்கம் தயங்கப் போவதில்லை.

மரணமடைந்தவர்கள் மற்றும் பாதிப்புற்றோருக்கு நட்டஈடு வழங்குவதற்கு ஜனாதிபதி பணிப்புரை விடுத்துள்ளார். அது நியாயமான முறையில் மேற்கொள்ளப்படும்.

எதிர்வரும் கிழமைகளில் குறித்த பிரதேசத்தில் வீடுகளுக்கு சுத்தமான நீர் வழங்கும் திட்டம் நிறைவுபெறும் என்றார். (அ-2)




யாழ். புனித சாள்ஸ் மகா வித்தியாலய பழைய மாணவர் சங்கத்தினரால் பாடசாலையின் விளையாட்டுத் துறையினை விருத்தி செய்யும் பொருட்டு இதன் ஓர் அங்கமாக உதைபந்தாட்ட அணியினருக்கான ஒரு தொகுதி விளையாட்டு உபகரணங்களை பாடசாலை அதிபர் திருமதி ஜ.கிறிஸ்டபெலிடம் பழைய மாணவச் சங்கப் பிரதி நிதிகள் வழங்கி [illegible] காணலாம்.

## கவிதை தொகுப்பு வெளியீடு

நீர்வேலி ஸ்ரீ முருகன் அறநெறிப் பாடசாலை பரிசளிப்பு விழாவும் நீர்வை தி. மயூரகிரி எழுதிய ஏற்றம் பெருக வந்தாய் எனும் கவிதைத் தொகுப்பு நூல் வெளியீடும் இன்று சனிக்கிழமை பிற்பகல் 2.30 மணிக்கு நீர்வேலி திருமுருகன் மணி மண்டபத்தில் மணி மண்டப உரிமையாளர் ந.சிவசுப்பிரமணியம் செட்டியார் தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் நூலறிமுகவுரையை கோப்பாய் ஆசிரிய பயிற்சிக் கலாசாலை விரிவுரையாளர் ச.லலீசன் ஆற்ற நீர்வேலி கலைப் பண்பாட்டுப் பேரவை தலைவர் இ.குணநாதன் நூலை வெளியிட்டு வைப்பார்.

நூலின் முதற்பிரதியை ஹரன் நகைமாட உரிமையாளர் திரு. திருமதி கிருபாகரன் தம்பதியினர் பெற்றுக் கொள்வர். (அ-2)

## உணவு தயாரித்தல் செயலமர்வு

யாழ்ப்பாணம் வர்த்தக தொழிற்றுறை மன்றம் அறிவூட்டல் நிகழ்வை இன்று சனிக்கிழமை காலை 9 மணி தொடக்கம் பிற்பகல் 1.30 மணிவரை யாழ். கிறீன் கிராஸ் சுற்றுலா விடுதியில் நடத்தவுள்ளது.

இந்நிகழ்வு யாழ். மாவட்டத்திலுள்ள உணவு தயாரித்தல் மற்றும் அதனோடுதொடர்புடையதொழிற்றுறையை மேம்படுத்தும் ஓர் அங்கமாக தெரிவு செய்யப்பட்ட யாழ். மாவட்டத்தினைச் சேர்ந்த கைத்தொழில் முயற்சியாளர்களுக்கு ஒழுங்கு செய்யப் பட்டுள்ளது.இது தொடர்பான மேலதிக விபரங்களுக்கு 021 222 6609 எனும் தொலைபேசி இலக்கத்துடன் தொடர்பு கொள்ளுமாறு அறிவிக்கப்பட்டுள்ளது. (அ-2)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தன்னம்பிக்கையுடன் பரீட்சை எழுதுங்கள்

## வடக்கு ஆளுநர் வாழ்த்து



(கொழும்பு)

தரம் 5 புலமைப் பரிசில் பரீட்சைக்கு மாணவர்கள் தன்னம்பிக்கையுடன் நிதானத்துடன் துணிவுடனும் இப்பரீட்சைக்கு தோற்றி நல்ல பெறுபேறுகள் பெற வேண்டும் என்று வடமாகாண ஆளுநர் ஜீ.ஏ.சந்திரசிறி வாழ்த்து தெரிவித்துள்ளார்.

தேசிய ரீதியாக நடைபெறும் 5 ஆம் ஆண்டு புலமைப் பரிசில் பரீட்சை நாளை ஆரம்பமாகின்றது. இதில் வடமாகாணத்தில் உள்ள 12 வலயங்களைச் சேர்ந்த 17 ஆயிரத்து 575 மாணவர்கள் பரீட்சைக்குத் தோற்று கின்றனர்.

வடமாகாண கல்வி அமைச்சு மாகாண கல்வித்திணைக்களம் வலயக் கல் வித் திணைக்களங்கள், பாடசாலை மட்டத்திலும் விசேட செயலமர்வுகள், பயிற்சி வகுப்புகள் மற்றும் மாதிரி பரீட்சை விசேட செயலமர்வுகளை நடத்தி இம்மாணவர்களை தயார்படுத்தியுள்ளது. மேலும் இம்மாணவர்களை வடமாகாண கல்வி அமைச்சின் செயலாளர் சீ.சத்தியசீலன், மாகாண கல்விப் பணிப்பாளர் வி.செல்வராசா ஆகியோரும் வாழ்த்தியுள்ளனர். (அ)

# சட்டவிரோதமாக ஆஸி.வருவோருக்கு அடைக்கலம் வழங்கப்படமாட்டாது

## ஆஸி.பிரதமர் தெரிவிப்பு

சட்டவிரோதமாக அவுஸ்திரேலியாவிற்கு பயணிக்கும் இலங்கைத் தமிழ் அகதிகளுக்கு அடைக்கலம் வழங்கப்படமாட்டாது என்று அந்நாட்டு பிரதமர் தெரிவித்துள்ளார். அவுஸ்திரேலிய எதிர்க்கட்சித் தலைவருடன் நடந்த விவாதத்தில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் மேற் கண்டவாறு குறிப்பிட்டார்.

இது தொடர்பாக அவர் மேலும் கூறுகையில்,

கடத்தல்காரர்களின் உதவியோடு சட்ட விரோதமாக வரும் இலங்கைத் தமிழர்கள் அவுஸ்திரேலியாவில் குடியேற அனுமதிக்கப்படமாட்டார்கள். அதையும் மீறி வருவோர் திருப்பி அனுப்பப்படுவார்.

குடியேற்ற நாடான நியூகினியாவிற்கு அவர்கள் போகலாம். இலங்கைத் தமிழர்களுக்கு அடைக்கலம் கொடுப்பதில் பெரும் பிரச்சினைகள் இருக்கின்றன. உலகில் காணப்படும் நடைமுறையிலுள்ள அடைக்கலச் சட்டங்களைத் தான் நாங்கள் நடைமுறைப்படுத்த முடியும் என்றார்.

இதேவேளை அந்நாட்டு எதிர்க்கட்சித் தலைவர் கூறுகையில்,

நாட்டின் பாதுகாப்புக்கு இசைந்த வகையில் தான் செயற்பட முடியும். சட்டவிரோதமாக வருபவர்களுக்கு தற்காலிக விசா வழங்கப்படுகின்றது. அது அவர்கள் பாதுகாப்பாக திரும்பிச் செல்வதற்கானது மட்டுமே.

அவுஸ்திரேலியாவின் தீவுகளுக்கு வரும் இலங்கை அகதிகள் பாதுகாப்பாக திருப்பி அனுப்பப்படுகின்றனர்.

இலங்கை உள்ளிட்ட நாடுகளுடனான உறவை வளர்ப்பதும் முக்கியம் என்றார். (அ-2)


### வீடு விற்பனைக்கு

அளவெட்டி மேற்கு
நாராயணசாமி வீதியில் 2 1/2
பரப்புக் காணியில் வீடு சகல
வசதிகளுடன் விற்பனைக்கு
உண்டு. தரகர் தேவையில்லை.
தொடர்புகளுக்கு: 0217901368
0778448218 (3663)



### Raveens EMC

**Karaveddy**

மேற்படி நிறுவனத்திற்குரிய
Grade 11 மாணவர்கள் பங்குபெறும்
**Impromptu Oratory (English)**
***and* Prize Giving Day**
**முன் ஆயத்தமில்லாப் பேச்சும் (ஆங்கிலம்)**
**பரிசளிப்பு விழாவும்**

குறிப்பு: சபையோர் ஆங்கிலத்தில் வழங்கும் விடயத் தலைப்புகளுக்கே மாணவர்கள் பேசுவார்கள்.
இடம்: நெல்லியடி தடங்கன் புளியடி முருகமூர்த்தி கோயில் கல்யாண மண்டபம்
காலம்: 25.08.2013 ஞாயிற்றுக்கிழமை காலை 8.30
தலைவர்: திருமதி வசந்தி ஜெயராசா B.Sc (Dip.in.Ed) ஆசிரியை, உடுப்பிட்டி அமெரிக்கன் மிஷன் கல்லூரி, வல்வெட்டித்துறை.

**Chief Guest:**
Dr.M.Malaravan
MBBS.MD (Ophthalmology)
Fellowship in Anterior Segment
Consultant Ophthalmologist, Teaching hospital, Jaffna.

**Distribution of prizes:**
Mrs.Dushyanthi Malaravan

ஆர்வலர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

**P.Easwaranathan** B.Sc (Agri) Hon.Dip.in Ed., Director

**வாழ்த்துவோர்:**
தேவன்ஸ்ரோர், கிளான், துன்னாலை.
L.Edmand Regi (Point pedro)


# முச்சக்கரவண்டி சட்டங்களை இரத்து செய்யக்கோரி ஆர்ப்பாட்டம்

(கொழும்பு)

தேசிய முச்சக்கரவண்டி தொழிலாளர்களின் சம்மேளனம் கொழும்பில் எதிர்ப்பு ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

முச்சக்கரவண்டிகள் தொடர்பில் அறிவிக்கப்பட்ட புதிய சட்டங்கள் அடங்கிய வர்த்தமானி அறிவித்தலை இரத்து செய்யுமாறு கோரியே இந்த ஆர்ப்பாட்டம் நேற்று முன்தினம் கொழும்பு ஹைட் பார்க் மைதானத்தில் முன்னெடுக்கப்பட்டது.

இதன்போது ஜனாதிபதியின் இணைப்புச் செயலாளரிடம் மகஜர் ஒன்றை கையளித்ததாக தேசிய முச்சக்கரவண்டி தொழிலாளர்களின் சம்மேளனத்தின் தலைவர் கே.டி. அல்விஸ் குறிப்பிட்டுள்ளார்.

இது தொடர்பில் ஜனாதிபதி கவனம் செலுத்தி வர்த்தமானி அறிவித்தலை இரத்து செய்வார் என்று தாம் எதிர்ப்பார்ப்பதாகவும் அவர் மேலும் குறிப்பிட்டுள்ளார்.

மோட்டார் வாகன சட்டத்தின் கீழ் விசேட வர்த்தமானி அறிவித்தல் ஊடாக 19 விடயங்கள் அடங்கிய சட்டங்களை அண்மையில் அமுல்படுத்த தீர்மானிக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (அ-2)

# தலைமைத்துவப் பயிற்சிக்காக 15 பெண்கள் இந்தியா பயணம்

இந்தியாவில் நடைபெறவுள்ள அபிவிருத்திச் சமூகத்திற்காக கிராமிய கல்வி எனும் தொனிப்பொருளில் பெண்களுக்கான தலைமைத்துவப் பயிற்சிக்காக இலங்கையிலிருந்து தெரிவு செய்யப்பட்ட 15 பெண்கள் நேற்று முன்தினம் இந்தியா பயணமாகியுள்ளனர்.

நேற்றைய தினத்தில் இருந்து எதிர்வரும் 29 ஆம் திகதிவரை இந்தியாவின் கர்நாடக மாநிலத்தில் டும்கூர் நகரில் குறித்த தலைமைத்துவப் பயிற்சிநெறி நடைபெறவுள்ளது.

இலங்கையின் வடக்கு, கிழக்கு உட்பட நாட்டின் சகல பாகங்களிலுமிருந்து பல்வேறு துறைகளில் பெண்கள் நிறுவனங்களில் பணியாற்றும் பெண்கள் இதற்கென தெரிவு செய்யப்பட்டுள்ளனர் என வவுனியா மாவட்ட பெண்கள் தொழில் முயற்சியாளர் சங்கச் செயலாளர் எஸ்.ஜிப்ரியா பேகம் தெரிவித்துள்ளார்.

மேற்படி தலைமைத்துவப் பயிற்சியை முடித்துக் கொள்ளும்பெண்கள் எதிர்வரும் 30 ஆம் திகதி நாடு திரும்பவுள்ளதாக அவர் கூறி னார். (அ-2)


### கல்யாண மாலை

**இவர்களுக்கு மணமகள் தேவை**

பிறப்பு: 1976 இந்து(V)
நட்சத்திரம்:கேட்டை 1
கி.பா :26.5 சூ, செவ் 6
உயரம்: 5'5"
தகைமை/தொழில்: முதுகலைமாணி அபிவிருத்தி உத்தியோகத்தர்
தொ.இ:B748

பிறப்பு: 1981 இந்து(V)
நட்சத்திரம்:பூரட்டாதி 1கி.பா :35.5 சூ, செவ் 7 உயரம்: 5'9"
தகைமை/தொழில்: Electronic EngineerIT Inspector
தொ.இ:B750

பிறப்பு: 1975 இந்து(V)
நட்சத்திரம்: ரோகினி 1
கி.பா :33.25 செவ் 12 உயரம்: 5'6"
தகைமை/தொழில்:A/L சொந்த கடை
தொ.இ:B751

பிறப்பு: 1982 இந்து (திருவள்ளுவர்)
நட்சத்திரம்:பூரட்டாதி
கி.பா :25.25 உயரம்:154 செ.மீ
தகைமை/தொழில்: BSc அபிவிருத்தி உத்தியோகத்தர்
தொ.இ:B2161

**இவர்களுக்கு மணமகன் தேவை**

பிறப்பு: 1983 இந்து(V)
நட்சத்திரம்:அச்சுவினி 3
கி.பா :31.50
தகைமை/தொழில்: MBBS வைத்தியர் (எழுத்துடன் விவாகரத்தானவர்)
தொ.இ:G1097

பிறப்பு: 1975 இந்து(V)
நட்சத்திரம்:உத்தரட்டாதி 2
கி.பா :27.5 உயரம்: 5'5"
தகைமை/தொழில்: BSC,MA, SLAS உயர் பதவி. சைவ போசனம்
தொ.இ:G1098

பிறப்பு: 1970 இந்து (V)
நட்சத்திரம்: அச்சுவினி 4
கி.பா :93 சூ, செவ் 1
உயரம்: 5'4"
தகைமை/தொழில்: BAபிரதம மொழி பெயர்ப்பாளர்
தொ.இ:G1099

பிறப்பு: 1987 இந்து(V)
நட்சத்திரம்: சுவாதி 2
கி.பா :59.75 உயரம்: 5'1"
தகைமை/தொழில்: Following HND
தொ.இ:G1100

சகல தொடர்புகளுக்கும்:-
**கல்யாண மாலை**
(சர்வதேச இலவச திருமண சேவை)
இல. 144, பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்
தொடர்பு:- 021 720 1005
E-mail:- kalyanamalai.jaffna@gmail.com
குறிப்பு: எமது காரியாலயம் காலை 9.00 - 5.00 மணிவரை திறக்கப்படும்.
( ஒவ்வொரு செவ்வாய்க்கிழமையும் கல்யாணமாலை விடுமுறை தினம் என்பதனையும் அறியத்தருகின்றோம் )
ஊடக அனுசரணை வலம்புரி







புதிய சுவை! புதிய அனுபவம்! புதிய தொழில்நுட்பம்!
அதிநவீன Pasteurized And Homogenized முறைப்படி தயாரிக்கப்பட்ட 100% சுகாதாரமான ஊட்டச்சத்துக்கள் நிறைந்த ஐஸ்கிறீம் வகைகள் எமது அறிமுக விலையில் நல்லூர் விற்பனை நிலையத்தில் சுவைத்து மகிழலாம். பெறுமதி மிக்க பரிசில்கள் உங்களுக்காக காத்திருக்கின்றன.
**ஷைலோ ஐஸ்கிறீம்**
No.231, Temple Road, Nallur, Jaffna.
T.P. 021 4926003
(3587)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தருணம் தப்பினால் மரணம்; சிவலிங்க புளியடி வீதியின் நிலை இது தான்

(யாழ்ப்பாணம்)

**யாழ். நகரை அண்மித்த சிவலிங்கப் புளியடிப் பகுதியில் காங்கேசன்துறை வீதியின் ஓரமாக்வும் வீதியின் நடுவிலும் பாரிய குழிகள் காணப்படுகின்ற போதிலும் உரிய பாதுகாப்பு நடவடிக்கைகள் எதுவும் மேற்கொள்ளப்படாத நிலை காணப்படுகின்றது**



வீதி அபிவிருத்திப் பணிகளின் போதும் வடிகால் அமைக்கும் பணிகளின் போதும் வீதியின் ஓரமாக ஏற்படுத்தப்படும் பாரிய குழிகளினால் கடந்த காலங்களில் யாழ். மாவட்டத்தில் மட்டும் பலர் உயிரிழந்துள்ளனர்.

இந்நிலையில் கடந்த சிலமாதங்களாக வீதி அபிவிருத்திப் பணிகள் விழிப்புணர்வோடு மேற்கொள்ளப்பட்டு வந்தன. இதன் காரணமாக உயிரிழப்புக்கள் தவிர்க்கப்பட்டிருந்தன. ஆனால் தற்போது உயிர் ஆபத்தை ஏற்படுத்தும் வகையிலும் வீதிப் போக்குவரத்துக்கு இடையூறு ஏற்படுத்தும் வகையிலும் காங்கேசன்துறை வீதியில் இவ்வாறு பாரிய குழிகள் காணப்படுகின்றன.

தருணம் தப்பினால் மரணம் என்ற கூற்றுக்கு அமைவாக குறித்த வீதியின் ஓரமாக இந்தப் பாரிய குழிகள் காணப்படுகின்றன.

வீதியின் நடுவே அமைக்கப்பட்ட மதகின் ஓரமாகவே உள்ள மேற்படி பாரிய குழிகள் சுமார் 6 அடி ஆழம் இருக்கும். இதில் மழை காலத்தில் நீர்தேங்கி நின்றால் பாரிய அனர்த்தம் ஏற்படவும் வாய்ப்புள்ளது.

எனவே உரிய சமிக்ஞைகளை குறித்த பகுதியில் வைத்து அச்சமற்ற போக்குவரத்துக்கு உதவி செய்யுமாறும் குறித்த குழியை விரைவாக மூடி தேவையற்ற உயிர் இழப்பை தவிர்த்துக் கொள்ளுமாறும் பொது மக்கள் வேண்டுகோள் விடுத்துள்ளனர்.

பாடசாலை மாணவர்கள் மற்றும் சிறுவர்கள் வீதியின் ஓரமாக செல்லும் போது குழிக்குள் விழுந்து எழும்பிச் செல்வதாகவும் கூறப்படுகின்றது.

இது தவிர வீதியின் நடுவே வெட்டப்பட்டுள்ள குழிப்பகுதிக்கும் உரிய சமிக்ஞைகள் வைக்கப்படாத நிலை காணப்படுகின்றன.

இதனால் வாகனப் போக்குவரத்தும் ஆபத்தாக அமையும் என கூறப்படுகின்றது. (அ-6)

# டி.சி.டி இரசாயனம் தொடர்பில் தொடர்ந்தும் ஆய்வு நடக்கிறது

(கொழும்பு)

நியூசிலாந்தில் இருந்து இறக்குமதி செய்யப்பட்ட பால்மாக்களில் அடங்கியிருந்ததாக தெரிவிக்கப்படும் டி.சி.டி எனப்படும் இரசாயன பொருள் மனிதவுடலுக்கு ஏற்றதா இல்லையா என்பது குறித்து இன்னும் கண்டறியப்படவில்லை என அமைச்சர் பாட்டலி சம்பிக்க ரணவக்க தெரிவித்துள்ளார்.

குறித்த இரசாயன பொருள் மனித உடலுக்கு தீங்கு விளைவிக்காது என நியூசிலாந்து நிறுவனம் கூறுவதை ஏற்றுக் கொள்ள முடியாது என கொழும்பில் நேற்று முன்தினம் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்து கொண்டபோது அவர் குறிப்பிட்டார்.

92 டி.சி.டி சேர்ந்து உருவாக்கும் மெலமைன் எனப்படும் இரசாயன பதார்த்தம் மனித உடலுக்கு உகந்ததல்ல என உறுதி செய்யப்பட்டுள்ளதாகவும் டி.சி.டி குறித்த உண்மை தகவல் அறிய நீண்ட பரிசோதனை செய்ய வேண்டும் எனவும் அவர் தெரிவித்தார்.

எனினும் வெளிநாட்டு பால் உற்பத்தியாளர்களின் பரிசோதனைக்காக இலங்கை குழந்தைகளை பரிசோதனைக்கூட எலிகளாக வழங்க முடியாது என அமைச்சர் சுட்டிக்காட்டியுள்ளார்.

டி.சி.டி இரசாயன பதார்த்தத்தை உண்பதில் இருந்து தவிர்த்துக் கொள்ளும் உரிமை குழந்தைகளுக்கு உள்ளதாகவும் அதற்கு தான் ஆதரவு வழங்குவதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

மேலும் டி.சி.டி குறித்து தொழில்நுட்ப நிறுவனத்தின் ஆய்வு தகவலை நம்புவதாக அவர் குறிப்பிட்டார்.

இருந்த போதும் கடந்த ஜூன் மாதத்திற்கு பின்னர் நியூசிலாந்திலிருந்து இறக்குமதி செய்யப்பட்ட பால்மாக்களில் டி.சி.டி இரசாயனம் இல்லை என்று கைத்தொழில் நுட்ப நிறுவனத்தினால் அண்மையில் மேற்கொள்ளப்பட்ட ஆய்வுகளில் இருந்து தெரிய வந்துள்ளது.

பால்மாக்களில் குறித்த டி.சி.டி எனப்படும் இரசாயனம் அடங்கியுள்ளதா என்று தொடர்ந்தும் ஆய்வுகளை நடத்திவருவதாக அமைச்சர் குறிப்பிட்டார்.

கைத்தொழில் தொழில்நுட்ப நிறுவனத்தினால் இதற்கு முன்னர் சந்தையில் விநியோகம் செய்யப்பட்ட பால்மாக்களில் டி.சி.டி இரசாயனம் அடங்கியுள்ளதாக தெரிவிக்கப்பட்டிருந்தது.

பின்னர் துறைமுகத்தில் தடுத்து வைக்கப்பட்டிருந்த 7 பால்மா மாதிரிகள் பரி சோதனைக்கு உட்படுத்தப்பட்டு அவற்றில் பாதிப்புடைய இரசாயன பதர்த்தம் அடங்கி யிருக்கவில்லை என்று உறுதிப்படுத்தப்பட்டது. (அ-2)

# டிப்பர் வாகனம் தடம் புரண்டது

## இருவர் படுகாயம்


(கரணவாய்)

கிளிநொச்சியிலிருந்து மணல் ஏற்றிக் கொண்டு அக்கராயன் நோக்கி மணலுடன் பயணித்துக் கொண்டிருந்த டிப்பர் ரக வாகனம் ஸ்கந்தபுரம் பாலத்தில் விபத்துக்குள்ளாகியுள்ளது.

இச்சம்பவம் நேற்றுமுன்தினம் வியாழக்கிழமை அதிகாலை 5.30 மணிக்கு இடம் பெற்றுள்ளது.

கிளிநொச்சியிலிருந்து மணல் ஏற்றிக் கொண்டு வந்தபோது ஸ்கந்தபுரம் பாலத்தில், பயணித்துக் கொண்டிருந்த வாகனம் விலகிச் செல்ல இடமளிக்க முற்பட்ட வேளை குறித்த டிப்பர் வாகனம் நிலைதடுமாறி விபத்துக்குள்ளாகியது.

இதில் பயணித்த சாரதியும் உதவியாளரும் படுகாயமடைந்த நிலையில் கிளிநொச்சி வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். மேலதிக விசாரணைகளை கிளிநொச்சி பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (அ-9-60)



வலிகாமம் பிரதேசத்தில் அண்மையில் இடம்பெற்ற ஜோதிலிங்க இரதபவனியின் போது...

# RAVEENS EMC இல் பரிசளிப்பு விழா

(யாழ்ப்பாணம்)

கரவெட்டி RAVEENS EMC நிறுவனத்திற்குரிய தரம் 11 மாணவர்கள் பங்கேற்கும் முன் ஆயத்தமில்லாப் பேச்சு (ஆங்கிலம்) மற்றும் பரிசளிப்பு விழா நாளை ஞாயிற்றுக்கிழமை காலை 8.30 மணிக்கு நெல்லியடி தடங்கன் புளியடி முருகமூர்த்தி கோவில் கல்யாண மண்டபத்தில் உடுப்பிட்டி அமெரிக்கன் மிஷன் கல்லூரி ஆசிரியை திருமதீ வசந்தி ஜெயராசா தலைமையில் நடைபெறும்.

இந்நிகழ்விற்கு பிரதம விருந்தினராக யாழ்.போதனா வைத்தியசாலை வைத்திய கலாநிதி எம்.மலரவன் கலந்து சிறப்பிக்கவுள்ளார். மாணவர்களுக்கான பரிசில்களை திருமதி டுசியந்தி மலரவன் வழங்கி வைப்பார். (அ-2)

# தேர்தல் பிரசார கூட்டம் இன்று

(யாழ்ப்பாணம்)

சோசலிஷ சமத்துவக் கட்சியின் முதலாவது மாகாணசபை தேர்தல் பிரசாரக் கூட்டம் இன்று சனிக்கிழமை பிற்பகல் 3.30 மணிக்கு காரைநகர் ஊரி அன்டர்சன் மண்டபத்தில் நடைபெறும்.

இக்கூட்டத்தில் இக்கட்சி யின் அரசியல் குழு அங்கத்தவர் பாணினி விஜேசிரிவர்த்தன பிரதம பேச்சாளராக கலந்து கொள்ளவுள்ளார்: (அ-2)

# அநுராதபுரத்தில் பாசிப்பயறு செய்கை

அநுராதபுரத்தில் பாசிப்பயறு செய்கை மேற்கொள்ள நடவடிக்கை மேற்கொள்ளப்படவுள்ளதாக அம்மாவட்ட விவசாயத் திணைக்களம் தெரிவித்துள்ளது.

அநுராதபுரம் மாவட்டத்தின் இராஜங்கனை, நொச்சியாகம, நுவரவாவி ஆகிய பகுதிகளை அண்மித்த பிரதேசங்களில் ஆயிரம் ஏக்கரில் பாசிப்பயறு பயிர்ச்செய்கை மேற்கொள்ளும் திட்டமொன்று முன்னெடுக்கப்பட்டுள்ளதாக குறித்த திணைக்களம் குறிப்பிட்டுள்ளது.

அநுராதபுரம் மாவட்டத்தில் ஒரு இலட்சம் ஏக்கருக்கு பயிரிடுவதற்கான பாசிப்பயறு விதைகளை பெற்றுக் கொள்ளும் நோக்கிலேயே இத்திட்டம் முன்னெடுக்கப்பட்டுள்ளதாக விவசாயத் திணைக்களம் தெரிவித்துள்ளது. (அ-2)

# மரண அறிவித்தல்



## ஸ்ரீறிஸ்கந்தராசா அன்ன றோசெற்(பூமா)

அன்ரனிஸ் வீதி, பண்டத்தரிப்பை பிறப்பிடமாகவும் இத்தாலியை வசிப்பிடமாகவும் கொண்ட ஸ்ரீறிஸ்கந்தராசா அன்ன றோசெற் (பூமா) 23-08-2013 வெள்ளிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான வைரமுத்து செபமாலை (துரையப்பா) - செபமாலை மேரிமார்க்கிரேட் தம்பதியினரின் அன்பு மகளும் ஸ்ரீறிஸ்கந்தராசாவின் அன்பு மனைவியும் தர்சன், தர்சினி ஆகியோரின் அன்புத் தாயும் தோமஸ் ஞானேஸ்வரன், ஜெயமலர், செல்வநாயகம், மரியநாயகம், ராசநாயகம், பற்றிக் குணநாயகம், அரியநாயகம் (ஜேர்மனி), றெஜினாவதி (லண்டன்) ஆகியோரின் அன்புச் சகோதரியுமாவார்.

அன்னாரின் நல்லடக்கம் இத்தாலியில் நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*477, கண்டி வீதி, அரியாலை, யாழ்ப்பாணம். 0775150345*

தகவல்: சகோதரர்கள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### 23 வருடங்கள் இயங்காத நிலையில் உள்ள

# அலம்பில் பிரதேச ஆயுர்வேத வைத்தியசாலை

(முல்லைத்தீவு)

**முல்லைத்தீவு மாவட்ட கரைதுறைப்பற்று பிரதேச செயலர் பிரிவில் உள்ள அலம்பில் பிரதேச ஆயுர்வேத வைத்தியசாலை 23 வருடங்களாக இயங்காமல் உள்ளதால் பல சிரமங்களை எதிர்கொள்ள வேண்டியுள்ளதாக அப்பகுதி மக்களும் நோயாளர்களும் விசனம் தெரிவித்துள்ளனர்.**



அலம்பில் தெற்கு கிராம சேவையாளர் பிரிவில் கடந்த 1960 ஆம் ஆண்டு உருவாக்கப்பட்ட இவ் ஆயுர்வேத வைத்தியசாலையானது கடந்த 1990 ஆம் ஆண்டுக்கு பின்னர் இயங்காதுள்ளது.

கொக்கிளாய் கிழக்கு, கொக்கிளாய் மேற்கு, கருநாட்டுக்கேணி, கொக்குத் தொடுவாய் வடக்கு, கொக்குத் தொடுவாய் தெற்கு, கொக்குத் தொடுவாய் மத்தி, செம்மலை, செம்மலை கிழக்கு, அலம்பில் வடக்கு, அலம்பில் தெற்கு, உப்புமா வெளி, குமுழமுனை கிழக்கு, குமுழமுனை மத்தி ஆகிய 14 கிராம சேவையாளர் பிரிவில் 115 கிராமங்களில் உள்ள 2 ஆயிரத்து 972 குடும்பங்கள், இவ் வைத்தியசாலை இயங்காமையால் அலம்பில் பிரதேசத்தில் இருந்து16 கிலோமீற்றர் தூரத்தில் உள்ள முள்ளியவளை வைத்தியசாலைக்கே செல்லவேண்டி உள்ளன.

தினமும் 100 இற்கும் மேற்பட்ட நோயாளர்கள் இப்பகுதியில் இருந்து வேறு வைத்தியசாலைக்கு செல்ல வேண்டிய நிலையிலுள்ளனர்.

யுத்தத்தால் அனைத்தையும் இழந்து நிர்க்கதியாக்கப்பட்டு மீள் குடியேற்றம் செய்யப்பட்டுள்ள இம் மக்கள், இவ் வைத்தியசாலை இயங்காமையால் வைத்திய சேவையை பெறுவதற்கு நேரம், பணம் என்பவற்றை செலவு செய்து தூர இடத்தில் உள்ள வைத்தியசாலைகளுக்கு செல்ல வேண்டிய நிலையுள்ளது.

இது தொடர்பாக கரைதுறைப்பற்று பிரதேச சபையின் செயலர் சு.ரவீந்திரநாதனிடம் கேட்டபோது ஆளணிப் பற்றாக்குறை காரணமாகவே இயங்காதுள்ளதாக தெரிவித்தார்.

இவ்விடயம் தொடர்பில் கரைதுறைப்பற்று பிரதேச சபையும் வடமாகாண சுதேச மருத்துவ திணைக்களமும் முல்லை. அரச அதிபர் நா. வேதநாயகன் ஆகியோர் கவனத்தில் எடுத்து வைத்தியசாலையை இயங்க வைக்க நடவடிக்கை எடுக்க வேண்டுமென அப்பகுதி மக்களும் நோயாளர்களும் கோரிக்கை ஒன்றை முன்வைத்துள்ளனர். (ம-267)




## உதைபந்தாட்ட போட்டி

கிளிநொச்சி மாவட்ட சுகாதார திணைக்களத்தின் அனுசரணையுடன் பூநகரி பிரதேச சுகாதார வைத்திய அதிகாரியின் (என்.சி.டி.) புற்று நோய் கட்டளைப் பிரிவினால் மாவட்ட ரீதியில் நடத்தப்படும் மாபெரும் உதைபந்தாட்டப் போட்டி இன்றும் நாளையும் முழங்காவில் பொது விளையாட்டு மைதானத்தில் நடைபெறவுள்ளது.

இவ் உதைபந்தாட்டப் போட்டியில் 8விளையாட்டுக் கழகங்கள் பங்கு பற்றவுள்ளன.

இவ் உதைபந்தாட்ட போட்டியில் வெற்றி பெறும் கழகங்களுக்கான பரிசில் வழங்கும் நிகழ்வு நாளை நடைபெறவுள்ள இறுதி தெரிவு போட்டியை தொடர்ந்து இடம்பெறவுள்ளது. (ம-84)



கடந்த ஆண்டு நடைபெற்ற புலமைப்பரிசில் பரீட்சையில் வவுனியா மாவட்டத்தில் சித்தியடைந்து அருணலு சிறுவர் சேமிப்பு கணக்கை பேணும் மாணவர்களை கௌரவிக்கும் நிகழ்வு அண்மையில் வவுனியா கொமர்ஷல் வங்கி கிளையில் இடம்பெற்றது. இந்நிகழ்வில் பரிசில் பெற்ற மாணவர்கள் அதிதிகளுடன் [illegible]

(படம்:- பூந்தோட்ட செய்தியாளர்)

## 14 வயது சிறுமியை கடத்திய நபருக்கு கடூழிய சிறை

(முல்லைத்தீவு)

முள்ளியவளை பொன்னகர் பகுதியில் தாய், தந்தையரின் சட்ட பாதுகாவலிலிருந்து 14 வயது சிறுமியை கடத்திச் சென்று மறைத்து வைத்திருந்ததாக கடந்த ஜனவரி மாதம் 22 ஆம் திகதி குற்றஞ்சாட்டப்பட்டு முல்லைத்தீவு நீதிமன்றில் ஆஜர்படுத்தப்பட்ட நபர் ஒருவருக்கு விசாரணையின் பின்னர் ஒருவருட கடூழிய சிறைத்தண்டனை விதித்து முல்லைத்தீவு மாவட்ட நீதிபதி மாணிக்கவாசகர் கணேசராஜா தீர்ப்பளித்துள்ளார்.

கடத்தப்பட்ட பெண் தன்னை எதிரி பலவந்தமாக பெற்றோருக்கு தெரியாமல் காட்டுப் பகுதிக்குள் மறைத்து வைத்திருந்ததாகவும் பெற்றோர் தன்னை காணாமல் பொலிஸாரிடம் முறையிட்டதை தொடர்ந்து பொலிஸார் தேடுதல் நடவடிக்கையின் பின்னர் எதிரியை கைது செய்து தன்னை மீட்டதாக மன்றில் தெரிவித்தார். (ம)

## பன்முகப்படுத்தப்பட்ட நிதியில் புனரமைப்பு வேலைத் திட்டங்கள்

(மல்லாவி)

பன்முகப்படுத்தப்பட்ட நிதிமூலம் மாந்தை கிழக்கு பிரசேதத்திற்கு உட்பட்ட கொல்லவிளாங்குளம் பஸ்தரிப்பிடம், பாலிநகர் பொதுச் சந்தையின் மலசல கூடம்,செல்வபுரம் சுஜாத் முன்பள்ளி சுற்றுவேலி என்பன புனரமைக்கப்படவுள்ளதாக மாந்தை கிழக்கு பிரதேச சபையின் தவிசாளர் அ.தனிநாயகம் தெரிவித்துள்ளார்.

தமிழ்த் தேசிய கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் செல்வம் அடைக்கலநாதன் மூலம் மாந்தை கிழக்கு பிரதேசத்திற்கு பிரதேச சபையின் உறுப்பினர்களின் கோரிக்கைக்கு அமைவாகவே மேற்குறித்த வேலைத்திட்டங்களுக்கு நிதி கிடைக்கப் பெற்றதாக அவர் மேலும் தெரிவித்துள்ளார். (ம-15)

## தண்டவாளங்களை திருடிய நபருக்கு கடூழிய சிறை

மாங்குளம் இந்துபுரம் பகுதியில் ரயில்வே திணைக்களத்திற்கு சொந்தமான 77 ஆயிரம் ரூபா பெறுமதியான தண்டவாளங்களை களவாடி எடுத்துச் சென்றதாக கடந்த ஜூலை மாதம் 4 ஆம் திகதி அன்று அரச சொத்துக்கள் கட்டளைச் சட்டத்தின் கீழ் ஆஜர்படுத்தப்பட்ட இருவருக்கு தலா ஒருவருட கடூழிய சிறைத் தண்டனை வழங்கி முல்லைத்தீவு மாவட்ட நீதிபதி மாணிக்கவாசகர் கணேசராஜா தீர்ப்பளித்துள்ளார்.

எதிரிகள் இருவரும் நேற்று முன்தினம் தமது குற்றத்தை ஒப்புக் கொண்டதையடுத்தே இத்தீர்ப்பு வழங்கப்பட்டுள்ளது. அத்துடன் தண்டவாளங்கள் அரசுடைமையாக்கப்பட்டுள்ளன.

மேற்படி தண்டவாளங்களை டிமோபாட்டா வாகனத்தில் களவாக இரவுநேரம் ஏற்றிக் கொண்டிருந்த வேளையில் மாங்குளம் பொலிஸார் இரவு ரோந்து நடவடிக்கையின் போது இருவரையும் கைது செய்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (அ-ம)

## முறிகண்டி பிள்ளையார் ஆலயம் புனர்நிர்மாணம்

(முல்லைத்தீவு)

முல்லைத்தீவு மாவட்ட நீதிமன்ற நியாயாதிக்கத்திற்குட்பட்ட முறிகண்டிப் பிள்ளையார் ஆலயம் புனர்நிர்மாணம் செய்யப்பட்டு உயர் இந்து ஆலயப் பகுதியாக அமைக்கப்படவுள்ளது.

இக்கட்டட நிர்மாணப் பணிகள் 3 கட்டங்களாக நடைபெற இருப்பதுடன் கோவில் அமைந்திருக்கும் பகுதிக்கு எதிர்ப்புறத்தில் அதாவது ஏ-9 பாதையின் மறுபுறத்தில் கடை கள், கழிவறை வசதிகள் மற்றும் தங்குமிட வசதிகள் என்பன ஏற்படுத்தவும் முடிவு செய்யப்படவுள்ளன.

அங்குள்ள சிவில் அமைப்புகள் இதற்கான நடவடிக்கையை கிளிநொச்சி பாதுகாப்பு படைப்பிரிவு தளபதியை சந்தித்து மேற்கொண்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ம)

## கசிப்பு உற்பத்தியில் ஈடுபட்ட மூவருக்கு அபராதம்



மாங்குளம், மல்லாவி, புதுக்குடியிருப்பு பகுதிகளில் பெருமளவு கசிப்பு உற்பத்தியில் ஈடுபட்டதுடன் கசிப்பு உற்பத்தி செய்யப்பயன்படுத்தப்படும் உபகரணங்களையும் வைத்திருந்ததாக குற்றஞ் சாட்டப்பட்ட 3 நபர்களுக்கு தலா ஒரு இலட்சம் தண்டப்பணமாக 3 இலட்சம் ரூபா தண்டப்பணத்தை செலுத்துமாறு முல்லைத்தீவு மாவட்ட நீதிபதி மாணிக்கவாசகர் கணேசராஜா உத்தரவிட்டுள்ளார். தண்டப்பணம் செலுத்த தவறின் ஒருவருட கடூழியச் சிறைத்தண்டனை விதிக்கப்பட்டுள்ளது.

இம் மூன்று வழக்குகளிலும் குடும்ப பெண்களே ஈடுபட்டதாக பொலிஸார் தெரிவித்ததுடன் தமது பிள்ளைகளையும் இத் தொழிலில் ஈடுபடுத்த முயற்சிப்பதாக மன்றில் குறிப்பிட்டனர்.

பெருமளவு கசிப்பு மற்றும் உபகரணங்களை அழித்து விடுமாறும் நீதவான் உத்தரவிட்டுள்ளார்.(அ-ம)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எவனாவது உன்னை ஒருமுறை காட்டிக்கொடுத் தால் அது அவன் குற்றம்.

*– ருமேனியப் பழமொழி*

வலம்புரி
T.P : 021 567 1530
website : www.valampurii.lk

# ஓ! தமிழ்த் தலைவர்களே! உட்பகை கொண்டீரானால்! செருப்பே சிம்மாசனம் ஏறும்!

எங்கள் வாழ்கையில் உட்பகை, வெளிப்பகை என்ற இரு விடயங்கள் மிகவும் முக்கியமானவை.

உட்பகை என்பது நாமே நமக்கு எதிராக இருப்பது. வெளிப்பகை என்பது எம்முடன் மற்றவர் பகைப்பது.

இந்த இரு விடயங்கள் பற்றியும் தெளிவாகச் சிந்திக்க வேண்டிய கட்டாய தேவை எங்கள் தமிழினத் துக்கு ஏற்பட்டுள்ளது.

இந்தச் சிந்தனை இல்லாதவரை தமிழ் இனம் மீட்சி பெறுவதற்கான வாய்ப்பு அறவே இல்லை யெனலாம்.

ஈழத்தமிழ் இனத்தைப் பொறுத்தவரை விடு தலைப் போராட்டத்தின் தோல்வி என்பது உட்பகை யால் ஏற்பட்டதே.

இப்போது கூட, தமிழ் அரசியலில் உட்பகை தாராளமாக உள்ளதென்பதில் மாற்றுக் கருத்துக்கு இடமில்லை. தமிழ்மக்கள் சொல்லொணாத் துன் பங்களை அனுபவித்து நிற்கின்ற இந்தவேளை யிலும் பதவியாசையும், பதவி மோகமும் கழுத் தறுப்புக்கு வழி வகுக்கின்றன.

இந்த கழுத்தறுப்புப் போட்டிகள் எங்களிடம் இருக்கக் கூடிய தர்மத்தை அழித்துவிடும்.

இந்த உண்மையைப் புரிந்து கொள்வது அவசியம். உட்பகையால் இலக்கை அடைய முடியும் என்று பலர் கற்பனை செய்கின்றார்கள். உண்மையில் உட்பகை தர்மத்தை அழிக்கிறது. தர்மம் அழிந்து போனால் அது அழித்தவனையும் அழிக்கும் என்பது மட்டுமல்ல, அழிந்த தர்மத்தை மீட்க வேண்டும் என விசுவாசமாக நினைத்துப் போராடுகின்றவர்களைக் கூட, தர்மத்தின் அழிவு தாக்கும் – வேதனைப்படுத்தும் இதுவே யதார்த்தம்.

பாரதத்தில் தசரதனுக்கு வீட்டுக்குள் பகை யிருந்தது அது உட்பகை.

இராமனுக்கு இராவணன் வெளிப்பகை. ஆனால் இராம சேனைக்குள் நிறைந்த ஒற்றுமை.

தசரதனுக்கு ஏற்பட்ட உட்பகையால், தசரதன் என்ற மாபெரும் தர்மத்தின் தலைவன் அழிந்து போகிறான். அதை அழித்த அவன் மனையாள் கைகேயி விதவைக் கோலம் பூண்டு அந்தப்புரத்தைவிட்டு அகல முடியாமல் வெந்து வேதனைப்படுகிறாள்.

கூடவே பெற்றுவளர்த்த மைந்தன் பரதன் தன்தாய் மீது கொண்ட அன்பை அடியோடு அழித்து வெறுப்புக் கொள்கிறான்.

ஈற்றில் நடந்தது என்ன? 14 ஆண்டுகள் அயோத்தி மாநகரின் சிம்மாசனத்தில் செருப்பே இடம்பிடித் திருந்தது.

அட ! அது இராமனின் செருப்பல்லவா? என்று நீங்கள் கேட்கலாம். இராமனாயினும் அரியணை யில் இருப்பது செருப்பு என்பதை மறுக்க முடியுமா?

தசரதன் இருந்த ஆசனத்தில் செருப்பு இருப்பது என்பது உட்பகையால் நிகழ்ந்ததல்லவா?

அதேநேரம் வெளிப்பகை இராமனுக்கு வெற் றியைக் கொடுத்தது. இராவணனை முடித்துக் கட்டியது. இராமர் சேனையிலிருந்த ஒற்றுமையும் இராவணனின் தர்ம நிந்தையும் இராவணனை அழித்தது. இது பாரதத்தில் நடந்த கதை.

ஆனால் இங்கோ! எங்கள் தமிழ் இனத்திற்கு உட்பகையும் வெளிப்பகையும் ஒன்றாகச் சேர்ந்து அழிப்பை இரட்டிப்பாக்கிறது.

ஓ! பெருமை மிக்க தமிழ்த் தலைவர்களே! உட்பகையை வேரறுங்கள். கழுத்தறுப்பை நிறுத்திக் கொள்ளுங்கள். எங்கள் மக்களின் உன்னதமான வாழ்வு என்பதை மட்டும் நினைத்துக் கொள்ளுங்கள். தர்மம் தழைக்கும். அரியணை விரைவில் கிடைக்கும்.

இது தர்மத்தின் பெயரால் நாம் கூறும் சத்திய வாக்கு. ஏற்றிடுக!

# நிரந்தர சமாதானத்தை பாதுகாக்க மக்களின் ஒத்துழைப்பு அவசியம்

## மகிந்த ஹத்துருசிங்க தெரிவிப்பு

(யாழ்ப்பாணம்)

கஷ்டப்பட்டு-பெற்ற நிரந்தர சமா தானத்தை பாதுகாத்துக் கொள்வ தோடு மீண்டும் இந்த நாட்டில் பயங்கர வாதம் உருவாகாமல் தடுக்க அனை வரும் ஒத்துழைப்பு வழங்க வேண்டு மென யாழ்.மாவட்ட இராணுவக் கட் டளைத் தளபதி மேஜர் ஜெனரல் மகிந்த ஹத்துருசிங்க தெரிவித்துள்ளார்.

இலங்கை இராணுவத்தின் 513 ஆவது படைப் பிரிவின் கட்டுப்பாட்டின் கீழிருந்த 39 வீடுகள் மற்றும் காணி கள் அதன் உரிமையாளர்களிடம் யாழ். சுன்னாகம் பகுதியில் வைத்து நேற்று கையளிக்கப்பட்டது.

இந்த நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் மேற் கண்டவாறு தெரிவித்தார். அங்கு அவர் மேலும் தெரிவிக்கையில்,

இந்த நாட்டில் மீண்டும் இனங் களுக்கிடையில் பிரிவினைகளையும் முரண்பாடுகளையும் ஏற்படுத்தும் நோக்குடன் தேவையில்லாத வதந்தி களைப் பரப்பும் நடவடிக்கைகளில் சிலர் ஈடுபட்டு வருகின்றனர். அவர்களின் பொய்யான பரப்புரைகளை நம்பி மக் கள் ஏமாந்துவிடக் கூடாது.

யுத்தம் காரணமாக பாதுகாப்பினைக் கருத்தில் கொண்டு பொதுமக்களின் காணிகள் மற்றும் வீடுகளில் இராணு வம் உள்ளிட்ட படையினர் கடந்த காலத் தில் அதிகளவில் இருந்தனர் என்பது உண்மைதான். ஆனால் கடந்த 2009 ஆம் ஆண்டு யுத்தம் முடிவிற்கு கொண்டு வரப்பட்ட பின்பு கடந்த நான்கு வருடங் களுக்குள் யாழ்.மாவட்டத்தில் மட்டும் சுமார் 13 ஆயிரம் இராணுவத்தினர் குறைக்கப்பட்டுள்ளனர்.

கடந்த 2010 ஆம் ஆண்டு சுமார் 26 ஆயிரம் இராணுவத்தினர் இங்கு நிலை கொண்டிருந்தனர். ஆனால் தற்போது 13 ஆயிரத்து 100 இராணுவத்தினர் மட்டும் தான் இங்கு உள்ளனர்.

இதுதவிர தமிழீழ விடுதலைப் புலி களின் கட்டுப்பாட்டின் கீழ் கடந்த காலங் களிலிருந்த வீடுகள் மற்றும் காணிகள் பொதுமக்களின் பாதுகாப்பு கருதி இராணு வத்தினர் பயன்படுத்திவந்தனர்.

ஆனால் தற்போது அந்தக் காணி கள், வீடுகள் உட்பட பொதுமக்களின் சொத்துக்கள் அனைத்தும் விடுவிக்கப் பட்டுவருகின்றன.

எனவே நாட்டில் ஏற்பட்ட சமாதானத் தைப் பாதுகாப்பதோடு மீண்டும் இந்த நாட்டில் பயங்கரவாதம் உருவாக இட மளிக்கக் கூடாது எனவும் அவர் மேலும் தெரிவித்தார். (செ-6)

# திறப்புவிழா

(சாவகச்சேரி)

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பிரதேச அலுவலகமும், தமிழரசுக் கட்சியின் கிளை அலுவலகமும் இன்று சனிக்கிழமை காலை 9 மணிக்கு தென் மராட்சி அமைப்பாளர் க.அருந்தவபாலன் தலைமையில் சாவகச்சேரி நகரத்தின் மத்தியில் திறந்து வைக்கப்படவுள்ளது.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினர் களாக யாழ்.மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் மாவை.சேனாதிராஜா உட்பட தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பாராளு மன்ற உறுப்பினர்களும் கலந்து கொள்ள வுள்ளனர்.

இதில் ஆர்வலர்களும், பொது மக்களும் கலந்து கொள்ளலாம் என ஏற்பாட்டாளர் த.சுதர்சன் அறிவித்துள் ளார். (செ-9, 29)

# உப தவிசாளர்கள் ஆளும் கட்சியில் இணைவு

(கரவெட்டி)

வடமராட்சி கரவெட்டி பருத்தித்துறை பிரதேச சபையின் உப தவிசாளர்கள் அரசகட்சியில் இணைந்து கொண்டுள்ள னர்.

இதன் பிரகாரம், பருத்தித்துறை பிர தேச சபை உப தவிசாளர் லோகசிங்கம், கரவெட்டி பிரதே சபை உப தவிசாளர் சாந்தசொரூபன் ஆகிய இருவருமே நேற்று வெள்ளிக்கிழமை அரச கட்சியு டன் இணைந்துள்ளனர்.

மேற்படி இரு பிரதேச சபைகளும் கூட்டமைப்புக்கட்சியின் பெரும்பான்மை உறுப்பினர்களைக் கொண்டு இயங்கி வருகின்றது.

இந் நிலையிலே குறித்த இரு உப தவிசாளர்களும் அரசாங்கக் கட்சிக்கு மாறியுள்ளனர். (செ-11)

# சிறுவர்களுக்கான மாபெரும் போட்டி

## இந்துவாக வாழ்வோம்

நல்லைக் கந்தப்பெருமான் உற்சவத்தை முன்னிட்டு யாழ்ப்பாணம் சின்மயா மிஷன் வழங்கும் கேள்வி பதில்கள்

**23.08.2013க்கான வினாவும் விடையும்:-**

**வினா:-** ஐந்து விதமான யாகங்கள் (கடமைகள், யக்ஞங்கள்) எவை?

**விடை:** **பிரம்ம யக்ஞம்:-** வேதங்களையும் தத்துவங்களையும் அவற்றைப் பேணுகின்ற ரிஷிகளையும் பாதுகாத்தல்

**தேவ யக்ஞம்:-** முப்பத்துமூன்று கோடி தேவர்களையும் வணங்குதல் (இயற்கையைப் பேணுதல்)

**பித்ரு யக்ஞம்:-** பாரம்பரியத்தையும் கலாசாரத்தையும் எமக்குத் தந்த நம் முன்னோர்களைப் போற்றுதல்

**மனுஷ யக்ஞம்:-** சமுதாயத்தில் இருக்கக்கூடிய மனிதர்களை மதித்து அவர்களுக்கு அன்பாக இருந்து உதவி செய்தல்

**பூதயக்ஞம்:-** மரங்கள், பறவைகள், விலங்குகள் போன்ற ஏனைய ஜீவராசிகளுக்கு அன்பு செய்தல், ஆதரவளித்தல்

**24.08.2013: வினா:-** நாம் ஏன் சைவ உணவு உண்ணவேண்டும்?

விடை நாளை...

மேலே தரப்பட்டுள்ள கேள்வி விடைகளை ஒரு அப்பியாசப் புத்தகத்தில் ஒட்டி அல்லது எழுதி எதிர்வரும் செப்டெம்பர் மாதம் முதலாம் திகதி (01.09.2013) நண்பகல் 12 மணிமுதல் பிற்பகல் 4 மணிக்கு இடைப்பட்ட நேரத்தில் நல்லூர் மகேஸ்வரன் மணி மண்டபத்தில் கையளிக்கும் போது துணுக்குகளில் வரும் கேள்விகளுக்கு சரியான பதிலைச் சொல்லும் அனைவருக்கும் பெறுமதியான பரிசில்கள் வழங்கப்படும். 18 வயதிற்குட்பட்டவர்கள் மட்டும் பங்குபற்றலாம்.

**சின்மயா மிஷன்**
**யாழ்ப்பாணம்**

இல.9, செட்டித்தெரு ஒழுங்கை,
நல்லூர்.

# ஸ்ரீ அம்மா பகவானின் மகா வாக்கியங்கள்



உங்களுடைய பங்கு அந்தத் தெய்வத்தின் திட்டத்தைச் செயற்படுத்துவதுதான். அவ்வளவுதான். நீங்கள் ஒவ் வொருவரும் ஒரு குறிப்பிட்ட காரணத்திற்காகவே பிறவி எடுத்துள்ளீர்கள். நீங்கள் செய்யவேண்டியது என்ன என்பதை உங்களால் கண்டுபிடிக்க முடியும்.

அதை நீங்கள் செய்வதுதான் மிகவும் சிறந்தது. உங் களுக்கு எந்தச் செயலைச் செய்யுமாறு கொடுக்கப் பட்டுள் ளது என்பது முக்கியமல்ல. உங்களுக்காக நிர்ணயிக்கப்பட்ட செயலை நீங்கள் செய்தால் உங்களுக்குள் ஆனந்தம் பெருக்கெடுக்கும்.

# சுவாமி விவேகானந்தரின் சிந்தனைத்துளிகள்

## நல்லதைப் பேசுங்கள்!



உலக இயந்திரத்தின் சக்கரங்களில் இருந்து தப்பி ஓட நினைக்காதீர்கள். அதன் உள்ளே நின்று கொண்டு கடமையை செய்து கர்மயோகியின் இரகசியத்தைக் கற்றுக்கொள்ளுங்கள்.

சூழ்நிலைக்கு ஏற்ப வாழ்வை திருத்தி அமைத்துக் கொள்வதுதான் வெற்றிகரமான வாழ்விற்குரிய முழுமையான இரகசியம்.

பிரதிபலன் எதையும் எதிர்பார்க்காமல் உலகிற்குச் செலுத்தும் ஒவ்வொரு நல்லெண்ணமும் நமது கர்மச்சங்கிலி இணைக்கும் கண்ணி ஒன்றை உடைத்து எறிகிறது. இதனால் பிறவித்தளை அறுபடுகிறது.

எப்போதும் புனிதமான நல்ல எண்ணங்களைச் சிந்தியுங்கள். பிறருக்குப் பயன்படும் நல்ல விடயங்களைப் பேசுங்கள். நல்ல பணிகளில் ஈடுபட்டு உலகிற்கு நன்மை செய்யுங்கள்.

சிந்தனை, சொல், செயல் மூன்றும் ஒன்றாக விளங்கினால் உலகையே ஆட்டிவைக்கமுடியும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# வலுவான நிலையில் ஆஸி

இங்கிலாந்து, அவுஸ்ரேலிய அணிகளுக்கிடையிலான ஆஷஷ் தொடரின் 5ஆவது டெஸ்ட் போட்டியின் இரண்டாம் நாள் முடிவில் அவுஸ்ரேலிய அணி முன்னிலையில் காணப்படுகிறது.

4 விக்கெட்டுக்களை இழந்து 307 ஓட்டங்களைப் பெற்றிருந்த நிலையில் இரண்டாம் நாளை ஆரம்பித்த அவுஸ்ரேலிய அணி 9 விக்கெட்டுக்களை இழந்து 492 ஓட்டங்களைப் பெற்றுத் தனது இனிங்ஸை இடைநிறுத்தியது. ஆரம்பத்திலேயே பீற்றர் சிடிலை இழந்த அவ்வணி, அதன் பின்னர் வேகமாக ஆடி ஓட்டங்களைக் குவிக்க முயற்சித்தது.

துடுப்பாட்டத்தில் அவுஸ்ரேலிய அணி சார்பாக ஷேன் வொற்சன் 176 ஓட்டங்களையும், ஸ்டீவன் ஸ்மித் ஆட்டமிழக்காமல் 138 ஓட்டங்களையும், றயன் ஹரிஸ் 33 ஓட்டங்களையும், பிரட் ஹடின் 30 ஓட்டங்களையும் பெற்றனர்.

பந்துவீச்சில் இங்கிலாந்து அணி சார்பாக ஜேம்ஸ் அன்டர்சன் 4 விக்கெட்டுக்களையும், கிறேம் ஸ்வான் 2 விக்கெட்டுக்களையும், ஸ்ருவேர்ட் ப்ரோட், கிறிஸ் வோக்ஸ், ஜொனதன் ட்ரொட் ஆகியோர் தலா ஒரு விக்கெட்டையும் கைப்பற்றினர்.

அதன் பின்னர் தனது முதலாவது இனிங்ஸை ஆரம்பித்த இங்கிலாந்து அணி இரண்டாம் நாள் முடிவில் விக்கெட்டுக்களை இழக்காது 32 ஓட்டங்களைப் பெற்றுள்ளது.

இலண்டன் ஓவல் மைதானத்தில் இடம்பெறும் இப்போட்டியில் நாணயச்சுழற்சியில் அவுஸ்ரேலிய அணி வெற்றிபெற்று முதலில் துடுப்பெடுத்தாடியமை குறிப்பிடத்தக்கது.

# சச்சினின் ஓய்வுக்கு அஜ்மலா காரணம்?



கிரிக்கெட்டின் சாதனை சிகரம்' என்று அழைக்கப்படும் இந்தியாவின் சச்சின் டெண்டுல்கர் சர்வதேச ஒரு நாள் போட்டியில் இருந்து ஓய்வுபெறும் முடிவுக்கு தள்ளப்பட்டதற்கு தானே காரணம் என்று பாகிஸ்தான் சுழற்பந்து வீச்சாளர் சயீத் அஜ்மல் கூறியுள்ளார்.

அவர் அளித்த ஒரு பேட்டியில்,

'டெண்டுல்கர் ஒரு நட்சத்திர வீரர். கிரிக்கெட்டில் ஒட்டு மொத்தமாக சுமார் 50 ஆயிரம் ஓட்டங்களை குவித்துள்ளார்.

2011ஆம் ஆண்டு உலக கிண்ண அரை இறுதியில் டெண்டுல்கரின் (85 ஓட்டங்கள்) விக்கெட்டை நான் தான் வீழ்த்தினேன். இது எனது வாழ்க்கையில் மறக்க முடியாத தருணமாகும். அதன் பிறகு 2012ஆம் ஆண்டு மார்ச் 18ஆம் திகதி நடந்த ஆசிய கிண்ணக் கிரிக்கெட்டிலும் அவரது விக்கெட்டை (52 ஓட்டங்களில்) நான் கைப்பற்றியிருந்தேன். ஒரு நாள் போட்டியில் இதுதான் அவரது கடைசி ஆட்டமாகும். இந்த ஆட்டத்தில் அவர 'தூஸ்ரா' வகை பந்து வீச்சில் தடுமாறினார். உடனே அணித் தலைவர் மிஸ்பா உல்ஹக் என்னிடம், அவரை ஸ்லிப்பில் கேட்ச் செய்து தூக்கி விடலாம் என்று கூறினார். இதையடுத்து யூனிஸ்கான், 'ஸ்லிப்' பீல்டிங்குக்கு மாற்றப்பட்டார். எங்களது திட்டப்படியே உலகின் தரம் வாய்ந்த துடுப்பாட்ட வீரரான அவர ஸ்லிப்பில் விக்கெட்டை இழந்தார். இதுபோன்ற எனது சிறந்த பந்து வீச்சே அவரை ஒரு நாள் போட்டியில் இருந்து வெளியேற நிர்ப்பந்தப் படுத்தியது' என்றார்.

# சாய்னாவை தாக்கி ஜுவாலா கருத்து

இந்தியன் பூப்பந்தாட்ட லீக் போட்டிக்காக வீரர், வீராங்கனைகள் ஏலம் விடப்பட்டபோது முன்னாள் உலக மற்றும் ஒலிம்பிக் சம்பியனும், சமீபத்தில் சர்வதேச போட்டியில் இருந்து ஓய்வு பெற்றவருமான இந்தோனேஷியாவின் தவுபிக் ஹிதாயத்தை ரூ.9 லட்சத்திற்கு ஐதராபாத் ஹாட்ஷாட்ஸ் அணி வாங்கியது. சிறிய தொகை கிடைத்ததால் அதிருப்திக்குள்ளான ஹிதாயத்,

'போட்டி அமைப்பாளர்கள் வெளிநாட்டு வீரர்களை சரியான முறையில் வழி நடத்தவில்லை. ஏலத்தில் வெளிநாட்டு வீரர்களை விட இந்திய வீரர்களுக்கே முன்னுரிமை அளிக்கப்பட்டு, அதிக தொகைக்கு ஏலம் விடபபட்டுள்ளனர். போட்டி அமைப்பாளர்கள் உலக தரவரிசையை கவனத்தில் எடுத்துக் கொள்ளவில்லை. இதுவே எனது முதலும், கடைசி இந்திய பூப்பந்தாட்ட போட்டியாகும் என்று கூறினார்.

இதுபற்றி ஐதராபாத் அணியின் தலைவர் சாய்னா கூறுகையில்,

'உலகின் முதன்நிலை வீரர் லீ சோங் வெய் அதிகபட்சமாக ரூ.86 லட்சத்திற்கு ஏலம் போனார். இதில் எந்த தவறும் இருப்பதாக தெரியவில்லை. அதே நேரத்தில் ஹிதாயத் இப்போது ஓய்வுபெற்றுவிட்டார். அதனால் அவர் அதிக தொகையை பெறமுடியாது என்பதை ஏற்றுக்கொள்ள வேண்டும். இது போன்று பேசுவது எதிர்மறையானது' என்றார்.

இந்தநிலையில் இந்த விடயத்தில் சாய்னாவை சக இந்திய வீராங்கனையும், டில்லி ஸ்மாஷர்ஸ் அணியின் நட்சத்திர வீராங்கனையுமான ஜுவாலா கட்டா கடுமையாக விமர்சித்துள்ளார். 'டுவிட்டர்' இணையத்தளத்தில் ஜுவாலா கட்டா வெளியிட்டுள்ள கருத்தில், 'உலகின் சிறந்த வீரர்களில் ஹிதாயத்தும் ஒருவர். ஓய்வுபெற்று விட்டார் என்பதற்காக அவரது கருத்தை நிராகரிக்க கூடாது. அவருக்கு உரிய மரியாதை அளிக்காமல், இப்படி யாராவது பேசுவார்களா? என்பது தெரியவில்லை. உண்மையிலேயே இது வருத்தம் அளிக்கிறது.

விளையாட்டில் நீங்கள் எப்படி உயர்ந்த இடத்திற்கு வந்தீர்கள் என்பது ஒரு பொருட்டே அல்ல. சக வீரர்களின் உணர்வுகளை புரிந்து கொள்ள வேண்டும். ஓய்வுபெற்றுவிட்டார் என்பதற்காக அவரது சாதனைகளை புறந்தள்ளி விட முடியுமா? அவர் எப்போதுமே உலகின் தலைச்சிறந்த வீரர்களில் ஒருவர் தான். நான் இங்கு பணத்தை பற்றி பேசவில்லை. மதிப்பு கொடுப்பது குறித்து தான் சொல்கிறேன்' என்று ஜுவாலா சாடியுள்ளார்.

சாய்னாவின் பெயரை ஜுவாலா கட்டா நேரடியாக குறிப்பிடாவிட்டாலும், அவரைத் தான் மறைமுகமாக தாக்கி பேசியிருக்கிறார்.




ஜுவாலா கட்டா



சாய்னா நேவால்

# லீமனுக்கு அபராதம்



இங்கிலாந்து அணியின் ஸ்ருவேர்ட் ப்ரோட் பற்றி டெரன் லீமன் வெளிப்படுத்திய கருத்திற்காக அவருக்கு அபராதம் விதிக்கப்பட்டுள்ளது. சர்வதேச கிரிக்கெட் சபை இந்த அபராதத்தை விதித்துள்ளது.

ஸ்ருவேர்ட் ப்ரோட் தொடர்பான கருத்துக்கள் ஏற்றுக்கொள்ள முடியாதவை எனத் தெரிவித்துள்ள சர்வதேச கிரிக்கெட் சபை, அவரது போட்டி ஊதியத்தின் 20 சதவீதத்தை அவருக்கு அபராதமாக விதிப்பதாகத் தெரிவித்துள்ளது.

முதலாவது ஆஷஷ் போட்டியில் ஸ்ருவேர்ட் ப்ரோட் துடுப்பெடுத்தாடியபோது அஸ்ரன் ஏகரின் பந்தைத் தட்ட முனைந்தபோது பந்து அவரது துடுப்பில் பட்டு, பிரட் ஹடினின் கையுறைகளில் பட்டு, முதலாவது ஸ்லிப்பில் காணப்பட்ட மைக்கல் கிளார்க்கின் கைகளை அடைந்தது.

ஸ்ருவேர்ட் ப்ரோட்டின் துடுப்பில் பந்து பட்டதைக் கவனிக்காத நடுவர் அதற்கு ஆட்டமிழப்பு வழங்க மறுத்ததோடு, ஸ்ருவேர்ட் ப்ரோடும் மைதானத்தை விட்டு வெளியேறியிருந்தார்.

இந்நிலையில் கருத்துத் தெரிவித்திருந்த டெரன் லீமன், பந்து முதலாவது ஸ்லிப்பிற்குச் சென்ற பின்னரும் மைதானத்தை விட்டு வெளியேறாத ஸ்ருவேர்ட் ப்ரோட் ஓர் ஏமாற்றுக்காரர் எனக் குறிப்பிட்டதோடு, சாதாரணமாக ஆட்டமிழக்கும் போது துடுப்பாட்ட வீரர்கள் நடுவரின் தீர்ப்புக்குக் காத்திருக்காது வெளியேற வேண்டும் என தான் எதிர்பார்ப்பதில்லை எனவும். ஆனால் முதலாவது ஸ்லிப்பிற்குச் சென்ற பின்னர் வெளியேறாமல் விட முடியாது எனக் குறிப்பிட்டார்.

அடுத்த ஆஷஷ் தொடருக்காக இங்கிலாந்து அணி அவுஸ்ரேலியாவிற்குச் செல்லவுள்ள நிலையில், அங்கு வைத்து அவுஸ்ரேலிய இரசிகர்கள் ஸ்ருவேர்ட் ப்ரோட் மீது அழுத்தங்களை வழங்குவார்கள் என எதிர்பார்ப்பதாகத் தெரிவித்த டெரன் லீமன், அழுதபடி ஸ்ருவேர்ட் ப்ரோட் வீடுசெல்ல வேண்டுமெனவும் குறிப்பிட்டிருந்தார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிம்பாவேயை வீழ்த்தியது பாகிஸ்தான்




சிம்பாவே அணிக்கு எதிரான முதலாவது இருபது-20 போட்டியில் பாகிஸ்தான் அணி 25 ஓட்டங்களால் வெற்றிபெற்றது.

சிம்பாவே - பாகிஸ்தான் அணிக்கு இடையிலான முதல் இருபது ஓவர் கிரிக்கெட் போட்டி சிம்பாவே தலைநகர் ஹராரேயில் நேற்று நடைபெற்றது.

பாகிஸ்தான் அணி, சிம்பாவேயில் சுற்றுப் பயணம் செய்து அந்நாட்டு அணியுடன் 2 இருபது -20 ஆட்டம், 3 ஒருநாள் ஆட்டம்



இரு டெஸ்ட் போட்டிகளில் விளையாடுகிறது.

சமீபத்தில் இந்திய அணிக்கெதிரான ஒரு நாள் தொடரில் 5-0 என்ற கணக்கில் படு தோல்வி கண்ட சிம்பாவே, பலம் வாய்ந்த பாகிஸ்தான் அணியை சந்தித்தது.

முதலில் துடுப்பெடுத்தாடிய பாகிஸ்தான் 20 ஓவர்களில் 5 விக்கெட் இழப்பிற்கு 161 ஓட்டங்களைப் பெற்றது.

162 ஓட்டத்தினை பெற்றால் வெற்றி என்ற இலக்குடன் களமிறங்கிய சிம்பாவே 20 ஓவர்களில் 5 விக்கெட் இழப்பிற்கு 136 ஓட்டத் தினை மாத்திரமே பெற்றது. போட்டியின் ஆட்ட நாயகனாக பாகிஸ்தானின் அகமட் சஷாட் தெரிவானார்.



# மீண்டும் களமிறங்க ஆசை -ஜடேஜா



சூதாட்ட அஜய் ஜடேஜாவுக்கு மீண்டும் கிரிக்கெட் மீது ஆசை பிறந்துள்ளது. இவர், ரஞ்சிக் கிண்ணத் தொடரில் விளையாட தயாராக இருக்கிறாராம்.

கடந்த 1992-ல் சர்வதேச ஒருநாள் மற்றும் டெஸ்ட் போட்டியில் முதன்முதலில் களமிறங்கிய இந்திய கிரிக்கெட் வீரர் அஜய் ஜடேஜா 2000-ம் ஆண்டு வரை விளையாடினார்.

42 வயதான இவர் இதுவரை 15 டெஸ்ட் (576 ஓட்டங்கள்), 196 ஒருநாள் (5359 ஓட்டங்கள்) போட்டிகளில் விளையாடி உள்ளார்.

அதன்பின் சூதாட்டப் புகாரில் சிக்கிய இவருக்கு 5 ஆண்டுகள் போட்டியில் விளையாடத் தடை விதிக்கப்பட்டது. இதை எதிர்த்து மேன்முறையீடு செய்த இவருக்கு, 2003-ல் டெல்லி நீதிமன்றம் வழங்கிய தீர்ப்பில் தடை நீக்கப்பட்டு உள்ளூர் மற்றும் சர்வதேச போட்டிகளில் விளையாடலாம் என்று தெரிவிக்கப்படடது.

இருப்பினும் வயது, போர்ம், உடற்தகுதி காரணமாக இந்திய அணியில் அணியில் இடம் கிடைக்கவில்லை. கடந்த 2005ல் ரஞ்சிக் கிண்ணத்துக்கான ராஜஸ்தான் அணியின் அணித்தலைவர் மற்றும் பயிற்சியாளராகக் களமிறங்கினார்.

அதன்பின் 2007-ல், ஹொங்காங் சர்வதேச சிக்சஸ் தொடரில் விளையாடினார். இந் நிலையில் சமீபத்தில் இவர், சென்னையில் நடந்த புச்சிபாபு கிரிக்கெட் தொடரில் அரியானா அணியின் அணித்தலைவராக விளையாடினார்.

இதன்மூலம் ஆறு ஆண்டுகளுக்கு பின், மீண்டும் உள்ளூர் கிரிக்கெட் போட்டியில் பங்கேற்றார். இதனையடுத்து இவர், அடுத்தாண்டு நடக்கவுள்ள ஏழாவது ஐ.பி.எல் கிரிக்கெட் தொடரில் விளையாடுவார் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

இது குறித்து அஜய் ஜடேஜா கூறுகையில், இந்தியாவில் நடக்கும் ஐ.பி.எல் கிரிக்கெட் தொடரில் விளையாடும் எண்ணம் கிடையாது. ஏனெனில் இருபது-20 போட்டியில் விளையாடுவதற்கேற்ப உடற்தகுதி என்னிடம் இல்லை.

டெஸ்ட், ஒருநாள் போட்டிகளில் இருந்து இருபது-20 போட்டி முற்றிலும் மாறுபட்டது. எனவே ஐ.பி.எல் கிரிக்கெட் தொடரின் போது, தொலைக்காட்சி சனலின் நிகழ்ச்சி தொகுப்பாளராகவே தொடர விரும்புகிறேன்.

அதேவேளையின் உள்ளூர் தொடர்களில் ஒன்றான வரலாற்று சிறப்புமிக்க ரஞ்சிக் கிண்ணத் தொடரில் அரியானா அணிக்காக விளையாட விரும்புகிறேன்.

இத்தொடரில் விளையாடுவதற்குரிய தகுதியும், திறமையும் என்னிடம் உள்ளது. வாய்ப்பு கிடைக்கும் பட்சத்தில் இளம் வீரர்களுடன் இணைந்து விளையாட தயாராக உள்ளேன்.

ஆனால் அணியில் தெரிவு செய்யப்படுவது என் கையில் இல்லை. இது, அரியானா அணி நிர்வாகத்திடம் உள்ளது என்றும் புச்சிபாபு தொடர் மூலம், மீண்டும் கிரிக்கெட் போட்டியில் விளையாடியது மகிழ்ச்சி அளிக்கிறது எனவும் கூறினார்.

## பொதுநலவாய...

பிரதமர் தனது வாழ்த்துக்களை தெரிவித்துக் கொண்டதாக இலங்கை வெளிவிவகார அமைச்சு தெரிவித்துள்ளது.

இஸ்லாமாபாத்தில் நேற்று பாகிஸ்தான் பிரதமரைச் சந்தித்த இலங்கை வெளிவிவகார அமைச்சர் ஜி.எல்.பீரிஸ், மாநாட்டில் கலந்து கொள்வதற்கான உத்தியோகபூர்வ அழைப்பை விடுத்ததுடன் பாகிஸ்தான் புதிய பிரதமராக பொறுப்பேற்றமை மற்றும் புதிய அரசாங்கத்திற்கான இலங்கை ஜனாதிபதியின் வாழ்த்துக்களையும் தெரிவித்துக் கொணடார். (செ-11)

## யாழில்...

விளைவித்த மூவரும் ஏனைய குற்றச்சாட்டில் 44 பேருமாக மொத்தம் 146 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர் என்றார் கே.கே.எஸ். அத்தியட்சகர். (அ-4)

## குளத்திலிரு...

மீட்கப்பட்டுள்ளது.

நேற்றுக் காலை கோயிலுக்குச் செல்வதற்காக நீராடுவதற்குச் சென்ற இப்பெண் நீண்ட நேரமாகியும் வீடு திரும்பவில்லை. தேடிச்சென்ற பொழுது அவர் குளத்தில் வீழ்ந்து மரணமாகிக் கிடப்பது தெரிய வந்ததாக உறவினர்கள் கூறினர்.

இதுபற்றி அக்கராயன் பொலிஸ் சாவடியிலுள்ள பொலிஸாருக்கு தெரியப்படுத்தியதைத் தொடர்ந்து அவர்கள் கடற்படையினர் சகிதம் ஸ்தலத்திற்கு விரைந்து சடலத்தை மீட்டனர். (செ-11)

## மாத்திரை...

இதனையடுத்து குழந்தை சிலாபம் வைத்திய சாலைக்கு கொண்டு செல்லப்பட்டு அனுமதிக்கப்பட்ட போதிலும், ஆரம்ப சிகிச்சை பிரிவிலேயே குழந்தை இறந்து போனது என ம்ருத்துவர்கள் தெரிவித்துள்ளனர்.(செ-11)

## நவநீதம்....

மனித உரிமைகள் தொடர்பில் இருக்கும் உண்மையான அன்பில் இலங்கையின் மனித உரிமைகள் பற்றி தேடுவதற்காக நவநீதம்பிள்ளை இலங்கை வருகிறார் என்றால், ஆப்கானிஸ்தான், ஈராக் நாடுகளுக்கு சென்று தற்போதும் நடந்து வரும் விடயங்களை முடிந்தால் தேடிப் பார்க்குமாறு அவருக்கு சவால் விடுகின்றோம் என்றார். (செ-11)

## இராணுவப்....

யாழ்.சுன்னாகம் பகுதியில் நேற்று மாலை இடம்பெற்ற இந்த நிகழ்வில் யாழ். மாவட்ட இராணுவக் கட்டளைத் தளபதி மேஜர் ஜெனரல் மகிந்த ஹத்துருசிங்கவினால் குறித்த வீடுகளுக்கான ஆவணங்கள் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவிடம் வழங்கப்பட்டது. பின்பு அமைச்சரினால் பிரதேச செயலாளர்களிடம் ஆவணங்கள் கையளிக்கப்பட்டன. (செ-6)

# நேரில் ஆராய்வதே....

இலங்கை மீது சர்வதேச ரீதியில் போர்க்குற்ற விசாரணைக்கு வலியுறுத்தப்பட்டு வரும் நிலையில் நவநீதம்பிள்ளை இலங்கைக்கு பயணமாகமுன் ரொய்ட்டர் செய்தி சேவைக்கு மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

இலங்கையில் முப்பது வருடகால யுத்தம் முடிவடைந்துள்ள நிலையில் முதன் முறையாக நாளை ஞாயிற்றுக்கிழமை நவநீதம் பிள்ளை உத்தியோகபூர்வ விஜயமொன்றை மேற்கொண்டு இலங்கைக்கு வரவுள்ளார்.

இலங்கை வரவுள்ள அவர் 30-ம் திகதி வரை நாட்டில் தங்கியிருப்பதோடு ஜனாதிபதி, எதிர்க் கட்சி தலைவர் மற்றும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு பிரதிநிதிகளை சந்திக்கவுள்ளதோடு வடக்கு, கிழக்கு பகுதிகளுக்கும் விஜயம் செய்யவுள்ளார்.

இலங்கையின் மறுசீரமைப்பு நல்லிணக்க செயற்பாடுகளை நேரில் அறிய வேண்டும் எனவும் இலங்கையின் முன்னேற்றம் மற்றும் பொறுப்புக்கூறல் தொடர்பிலும் அறிய வேண்டும் எனவும் ரொய்ட்டர் செய்திச் சேவையுடனான மின்னஞ்சல் உரையாடலில் அவர் தெரிவித்துள்ளார்.

எந்த விடயத்தையும் முன்கூட்டியே கணிக்கவில்லை, விவாதிக்கப்பட வேண்டிய விடயங்கள் பல இருக்கின்றன. சாதகமான அபிவிருத்தி குறித்து பேசப்பட வேண்டியுள்ளது. அதனால் நான் மிகவும் திறந்த மனதுடனேயே செல்கிறேன். அதன் மூலம் எனது சொந்த ஆராய்வில் சீரான மதிப்பீட்டு ஒன்றை மேற்கொள்ள முடிவு செய்துள்ளேன் என்றார் நவிப்பிள்ளை.

2009-ம் ஆண்டு யுத்த நிறைவின் பின்னர் ஐக்கிய நாடுகள் அமைப்பின் பெதுச் செயலாளர் பான் கீ மூன் இலங்கைக்கு விஜயம் செய்திருந்தார்.

அதன் பின்னர் இலங்கைக்கு விஜயம் செய்யும் ஐக்கிய நாடுகள் அமைப்பின் உயர் மட்ட அதிகாரியாக நவநீதம்பிள்ளை கருதப் படுகின்றார்.

புனர்வாழ்வு மற்றும் புனரமைப்பு நடவடிக்கைகள் எவ்வாறு மேற்கொள்ளப்படுகின்றன என்பதனை நேரில் பார்வையிடவும்

நல்லிணக்கப் பணிகள் எவ்வாறு மேற்கொள்ளப்படுகின்றன என்பதனை கண்காணிக்கவும இவருக்கு நல்லதோர் சந்தர்ப்பம் கிடைத்துள்ளதென அரசியல் அவதானிகள் குறிப்பிட்டுள்ளனனர். (செ-11)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தவறிவிட்டது

ஸ்ரீதுவாரகன் ஆகிய எனது தேசிய அடையாள அட்டை (இல. 903572167V), வாகன சாரதி அனுமதிப் பத்திரம் மற்றும் அடையாள அட்டை என்பன கொக்குவிலுக்கும் யாழ்ப்பாணத்துக்கும் இடையில் தவறவிடப்பட்டுள்ளது. கண்டெடுத்தவர்கள் தயவுசெய்து வலம்புரிக் காரியாலயத்தில் ஒப்படைத்து உதவவும். சன்மானம் வழங்கப்படும்.

## கணக்காளர் / உதவிக்கணக்காளர் தேவை

- அடிப்படைச் சம்பளம் 25,000 இலிருந்து 50,000 வரை தகுதிக்கேற்ப வழங்கப்படும்.
- நேர்முகத்தெரிவுக்கு சகல ஆவணங்களுடனும் அலுவலக நேரத்தில் நேரில் சமூகம் தரவும்.

தொடர்பு கொள்ளவேண்டிய முகவரி :

**ஈஸ்வரபகவான் & கம்பனி**

வரையறுக்கப்பட்ட தனியார் நிறுவனம்

இல. 91, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.

தொலைபேசி இல: **021 222 7603**

(C-4446)

## காணி விற்பனைக்கு

உதய சூரியன் வீதி, உடுவில் கிழக்கு, சுன்னாகத்தில் பரப்பு 2 குளி 2 காணி விற்பனைக்குண்டு.

**தொடர்பு : பொ.மகேந்திரராசா**

பலாலி வீதி, ஊரெழு கிழக்கு, சுன்னாகம்.

(3675)

## கடை வாடகைக்கு

திருநெல்வேலி MPCS இற்கு அருகாமையில் ஆடியபாதம் வீதி திருநெல்வேலியில் அமைந்துள்ள கடை வாடகைக்கு உண்டு.

**தொடர்பு: 0773606835**

(3672)

## காணி விற்பனைக்கு

சுன்னாகம் மயிலணியில் முத்துமாரி அம்மன் கோவிலுக்கு (வடலி அம்மன்) அண்மையில் சைவச் சுற்றாடலில் அமைந்துள்ள 3 பரப்பு 10 குளி காணி விற்பனைக்கு உண்டு.

**தொடர்பு: 0772786751**

(3677)

## வேட்பாளருக்கு...

சபைத் தேர்தலில் யாழ்.மாவட்டத்தில் போட்டியிடும் இரண்டு வேட்பாளர்களுக்கே இனம்தெரியாத நபர்களினால் அச்சுறுத்தல் விடுக்கப்பட்டுள்ளதாக சுன்னாகம் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.தேர்தலில் போட்டியிடக்கூடாது. அதிலிருந்து விலகுமாறு தம்மை அச்சுறுத்தியதாக முறைப்பாட்டில் வேட்பாளர்கள் தெரிவித்துள்ளனர்.

இதேவேளை, ஜனநாயக கட்சியின் முதன்மை வேட்பாளர் மீது இனந்தெரியாத நபர்கள் அண்மையில் தாக்குதல் மேற்கொண்டிருந்தனர் என்பது குறிப்பிடத்தக்கது.(செ-6)

## பிரான்ஸ் செல்லும் பயணிகளுக்கு



யாழ் மக்களுக்காக 24 மணித்தியாலய சேவையை விஸ்தரித்துள்ளோம்

கொழும்பு - பிரான்ஸ் Colombo-france **93000/=**

RTN (மாதாந்த கொடுப்பனவுமுறையில்) **9380/=** HNB

**Nation Popular Travels & Tours**

#128,Brown Road, Jaffna

**0214 920 920**

(C-4444)

## Dutch, Deutsch, French



தூதரக பரீட்சைக்கான ஜேர்மன்-Deutsch (டொச்) மற்றும் நெதர்லாந்து- Dutch (டச்) புதிய பிரிவுகள் இவ்வாரம் ஆரம்பமாகின்றன.

- French, Italian, English (A-1 Exam) வகுப்புகளும் நடைபெறுகின்றன.
- வடமாகாணத்தில் அரசாங்க அங்கீகாரம் பெற்று ஜேர்மன் கலாசார நிலையத்தின் அனுசரணையுடன் இயங்கும் ஒரே வெளிநாட்டு மொழிக் கல்வி நிறுவனம் எங்களுடையதே.
- Dutch மற்றும் Deutsch தூதரக பரீட்சைகளில் நீங்கள் சித்தியடைவதை தற்பொழுது நாம் 100% உத்தரவாதப்படுத்துகின்றோம்.
- Audio, Video வசதிகளுடன் குளிரூட்டப்பட்ட வகுப்பறைகள்.

**Vivekananda Academy**

221/1, மின்சார நிலைய வீதி யாழ்ப்பாணம். *(Gov. Reg.No: W/A 76795)*

Tel: 0213216928, 0774842464, 0212220393

(C-4428)



அசத்தலான ஆடிச் சிறப்புத் தள்ளுபடி

## சரவணா ரெக்ஸ்

விடுமுறை நாட்களிலும் வியாபாரம் நடைபெறும்

இல. 01, சிவப்பிரகாசம் வீதி, யாழ்ப்பாணம்.
(Dr. செங்காதரன் மருத்துவமனை முன்பாக)

25.08.2013 ஞாயிற்றுக்கிழமை ஆடித்தள்ளுபடி நிறைவடைகின்றது.

அதிரடி விலைக்கழிவு!

(C-4400)

ACCA THE GLOBAL BODY FOR PROFESSIONAL ACCOUNTANTS

# ACCA

IPS

**Association of Chartered Certified Accountants**

க.பொ.த (உ/த) பரீட்சைக்குத் தோற்றுகின்ற அனைத்துத்துறை மாணவர்களுக்கான ACCA கற்கை நெறிக்கான

## புலமைப் பரிசில் திட்டம் 2012/2013

இன்று வணிகமானது அசுர வேகத்தில் வளர்ச்சியடைந்து வருகின்றது. இவ்வாறாக வளர்ச்சியடைந்து வருகின்ற வணிக உலகில் ACCA அமைப்பானது முக்கிய பங்கு வகிக்கின்றது. ஐக்கிய இராச்சியம், கொழும்பில் தலைமை அலுவலகங்களுடன் இயங்குகின்ற ACCA அமைப்பானது வட மாகாணத்தில் ACCA கற்கைவழிகாட்டல் அலகினை 2009 இல் நிறுவி கௌரவ என்.ரணசிங்க (Head of ACCA) வழிகாட்டலில் மாணவர்களிற்கு கல்விச் செயற்பாடுகளை மேற்கொண்டு வருகின்றது.

இலங்கையின் முதற்தர கற்கையாக கானப்படுவதுடன் 150 நாடுகளில் அங்கீகரிக்கப் பட்டுக் காணப்படுவதனால் அதிகளவான மாணவர்கள் நிதி மற்றும் கணக்கீட்டுக் கற்கையின் நன்மைகளை அனுபவித்து வருகின்றனர். அத்துடன் மாணவர்களுக் குரிய சர்வதேச தர வசதிகள் செய்துகொடுக்கப்படுகின்றன.

ACCA ஆனது சான்றுப்படுத்தப்பட்ட பட்டயக் கணக்காளர்களின் சங்கமாகும். 110 வருடகால அனுபவத்தினையுடைய சர்வதேச ரீதியில் முற்றான அங்கீகாரம் பெற்றுத் திகழும் ஓர் நிதி, கணக்கீட்டு கல்வித் தகைமையாக கருதப்படுகின்றது. உலகில் 150000 அங்கத்தவர்களையும் 500000 மாணவர்களையும், 90 பிராந்திய மற்றும் கிளைகளினூடாக இயங்கி வருகின்றது. இதனால்தான் உலகில் ஒவ்வொரு 6 நிமிடமும் ஓர் அங்கத்தவர் இத்தகைமையை இட்டு விண்ணப்பிக்கின்றார்.

(1) புலமைப் பரிசில் திட்டம்:

ACCA கற்கை நெறிக்காக க.பொ.த (உ/த) பரீட்சைக்கு தோற்றுகின்ற அனைத்துத்துறை மாணவர்களிடமிருந்தும் விண்ணப்பங்கள் கோரப்படுகின்றது. விண்ணப்பிக்கும் வயதெல்லை 25 இற்கு உட்பட்டிருத்தல் வேண்டும்.

(2) பரீட்சை முறை:

இரண்டு பரீட்சை வினாத்தாள்களைக் கொண்டதாக புலமைப்பரிசில் பரீட்சை நடைபெறவுள்ளது.

(i) பொது உளச்சார்பு (1 மணித்தியாலம்)
(ii) பொது அறிவு (1 மணித்தியாலம்)

(3) உறுதிப்படுத்தல்:

பரீட்சைக்குத் தோற்றும் விண்ணப்பதாரி ஒருவர் ஆளடையாளத்தினை உறுதிப்படுத்தும் தேசிய அடையாள அட்டையை அல்லது தபாலக அட்டையினை பரீட்சை மேற்பார்வையாளரிடம் காண்பித்தல் வேண்டும்.ஆள் மாறாட்டம் தண்டனைக்குரிய குற்றமாகும்.

(4) பெறுபேறுகள்:

பரீட்சையானது புரட்டாதி மாத இறுதியில் இடம்பெறுவதுடன் புலமைப்பரிசில் திட்டம், பெறுபேறுகள், விரிவுரைகள் ஆரம்பமாகும் திகதிகள், பரீட்சை முறைகள், ஏனைய விபரங்கள் தபாலூடாக உரிய விண்ணப்பதாரிக்கு சேர்க்கப்படும்.

(5) விண்ணப்பிக்கும் முறை:

மாதிரி விண்ணப்பப்படிவத்திற்கு அமைவாக A4 தாளில் சுயமாகத் தயாரிக்கப்பட்ட விண்ணப்பப்படிவத்தினைப் பூர்த்தி செய்து முடிவுத்திகதியன்றோ அல்லது முன்பாகத் தபாலில் விண்ணப்பிக்க வேண்டும். கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் ACCA கற்கைகளுக்கான புலமைப் பரிசில் திட்டம் 2012/2013 எனக் குறிப்பிடுதல் வேண்டும்.

(6) விண்ணப்பிக்கும் முகவரி:

பதிவாளர்,
ACCA கற்கை வழிகாட்டல் அலகு,
த. பெ. இலக்கம் (P.O Box No): 18,
யாழ்ப்பாணம்.

(7) பரீட்சைகள், விரிவுரைகள் இடம்பெறும் வட மாகாண நிலையங்கள்

- யாழ்ப்பாணம்
- கிளிநொச்சி
- வவுனியா

(8) விண்ணப்ப முடிவுத் திகதி :

**10-09- 2013**

(9) மாதிரி விண்ணப்பப்படிவம் :

அலுவலக உபயோகம் : ☐

(i) முழுப்பெயர் : ....................
(ii) முதலெழுத்துடன் பெயர் : ....................
(iii) தபாலிடல் முகவரி : ....................
....................
....................
(iv) பிறந்த திகதி : ....................
(v) வயது : ஆண்டு ☐ மாதம் ☐ திகதி ☐
(vi) பால் : ஆண் ☐ பெண் ☐
(vii) மின்னஞ்சல் முகவரி : ....................
(viii) தொலைபேசி இல. : ....................
(ix) தேசிய அடையாள அட்டை / தபாலக அடையாள அட்டை இல: ....................
(x) உறவினரல்லாத இருவரது பெயர்கள் : ....................
....................
....................

மேலே தரப்பட்ட விபரங்கள் எனது அறிவுக்கு எட்டியவரை உண்மை என உறுதிப்படுத்துகிறேன்.

திகதி : .................... ....................
கையொப்பம்

(3479)

இப்பத்திரிகை வலம்புரி அன்.கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 24.08.2013 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org